விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 மார்கழி 04 ஞாயிற்றுக்கிழமை (19.12.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 365

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# ஐ.நா. நிபுணர்குழு இலங்கைவர நிபந்தனையுடன் அரசு அனுமதி

## அரசு-ஐ.நா. பரஸ்பரம் அறிவிப்பு

(கொழும்பு)

இலங்கை யுத்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை செய்ய ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு இலங்கைக்கு வருவதற்கு நிபந்தனையுடன் கூடிய அனுமதியை அரசாங்கம் வழங்கியுள்ளது.கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை சந்திப்பதற்காக இந்தக் குழு இலங்கை வரும் என ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் முன்வைத்த சாட்சிகளை ஐ.நா.குழு பார்வையிட வேண்டும்

### சுமந்திரன் எம்.பி. கோரிக்கை



(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் மக்களால் முன்வைக்கப்பட்ட சாட்சியங்களை ஐ.நா. நிபுணர் குழு பார்வையிட வேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வேண்டு (19ஆம் பக்கம் பார்க்க)

## 'நானும் சிறைக்கைதி' ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

யுத்தத்தில் இருந்து நாட்டை விடுவித்த தான் இன்று கண்ணாடி பந்துக்குள் இருக்கும் சிறைக் கைதியாக மாறியுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.அம்பாந்தோட்டை வெலிகத்தேயில் நேற்று (20ஆம் பக்கம் பார்க்க)

வலம்புரியின் 11 ஆவது நிறைவு தினமான நாளை அதிக பக்கங்களுடன் உங்கள்வலம்புரி வெளிவரும்

## இரவில் இராணுவத்தினர் போல் வந்து கதவைத் தட்டினால் திறக்க வேண்டாம்

### பொலிஸார் ஆலோசனை

(வவுனியா)

பாதுகாப்புப் படையினரின் உடையில் இரவில் வந்து யாராவது வீட்டு கதவை தட்டினால் திறக்க வேண்டாம் என வவுனியா மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மக்களுக்கு விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளதாவது,

இராணுவம் எனக் கூறி யாராவது இரவில் வந்தால் யன்னல் வழியாக அவர்களிடம் அடையாள அட்டையினை காண்பிக்குமாறு கேளுங்கள். அதற்கான உரிமை (20ஆம் பக்கம் பார்க்க)

## இனவாதக் கருத்தை வெளியிட்டு போராட்டத்தை தூண்ட வேண்டாம்

### தமிழ்க் கட்சிகள் வேண்டுகோள்

(கொழும்பு)

இனவாதக்கருத்துக்களை வெளியிட்டுதமிழ் மக்களைமீண்டும்போராட்டத்துக்குள் தள்ளிவிட வேண்டாம் என தமிழ்க் கட்சிகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் அளித்த ஜாதிக ஹெல உறுமய வின் நாடாளுமன்ற உறுப்பி (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நாவின் நிபுணர்கள் குழுவை நாட்டுக்குள் அனுமதிக்க கூடாது

### அமைச்சர் விமல் ஆவேசம்



(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழுவினை நாட்டிற்குள் அனுமதிக்கக் கூடாது என வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார். தமிழ்ழ விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்திற்கும் இடையில் நடைபெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்றதாக சுமத்தப்படும் யுத்தக் குற்றச் செயல்கள் (20ஆம் பக்கம் பார்க்க)

NIBM BUILDING COMPETENCIES



A statutory Body under the Ministry of Youth Affairs & Skills Development

ஒளிமயமான எதிர்காலத்திற்கு NIBM வழிகாட்டும்

நாட்டின் நம்பிக்கை வாயந்த உயர் கல்வி நிலையம் வழங்கும் முகாமைத்துவ, தகவல் தொழில்நுட்ப மற்றும் ஆங்கில கற்கை நெறிகள் மூலம் வெற்றிகரமான எதிர்காலத்தில் அடியெடுத்து வையுங்கள்

• மனிதவள முகாமைத்துவத்தில் அடிப்படைக் கற்கை நெறி (ஆங்கிலத்திலும் தமிழிலும்)
• கணனித் தொழில்நுட்பத்தில் சான்றிதழ் கற்கை நெறி
• வியாபார முகாமைத்துவத்தில் சான்றிதழ் கற்கை நெறி
• ஆங்கில மொழியில் சான்றிதழ் கற்கை நெறி

தேசிய வியாபார முகாமை நிறுவனம்
40, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி இல: (021) 222 0360, 61, 62

அனுமதிகள் ஆரம்பமாகியுள்ளன!
முதலில் அனுமதிக்கப்படும் சிலருக்கு 25% கட்டணக் கழிவு.

NIBM Jaffna யாழ்ப்பாணம்

வீட்டிலும் வேலைத்தலத்திலும் இதமான காற்றை இனிதே அனுபவிக்க ...

சிங்கர் எயார்கண்டிஷனர்கள்



• உத்தரவாதம் • விற்பனைக்குப் பிந்திய சேவை • இலகு தவணைக் கொடுப்பனவு

யாழ்ப்பாணம்-ஸ்டான்லி வீதி, ஆஸ்பத்திரி வீதி, சுன்னாகம், நெல்லியடி, சாவகச்சேரி, மானிப்பாய்

SINGER
யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்

# மரணஅறிவித்தல்

## திருமதி கணபதிப்பிள்ளை செல்லம்மா

வளலாய் மேற்கு அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வரணனை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கணபதிப்பிள்ளை செல்லம்மா 17.12.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர்களான பொன்னம்பலம் ஆசைப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் அமரர் ஆறுமுகம் கணபதிப்பிள்ளை (வர்த்தகர்)யின் அன்பு மனைவியும், சிவபாக்கியம் (திருகோணமலை), சரஸ்வதி (கனடா), பாலகிருஷ்ணன் (வளலாய்), தனபாலசிங்கம் (காந்தி-புற்றளை, புலோலி) ஆகியோரின் அன்புச்சகோதரியும் சிவசுப்பிரமணியம் (கனடா), யோகநாயகி (வெள்ளவத்தை), அருந்தவநாயகி (கனடா), நவரத்தினராஜா (பிரான்ஸ்), பாலசிங்கம் (கனடா), சுகுணராஜா (வரணன்), ஸ்ரீஸ்கந்தராஜா(கனடா), ஆனந்தகௌரி (கனடா), சரவணபவானந்தன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் வதனேஸ்வரி (கனடா), சண்முகராஜா (வர்த்தகர், வெள்ளவத்தை), ஸ்ரீகாந்தா (கனடா), ரேணுகா (பிரான்ஸ்), ஜெயந்தி(கனடா), சுகிதரன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும் சபேசன்(கனடா), சதீசன்(கனடா), நிலானி (லண்டன்), மாதுளன்(கனடா), மாதுஜன் (கனடா), ரிஷியன் (பிரான்ஸ்) பிறயன்(பிரான்ஸ்), துவாரகா (கனடா), கர்ஷன் (கனடா), பிரமியா(கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

வரணன்,
அச்சுவேலி.

தகவல்,
சுகுணராஜா(மகன்),
சண்முகராஜா குடும்பம்.

(சி-1852)

# அறியத் தருகிறோம்

பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் விநியோகிக்கப்படும் பல்கலைக்கழக முதல் படிவம் (University First Form) விற்பனை செய்வதற்கு யாழ்.மாவட்ட முகவராக அனுமதி வழங்கியுள்ளது. ஆகவே இனிவரும் காலங்களில் எம்மிடம் படிவங்கள் பெற்றுக் கொள்ளலாம் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

அன்னை புத்தகசாலை
இல.7, ஆஸ்பத்திரி வீதி,
நவீன சந்தை, யாழ்ப்பாணம்.
021 222 9881

(சி-1853)

# வேலை ஆட்கள் தேவை

யாழ்.நகரில் பிரபலமான பிடவை நிறுவனத்திற்கு அனுபவமுள்ள ஆண், பெண் விற்பனையாளர் உடன் தேவை. பழக விரும்புவோரும் விண்ணப்பிக்கலாம். மாநகர சபை எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

✱சிட்டை எழுதுனர் (பில் கிளார்க்) ஆண் வயது 40-55 உடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு:- 0213219658
0773321700

(3268)

# நளின் காட்சியறையில்
## Christmas Offer



Laptop மிகவும் மலிவான விலையில்
CQ 40 dual core - 56,000/-
CQ 620 core 2 duo - 68,000/-
HP G62 core i3 - 79,000/- மட்டுமே.
1 Year HP warranty வழங்கப்படும்.
Microsoft O/S குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.



195/4, Parameswara Junction,
Palaly Road, Thirunelvely.
021 222 1166/ 0777667974

NALIN information technology

(சி-1850)

## வேலையாட்கள் தேவை

பொதி செய்வதற்கு
பெண் பிள்ளைகள்
தேவை.
கூடிய சம்பளம்
வழங்கப்படும்.

(3249)

அல்பா மிக்ஷர்
உடுவில் றோட்,மானிப்பாய்.
0212255278

செல்லா சினிமா [நாதன்ஸ்]
03.12.2010 முதல்
ஆர்யா,ஸ்ரேயா, சந்தானம் நடித்த



சிக்கு புக்கு
காட்சி நேரம்:- 10.30,2.30,6.30,9.30

## நத்தார் விழா

(கொழும்பு)

செவிப்புலன் வலுவற்றோர் புனர்வாழ்வு நிறுவன கிறிஸ்தவக் கழகம் நடத்தும் வருடாந்த நத்தார் விழா இன்று காலை 8.30 மணிக்கு செவிப்புலன் அற்றோர் மண்டபத்தில் நடைபெறும்.

தொடர்ந்து பரிசில் வழங்கும் நிகழ்வுகளும் இடம்பெறும். (சு-7)

## திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

திருவாசக முற்றோதல் நிகழ்வு இன்று காலை 6.00 மணிக்கு அத்தியடி முதலியம்மன் ஆலயத்தில் தம்பசிட்டி அறநெறிப் பாடசாலை அதிபர் பொ.ரட்ணசோதி தலைமையில் இடம்பெறும்.

இதேவேளை தொடர்ந்து மூன்று தினங்கள் இடம்பெறும் திருவாசக முற்றோதலில் நாளையதினம் பழவத்தை காளிகோவிலிலும், நாளை மறுதினம் அல்வாய் முத்துமாரியம்மன் ஆலயத்திலும் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (சு-7)

## 'ஆரோக்கியத்தில் உணவின் பங்கு' நூல் அறிமுக விழா இன்று

(யாழ்ப்பாணம்)

சுகநலக் கல்வியாளர் கா.வைத்தீஸ்வரன் எழுதிய ஆரோக்கியத்தில் உணவின் பங்கு என்ற நூலின் அறிமுக விழா இன்று பிற்பகல் 3.30 மணியளவில் இணுவில் சிவகாமி அம்மன் கோவில் மண்டபத்தில் இடம் பெறும். (ந)

# பாராட்டுக்கள்

க.பொ.த. உயர்தரம் 2010–ல் வரலாற்றுப் பாடத்தினை என்னிடம் கற்று சிறந்த பெறுபேற்றினைப் பெற்ற முல்லை, கிளி.மாவட்ட மாணவர்களான

தேவனா - A, பிரேசில் - A, ரஜிதா - A, விஜிதரன் - A, நிசாந்தினி - A, ரவிக்குமார் - A, ஜெயரூபன் - A, சுரேஸ் - A, தமிழ்ச்செல்வன் - A, கமலினி -A, நவராஜ் -A, கமலதாஸ் -A, சுதர்சினி -A, விமலன் - A, ஆரணி - A

மற்றும் 86 "B" பெறுபேற்றினைப் பெற்ற மாணவர்களையும் மற்றும் இப்பாடத்தில் சித்தி பெற்ற அனைத்து மாணவர்களையும் பாராட்டுகின்றேன். அத்துடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் தொடர்ச்சியாக நான்கு ஆண்டுகளாக என்னிடம் வரலாற்றினைக் கற்ற மாணவர்களே மாவட்டத்தில் முதல் நிலை (1st Rank) பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

* 2007 – போ.நிமலினி – மாவட்ட நிலை – 1
* 2008 – தி.உசாந்தினி – மாவட்ட நிலை – 1
* 2009 – சு.சுதன் – மாவட்ட நிலை – 1
* 2010 – பா.தேவனா – மாவட்ட நிலை – 1

குறிப்பு: Day Class மற்றும் 2011, 2012 மாணவர்களுக்கான க.பொ.த உயர்தர வரலாற்றுப் பாடம் பின்வரும் கல்வி நிலையங்களில் கற்பிக்கப்படுகின்றன. புதிய அனுமதிகளை கல்வி நிலையத்தில் பெற்றுக் கொள்ளவும்.

* NEC கல்வி நிலையம், ஆனைப்பந்தி
* ஸ்ரார் கல்வி நிலையம், சுன்னாகம்
* மொடேன் கல்வி நிலையம், நெல்லியடி
* சுப்றா கல்வி நிலையம், சித்தன்கேணி
* ஆதவன் கல்வி நிலையம், அளவெட்டி
* NEC கல்வி நிலையம், கிளிநொச்சி

"நித்தமும் உங்கள் வெற்றியின் மூலம் வரலாற்றுப் பாடத்தின் வளர்ச்சியினை சிந்திக்கும் உங்கள் உயர்தர வரலாற்று ஆசிரியர்
R.R.ஆனந்தன்"

(3264)

அன்றும் சரி இன்றும் சரி என்றும் சரி
வாடிக்கையாளரின் நன்மதிப்பைப் பெற்ற நிறுவனம்



நல்லூர்
# சரவணா ரெக்ஸ்



தனது புத்தம் புதிய கிளையை இலக்கம் 770, 772
கே.கே.எஸ். வீதி, தட்டாதெரு சந்தி எனும்
முகவரியில் ஆரம்பித்துள்ளது என்பதை
வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

நத்தார், புதுவருடத்தை முன்னிட்டு
புத்தம் புதிய தெரிவில் புதிய டிசைனில்
புதுப்பொலிவு கொண்ட
எமது வியாபார நிறுவனத்தில் 2011 ஆம் ஆண்டிற்கான
புதிதாக இறக்குமதி செய்யப்பட்ட சிறுவர், சிறுமிகள்,
ஆண்கள், பெண்கள் என அனைவரது ஆடைத்
தெரிவிற்கும் ஒரே இடம்

நல்லூர்
சரவணா ரெக்ஸ்
770, 772 கே.கே.எஸ்.வீதி,
தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 0421

முகவரியை மறந்து விடாதீர்கள்

ஏழு நாட்களும் கடை திறந்திருக்கும்

(சி-1851)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ் போதனா வைத்தியசாலையில் புற்றுநோய் கதிர்வீச்சு சிகிச்சைப் பிரிவு

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நான்கு கோடி ரூபா செலவில் கதிர்வீச்சு சிகிச்சைப் பிரிவொன்று அமைக்கப்படவுள்ளது.

வைத்தியசாலையின் புற்றுநோய் சிகிச்சைப் பிரிவின் மேம்பாடு கருதி இந்த குறுந்தூர கதிர்வீச்சு சிகிச்சைப் பிரிவு அமைக்கப்படுகிறது.

சர்வதேச அணுசக்தி அதிகாரசபை, இலங்கை அரசு ஆகியவற்றின் உதவியுடன் இப்பிரிவு அமைக்கப்படவிருப்பதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு தெரிவித்துள்ளது.

சர்வதேச அணுசக்தி அதிகாரசபையினதும் இலங்கை அரசின் நிதிப் பங்களிப்புடனும் இவ்வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. (ஸ்ரீ-2)

# நல்லூர் பிரதேச செயலக சமுர்த்தி வங்கியால் பல்வேறு உதவிகள்

(கொழும்புத்துறை)

நல்லூர் பிரதேச செயலக சமுர்த்தி வங்கியால் நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 258 பயனாளிகளுக்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

குறிப்பாக வாழ்வாதார சந்தைப்படுத்தலுக்கு 55 பயனாளிகளுக்கு 14 இலட்சத்து 3 ஆயிரத்து 437 ரூபாவும் வாழ்வாதார விவசாயத்துக்கு 15 பயனாளிகளுக்கு 2 இலட்சத்து 48 ஆயிரத்து 252 ரூபாவும் கைத்தொழில் ஏற்பாடுகளுக்கு 51 பயனாளிகளுக்கு 9 இலட்சத்து 53 ஆயிரத்து 90 ரூபாவும் மிருக வளர்ப்பு மற்றும் மீன்பிடிக்கு 75 பயனாளிகளுக்கு 7 இலட்சத்து 9 ஆயிரத்து 777 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன.

உட்கட்டமைப்பு வசதியில் 4 கணனிப் பயிற்சி நிலையங்கள் 20 இலட்சம் ரூபா நிதியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன. அத்துடன் பிரியபியச வேலைத்திட்டத்தில் 9 பயனாளிகளுக்கு 9 இலட்சம் ரூபாவும் கொடுக்கப்பட்டுள்ளதாக நல்லூர் பிரதேச செயலக தலைமை சமுர்த்தி முகாமையாளர் தி.சந்திரசேகர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-3-51)

# பொதுக்கூட்டம்

(அல்வாய்)

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியின் விசேட பொதுக்கூட்டம் எதிர்வரும் 27 ஆம் திகதி மாலை 3 மணிக்கு பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் அரசின் ஆயிரம் பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தில் இணைந்து கொள்வது தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கப்படவுள்ளது என பாடசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஸ்ரீ-3-19)

# வாரம் ஒரு தகவல்

## சட்டையும் சங்கடமும்

"சேர்,ரொம்ப நாளாக உங்களை ஒன்று கேட்கவேண்டும் என்று நினைத்துக் கொண்டிருந்தேன்"

"என்ன அது? இப்ப கேளுங்களேன்"

"சமீப காலமாக நீங்கள் ஷேர்ட் போடுவதில்லையே.... வெறும் வேட்டியோடு வெளியில் திரிகிறீர்களே.... அது ஏன்?"

"சட்டை இல்லையென்றால் சங்கடமில்லை"

"இது மகான்கள் சொல்லும் வார்த்தை சேர்"

"உண்மைதான். ஒரு ராஜா எப்பொழுதும் துன்பப்பட்டுக் கொண்டே இருந்தாராம். ஒரு வேதாந்தியைக் கூப்பிட்டு, "என் துன்பம் தீர வழி என்ன?" என்று கேட்டாராம்.

அதற்கு அந்த வேதாந்தி, "உன்னுடைய ராஜ்ஜியத்துக்குள் 'போதும்' என்ற மனமுடைய ஒருத்தனைக் கண்டுபிடித்து அவனுடைய சட்டையை வாங்கிப் போட்டுக் கொள். உன்னுடைய துன்பமெல்லாம் தீர்ந்துவிடும்"என்றாராம்.

"சுலபமான வழியாக இருக்கிறதே"

"அப்படித்தான் அந்த ராஜாவும் நினைத்தார். எங்கெங்கேயோவெல்லாம் தேடினார். கடைசியில் அப்படிப்பட்ட ஒரேயொரு மனிதன் கிடைத்தான். ஆனால் அவனிடம் சட்டையில்லை"

"சிந்திக்க வேண்டிய விடயம்தான் இது. நீங்களும் அந்த மனிதன் மாதிரித்தானா?"

"இல்லை.என்னுடைய கதை கொஞ்சம் வித்தியாசம்"

"எப்படி?"

"ஆரம்பத்தில் நான் சட்டை போட்டுக் கொண்டுதான் இருந்தேன். அதுமட்டுமல்ல..... என்சட்டையை என்கையால் நானே துவைத்துத்தான் போட்டுக் கொள்வேன். மற்றவர்களுக்குச் சிரமம் கொடுக்கமாட்டேன். கல்யாணம் ஆனதற்குப் பின் அதையெல்லாம் என் மனைவி துவைக்க ஆரம்பித்தாள். அதுதான் எனக்கு கஷ்டமாகப் போய்விட்டது. அதற்குப் பின் தான் சட்டையே போடுவதில்லை."

"மனைவிக்குச் சங்கடம் என்பதற்காகவா?"

"இல்லை..... எனக்குச் சங்கடம் ஏற்படாதிருப்பதற்காக"

"என்ன சொல்றீங்க?"

"பொதுவாக சட்டையை எப்பொழுது துவைப்பாங்க? உடம்பிலிருந்து கழற்றிக் கொடுத்ததற்குப் பின்னர் தானே?"

"ஆமாம்"

"இவ அப்படியில்லை சேர். நான் கழற்றிக் கொடுக்க முன்பே துவைக்க ஆரம்பிச்சிடுவா"

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# நாவலர் விழாவும் பரிசளிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

உடுவில் இந்து இளைஞர் மன்றம் நடத்தும் நாவலர் விழாவும் ,பாலர் பாடசாலை மாணவர்களின் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு உடுவில் மேற்கு பாடசாலை மண்டபத்தில் மன்றத் தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலய முன்பள்ளி அபிவிருத்தி உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.குகனேசன், கௌரவ விருந்தினர்களாக மன்ற ஆலோசகர்களான ச.தியாகராசா , சி.தில்லைமகாராசா, த.தேவராஜன்,க.கணேசரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-2-9)

# பலத்த மழையையடுத்து நோய்த்தாக்கம் அதிகரிப்பு

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் தொடர்ந்து பெய்து வந்த பலத்த மழையை அடுத்து பலர் பல்வேறு நோய்களுக்கு இலக்காகியுள்ளனர்.

கடும் குளிரின் தாக்கத்தினால் காய்ச்சல், சளி, இடுப்பு வலி போன்ற நோய்களுக்கு இலக்காகி சிகிச்சை பெற்று வருகின்றனர் . சிறு குழந்தைகள் உட்பட முதியோர் வரை இந்நோய்களுக்கு இலக்காகியுள்ளனர். (ஸ்ரீ-3-10)

# ஒளிவிழாவும் பரிசளிப்பு விழாவும்

(அல்வாய்)

யா/ அல்வாய் வடக்கு றோமன் கத்தோலிக்க பாடசாலையின் ஒளிவிழாவும் பரிசளிப்பு விழாவும் நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு பிலோமினா மண்டபத்தில் பாடசாலை அதிபர் கி.இராஜதுரை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மருதங்கேணி கோட்டக்கல்விப் பணிப்பாளர் க.பொன்னையா கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருத்தினர்களாக முன்னாள் பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவரும் வடமராட்சி ஈழமக்கள் ஜனநாயக்கட்சி அமைப்பாளருமான ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் ,சக்கோட்டை பங்குத்தந்தை வணபிதா ஏ.அகஸ்ரின் , வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் அ. எமிலியாம்பிள்ளை ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஸ்ரீ-3-19)

# இராசி பலன்

19.12.2010
(மார்கழி 4, ஞாயிற்றுக்கிழமை)
திரயோதசி பிற்பகல் 3.09 மணி வரை
கார்த்திகை பிற்பகல் 4.41 மணி வரை
இராகுகாலம் 4.53-6.23 மணி வரை
சுபநேரம் 9.23-10.53 மணி வரை

**மேடம்** காரியத்தில் கண்ணும், கருத்துமாக இருப்பீர்கள், எண்ணங்கள் எளிதில் நிறைவேறும் நாள், குடும்பத்தில் தேவைகள் நிவர்த்தியாகும், வாக்கு மேன்மையுண்டு.

**இடபம்** எந்த வேலையையும் காலம் தாழ்த்தாமல் உடனே செய்ய வேண்டும் என்ற எண்ணம் உருவாகும், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.

**மிதுனம்** நண்பர்களின் தேவைக்காக அலைய வேண்டி வரலாம், பயணத்தால் பலனுண்டு, சயன சுகக் குறையுண்டு, சுப செலவுகள் அதிகரிக்கும்.

**கடகம்** உற்சாகத்துடன் பணி புரிவீர்கள், இல்லத்தாரின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள், பேரும், புகழும் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும்.

**சிங்கம்** தொழிலில் புதிய முன்னேற்றம் காணப்படும், வருமானம், அதிகரிக்கும், ஆரோக்கியமான நிலை அமையும், இனிய தகவல்கள் வந்து சேரும்.

**கன்னி** எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், மாற்று கருத்துடையோர் மனம் மாறுவர், தொழில் முன்னேற்றத்திற்கு நண்பர்கள் உறுதுணை புரிவர், பயண அனுகூலமுண்டு.

**துலாம்** பொதுவாழ்வில் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படாமல் இருக்க அவதானமாக இருப்பது நல்லது, உடல் நலனில் கூடிய கவனம் தேவை, கௌரவக் குறைவான நாள்.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும், நண்பர்கள் உங்களுக்கு நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர், சுபசெய்திகள் வந்து சேரும்.

**தனுசு** கலகலப்பான செய்திகள் வந்து சேரும் நாள், எதிரிகள் உதிரியாகும் நாள், தொழிலில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள், தனவரவு திருப்தி தரும்.

**மகரம்** செய்தொழில் மேன்மையும் உயர்வும் கிட்டும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள நினைப்பீர்கள், உதிரி வருமானங்கள் வந்து சேரும்.

**கும்பம்** மைத்துனர் வழியில் மனதிற்கினிய சம்பவம் ஒன்று நிகழும், பெற்றோர் நலனில் கூடிய அக்கறை எடுப்பீர்கள், தொழிலில் எதிர்பார்த்த நன்மைகள் கிடைக்கலாம்.

**மீனம்** பணப்புழக்கம் அதிகரிக்கும், உடன்பிறப்புக்கள் மூலம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், போசன சுகமுண்டு, வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரும் நாள்.

வளவன்


# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 130 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 80 |
| பச்சைமிளகாய் | 120 | 200 | 190 |
| தக்காளி | 100 | 120 | 90 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 60 |
| கோவா | 70 | 100 | 60 |
| கரட் | 80 | 100 | 80 |
| பூசணி | 50 | 40 | 40 |
| புடோல் | 100 | 120 | 90 |
| வாழைக்காய் | 40 | 50 | 50 |
| சின்ன வெங்காயம் | 200 | 200 | 170 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 140 |
| பாகற்காய் | 220 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 60 |
| கரணைக்கிழங்கு | 50 | 80 | 50 |
| பயிற்றங்காய் | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 100 | 140 | 100 |
| பீற்றூட் | 100 | -- | 100 |
| கறிமிளகாய் | 200 | 240 | 200 |
| முருங்கைக்காய் | 250 | -- | 230 |
| போஞ்சி | 120 | 150 | 140 |
| கத்தரி தம்புள்ள | 140 | 160 | 120 |
| கீரை - 1 பிடி | 40 | 40 | 40 |
| தேசிக்காய் | 100 | 100 | 90 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 40-50 | 45 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேங்கிக் கிடக்கும் வழக்குகளை துரிதமாக விசாரிக்க நடவடிக்கை

## நீதியமைச்சர் ஹக்கீம் தெரிவிப்பு



(கொழும்பு)

விசாரிக்கப்படாமல் குவிந்துள்ள பெருமளவு வழக்குகளை துரிதமாக விசாரணை செய்வதற்காக அடுத்த வருடம் முதல் 3 வருட திட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது. இதன்படி ஓய்வு பெற்ற நீதிபதிகளை பயன்படுத்தி வார இறுதி நாட்களில் வழக்குகளை விசாரணை செய்யவும் நீதிமன்றங்களின் தொகையை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நீதிபதிகளின் வருடாந்த மாநாடு நேற்று முன்தினம் கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் பிரதியமைச்சர் அசோக டி சில்வா தலைமையில் நடைபெற்றது. இந்த மாநாட்டில் நாடு பூராகவும் உள்ள நீதவான்கள் மற்றும் மாவட்ட நீதிபதிகள் கலந்து கொண்டனர். இந் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் மேலும் கூறியதாவது,

குவிந்துள்ள வழக்குகளை துரிதமாக தீர்ப்பது குறித்து பிரதம நீதியரசருடன் நீதிச் சேவை ஆணைக்குழுவுடன் பேச்சு நடத்தவுள்ளோம். இதன்படி வழக்குகளை துரிதப்படுத்த அடுத்த வருடம் முதல் பல்வேறு செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படும். இதற்காக 450 மில்லியன் ரூபா வரவு-செலவுத் திட்டத்தினூடாக ஒதுக்கப்பட்டுள்ளது.

நீதிபதிகளுக்கு வழங்கும் வசதிகளை அதிகரிப்பதற்கும் உரிய நடவடிக்கை எடுத்துள்ளோம். நீதிபதிகள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க நாம் தயாராக உள்ளோம்.

வழக்குகள் தாமதமாவதற்கு யாரையும் குற்றங்கூறமுடியாது. இதனை ஒன்றுபட்டே தீர்க்க வேண்டும். நீதிபதிகளுக்கு பயிற்சி வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளோம். நீதிபதிகளுக்கு பயிற்சி வழங்கும் நிறுவனங்களுக்கு நவீன வசதிகள் வழங்கப்படுகின்றன.

கொழும்பில் நீதிபதிகள் தங்கிப் பயிற்சி பெற உச்சநீதிமன்ற வளாகத்தில் பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதனை அடுத்த வருட முதற் பகுதியில் ஜனாதிபதி திறந்து வைப்பார். 60 நீதிமன்றங்களை புதிதாக உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நீதிபதிகளுக்கு பயிற்சி வழங்கும் திட்டத்திற்கு உதவ இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் முன்வந்துள்ளன. தற்பொழுது இந்தியாவில் நீதிபதிகளுக்கு பயிற்சி வழங்கி வருகிறோம்.

நீதிபதிகளுக்கு 120 வாகனங்கள் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடத்தில் பல புதிய சட்டங்கள் உருவாக்கப்பட உள்ளன. வழக்குகளை துரிதமாக விசாரணை செய்யும் திட்டத்திற்கு நீதிபதிகள் தமது ஒத்துழைப்பை வழங்க வேண்டும். சுமார் 850 வழக்குகள் 10 வருட காலத்திற்கு மேலாக விசாரணை செய்யப்படாதுள்ளன.

நானும் ஜனாதிபதியும் சட்டத்தரணிகள் என்பதால் நீதித்துறையில் காணப்படும் பிரச்சினைகளை துரிதமாக தீர்க்க முடியும் என்றும் கூறினார்.

பிரதம நீதியரசர் அசோக டி சில்வா கூறியதாவது,

நீதிபதிகளுக்கு போபாவில் பயிற்சி வழங்கி வருகிறோம். நேற்று 20 நீதிபதிகள் பயிற்சிக்காக செல்கின்றனர். தொடர்ந்து இந்த பயிற்சி வழங்கும் திட்டம் முன்னெடுக்கப் படும். நீதிபதிகளுக்கு பல்வேறு மட்டங்களிலும் பயிற்சி வழங்க திட்டமிட்டுள்ளோம். 4 முதல் 5 வருட பயிற்சியின் பின்னரே நீதிபதியாக ஒருவர் தெரிவாவர். ஏனென்றால் நீதிபதிகளுக்கு அனுபவம் முக்கியமாகும்.

முன்னர் 6 வருட அனுபவத்தின் பின்னரே நீதிபதி ஒருவர் நியமிக்கப்பட்டார். தற்பொழுது அது 3 வருடங்களாக குறைக்கப்பட்டுள்ளது. திரும்பவும் 6 வருட அனுபவத்தின் பின் நியமிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நீதிபதிகள் பக்க சார்பாக அன்றி பிரச்சினைகளுக்குத் தீர்வு ஏற்படும் வகையிலே தீர்ப்பு வழங்க வேண்டும். தண்டனை வழங்கும் போதும் உச்ச தண்டனையைவிட அதிகமாக வழங்கக்கூடாது என்றார். (ஸ்ரீ-2)

## லண்டன் மெய்கண்டார் ஆதீனத்தின் வெள்ளிவிழா

(யாழ்ப்பாணம்)

லண்டன் மெய்கண்டார் ஆதீனத்தின் வெள்ளி விழா நிகழ்வுகள் காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு லண்டன் மெய்கண்டார் ஆதீனத்தின் தலை வர் சிவத்திரு யோகானந்தா அடிகளாரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் திருப்பனந்தாள் காசி திருமடத்தின் இணையடிகள் சுந்தரமூர்த்தி தம்பிரான் சுவாமிகள், உலக சைவப்பேரவையைச் சேர்ந்த சிவத்திரு முருகு இராமலிங்கம், உலக சைவப்பேரவையினைச் சேர்ந்த இரா.செல்வராஜ் உட்பட பல சமயப் பெரியார்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் சமய ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு விழா ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (ஸ்ரீ-4-246)

## இரத்த தானம் வழங்கி தேசிய மட்டத்தில் முதலிடம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளில் நடைபெற்ற இரத்த தான முகாம்களில் அதிகூடிய எண்ணிக்கையில் இரத்த தானம் செய்து இவ்வருடம் புனித பத்திரிசியார் கல்லூரி தேசிய மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளது.

இவ்வருடம் புனித பத்திரிசியார் கல்லூரியின் மாணவர்கள், ஆசிரியர்கள் உட்பட 230 பேர் யாழ்.போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்கு இரத்ததானம் வழங்கி உயிர்காக்கும் உன்னத பணிக்கு ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கி வைத்திய அதிகாரி கு.தாரிணி தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் கடந்த வருடம் பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரியில் 210 பேர் இரத்ததானம் செய்து தேசியமட்டத்தில் முன்னணியில் திகழ்ந்தனர். இச்சாதனையை இவ்வருடம் புனித பத்திரிசியார் கல்லூரி முறியடித்துள்ளது.

இதற்கு இரத்த வங்கியின் சார்பிலும் தேசிய குருதிமாற்று பிரயோக சேவையின் சார்பிலும் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்வதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியினர் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ)

## வெடிபொருட்களை வைத்து வனவிலங்குகளை வேட்டையாடிய எட்டு பேர் கைதாகினர்

வெடி பொருட்களை வைத்து வனவிலங்குகளை வேட்டையாடிய 8 பேர் கந்தளாய் வனவிலங்கு காரியாலய அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சோமாவதிய வனப்பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போதே இவர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக கந்தளாய் வனவிலங்கு பாதுகாப்பு காரியாலயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களுள் இராணுவத்திலிருந்து தப்பி வந்தவர்களில் ஒருவரும் அடங்குவதாக அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ-9)

## குளத்து நீரை சுத்திகரித்து குடிநீராக வழங்கும் திட்டம்

### பூநகரிப் பகுதியில் ஆரம்பித்துவைப்பு

(பூநகரி)

பூநகரிப் பகுதியில் உள்ள கரிக்கொட்டுக் குளத்தில் உள்ள நீரை சுத்திகரித்து பூநகரிப் பகுதி மக்களுக்கு குடிநீராக வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் சுத்திகரிக்கும் இயந்திரத்தை இயக்கும் ஆரம்ப நிகழ்வும் 10 ஆயிரம் லீற்றர் நீர் கொள்ளக் கூடிய கொள்கலனுக்கு நீரை ஏற்றி வழங்கும் நிகழ்வும் கடந்த 15 ஆம் திகதி சமூக சேவைகள் அமைச்சர் பீரிஸ் பெரேராவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கிறிஸ்தவ , சைவ மத குருக்கள் ஆசியுரை வழங்கி இயந்திரத்தை இயக்கி நீரை கொள் கலனுக்கு ஏற்றி ஆரம்பித்து வைத்தனர்.

இந்நிகழ்வில் 66 ஆவது படைத் தளபதி பிரிகேடியர் சன்னத் கொடித்துவக்கு, 661 ஆவது படையணி கட்டளைத் தளபதி கேணல் ஜெயசூரியா, பூநகரிப் பிரதேச செயலர் கே. எஸ். வசந்தகுமார், பூநகரி பிரதேச சபையின் விசேட ஆணையாளர், பூநகரிப் பகுதியின் சகலகிராம சேபை அலுவலர்களும் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

இந்நீர் விநியோக திட்டம் அமுல் படுத்தபடும் போது 30 ஆண்டுகால மாத குடிநீர்ப்பற்றாக்குறை நிலவி வந்த பூநகரி மகா வித்தியாலத்தின் குடிநீர்த் தேவை பூர்த்தி செய்ய வழி வகுக்குமென மக்கள் நம்புகின்றனர். (ஸ்ரீ-3-84)


## கைலாசபதி நினைவரங்கு

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கிய பேரவையின் ஏற்பாட்டில் கைலாசபதி நினைவரங்கு நாளை திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். ஆரியகுளம் புதிய உயர் கலைக்கல்லூரியில் இலங்கை வங்கியின் சங்கானைக் கிளை முகாமையாளர் அழ.பகீரதன் தலைமையில் நடை பெறும்.

இந்நிகழ்வில நினைவுரையை யாழ். பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் மற்றும் தாயகம் சஞ்சிகை ஆசிரியர் க.தணிகாசலம் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ஸ்ரீ-2)

## நல்லூரில் உள்ள பிச்சைக்காரர்களுக்கு யாழ். மாநகரசபையால் வேலைவாய்ப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நல்லூர் ஆலய வளா கத்தில் பிச்சையெடுத்து வந்த ஐவருக்கு யாழ். மாநகர சபையினால் நேற்று வேலை வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இது பற்றி தெரியவருவதாவது,

கடந்த காலங்களில் நல்லூர் கோயில் வளாகத்தில் இருந்து பிச்சைப் பாத்திரம் ஏந்திய ஐவருக்கு வளாகத்தை துப்பரவு செய்து பராமரிக்கும் வேலையினை யாழ். மாநகரசபை முதல்வர் ஏற்படுத்திக் கொடுத் துள்ளார்.

இதனடிப்படையில், நாள் ஒன்றுக்கு இவ் ஐவருக்கும் தலா நூறு ரூபா படி ஆலய வளாக சுத்திகரிப்புக்கு வழங்கப்படவுள்ளது.

மேலும் இப்பணியில் இதுவரை காலமும் ஈடுபட்டு வந்த யாழ்.மாநகர சபை ஊழியர் கள் இனிவரும் காலங்களில் இவ்வளாக சுத்திகரிப்பில் ஈடுபடமாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-6-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் போர்க்குற்றம் குறித்த ஐ.நா.வின் விசாரணைகளை அமெ.அவதானிக்க வேண்டும்

## அமெ.சட்டவாக்க உறுப்பினர்கள் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கையின் போர்க்குற்றம் தொடர்பில் சர்வதேச தரத்தைக் கொண்ட விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என அமெரிக்க சட்டவாக்க உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டனுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ள 17 செனட்சபை உறுப்பினர்களும் பிரதிநிதிகள் சபையை சேர்ந்த 30 பேரும் இந்த கோரிக்கையை விடுத்துள்ளனர்.

இதேவேளை இந்த போர்க்குற்றம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை முன்னெடுத்து வரும் விசாரணைகளை அமெரிக்கா அவதானிக்க வேண்டும் என்றும் அமெரிக்க சட்டவாக்க உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

இலங்கை அரசாங்கம் மேற்கொண்டு வரும் போர்க்குற்ற ஆணைக்குழுவின் விசாரணைகளுக்கு சமாந்தரமாக சர்வதேச விசாரணைகளும் இடம்பெறுவதாக ஐக்கிய நாடுகள் சபை உறுதிப்படுத்த வேண்டும் என அவர்கள் கேட்டுள்ளனர்.

எந்த ஒரு குற்றங்களும் உறுதிப்படுத்தப்படாவிட்டால் அங்கு நம்பிக்கை மற்றும் உண்மைத் தன்மை இல்லாது போவதாக ஜனநாயக கட்சியின் ஒஹியோ பிராந்திய செனட் சபை உறுப்பினரான செரொட் பிரௌன் மற்றும் வட கரோலினா மாநில செனட் சபை உறுப்பினர் ரிச்சட் பர் ஆகியோர் இந்த கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உண்மைத்தன்மை இல்லாத நிலையில் மேற்கொள்ளப்படும் எந்த ஒரு சமாதான முயற்சியும் தோல்வியடையும் என்பதே வரலாறு என அவர்கள் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில் இலங்கையிலும் மற்றும் ஒரு சமாதான தோல்வி ஏற்படுவதை ஏற்க முடியாது என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதனைத்தவிர ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையில் இலங்கையின் விசார ணைகளின் உண்மை தன்மை குறித்து அமெரிக்கா வலியுறுத்தல்களை விடுக்க வேண்டும் என சட்டவாக்காளர்கள் மற்றுமொரு கடிதத்தில் கோரியுள்ளனர்.

இந்த கோரிக்கையை விடுத்துள்ள ஜனநாய கட்சியின் டெனி டேவிஷ் மற்றும் ஜேன் சக்கோஸ்கி ஆகியோர் சிக்காக்கோவில் தமிழ் சமூகம் வாழும் இடத்தை பிரதிநிதித்துவப் படுத்துவர்களாவர்.

ஏற்கனவே ஜனாதிபதி ஒபாமாவின் நிர்வாகமும் இலங்கை அரசாங் கம் தமது நியாயத்தன்மையையும் நல்லி ணக்கத்தையும் சர்வதேச ஒத்துழைப்புடன் ஏற்படுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

## சட்டவிரோத கேபிள் தொலைக்காட்சி நிறுவனங்கள் சுற்றிவளைக்கப்படவுள்ளன

(கொழும்பு)

நாடு முழுவதிலும் காணப்படும் சட்ட விரோத கேபிள் தொலைக்காட்சி நிறுவனங்களை சுற்றி வளைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

பாதுகாப்பு அமைச்சும் தகவல் தொடர்பாடல் அமைச்சும் கூட்டாக இணைந்து இந்த சுற்றி வளைப்பு நடவடிக்கை களை மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளன.

நாடு முழுவதிலும் இவ்வாறான பல சட்ட விரோத கேபிள் தொலைக்காட்சி நிறுவனங்கள் இயங்கி வருவதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இவ்வாறு இயங்கிவரும் கேபிள் தொலைக்காட்சி நிறுவனங்களில் ஒளி, ஒலிபரப்புச் செய்யப்படும் அலைவரிசைகளினால் நாட்டின் கலாசாரத்திற்கும் தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சிறிய குழுக்களை இலக்கு வைத்து தரமற்ற நிகழ்ச்சிகளை ஒளிபரப்புச் செய்ய கேபிள் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு உரிமை கிடையாதென அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## அரச காணியில் விஷ்ணு ஆலயம் அமைக்க மேர்வினுக்கு அனுமதி

களனி ஹிம்புட்வெல்கொட, வெதமுல்ல, பிரதேசத்தில் அரசாங்கத்திற்கு சொந்தமான 7 ஏக்கர் சதுப்பு நிலத்தை நிரப்பி விஷ்ணு ஆலயம் ஒன்றை கட்டுவதற்காக அமைச்சர் மேர்வின் சில்வாவுக்கு வழங்க அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

சில நிபந்தனைகளின் அடிப்படையில் இந்த காணி வழங்கப்பட்டுள்ளதாக காணிகளை நிரப்புதல் மற்றும் அபிவிருத்தி செய்யும் கூட்டுத் தாபனத்தின் தலைவர் ஹர்ஷான் டி சில்வா தெரி வித்துள்ளார்.

இதனை தவிர 135 ஏக்கர் நிலப்பரப்பான இந்த தாழ் நிலத்தில் 100 ஏக்கர் நிலப்பரப்பு நிரப்பட்டுள்ளது. விஷ்ணு ஆலயத்திற்கு வழங்கப்பட்ட 7 ஏக்கர் நிலத்துடன், கொழும்பு புனித செபஸ்தியன் மீன் சந்தைக்கான கட்டத்தை அமைப்பதற்கும், கடல் மணல் சுத்திகரிப்புக்காகவும் தொழிற்சாலை ஒன்றை அமைப்பதற்கும் இந்த காணியில் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு அரசாங்கமே ஆதரவளிக்கின்றது

### ரணில் குற்றச்சாட்டு

(கொழும்பு)



தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கமே ஆதரவ ளித்து வருவதாக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

மஹிந்த சிந்தனையை புலிகள் பின்பற்றி வரும் வேளை யில் ஐக்கிய தேசியக் கட்சியின் மீது புலி முத்திரை குத்துவது அர்த்தமற்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

களனியில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட் டுள்ளார்.

பிரபாகரன் கொல்லப்பட்டதனைத் தொடர்ந்து புலிகள் அமைப்பின் தலைவராக குமரன் பத்மநாதன் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டதாகவும் வெளிநாட்டுத் தமிழர்களின் ஒத் துழைப்பைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் குமரன் பத்மநாதனை அரசாங்கம் வடக்கு அபி விருத்திப் பணிகளில் ஈடுபடுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## ஐரோப்பாவிலிருந்து புலி ஆதரவாளர்கள் இலங்கைக்கு விஜயம் செய்கின்றனரா?

### புலனாய்வுப் பிரிவினர் விசாரணை

(கொழும்பு)

ஐரோப்பாவிலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்வோரில் தமிழீழ விடுதலைப் புலி ஆதரவாளர்கள் உள்ளனரா என்பது குறித்து பாதுகாப்பு அமைச்சு விசாரணைகளை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

மேற்குலக நாடுகளிலிருந்து இலங்கைக்கு விஜயம் செய்வோரில் புலி ஆதரவு வெளிநாட்டவர்கள் இருக்கின்றார்களா என புலனாய் வுப் பிரிவினர் விசாரணை நடத்த உள்ளதோடு நாடு கடந்த தமிழீழ இராச்சியத்தையும் புலிகளின் புலனாய்வுப் பிரிவினரை வலுப்படுத்தவும் இவ்வாறு புலி ஆதரவாளர்கள் இலங்கைக்கு விஜயம் செய்வதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை லண்டனில் ஜனாதிபதிக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இலங்கையர்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சின் அறிவுறுத்தல்களுக்கு அமைய புலனாய்வுப் பிரிவினர் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

குறித்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்பான வீடியோ காட்சிகளின் அடிப்படையில் விசாரணைகள் நடத்தப்பட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் அடையாளம் காணப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படும் அதேவேளை இவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்தால் அவர்களிடம் விசாரணை நடத்தும் நோக்கில் கைது செய்வதற்கு பாதுகாப்புத் தரப்பினர் திட்டமிட்டுள்ளனர். (ஸ்ரீ-4)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வட இலங்கை சங்கீத சபையினால் நடாத்தப்பட்ட அவைக்காற்றுகை நிகழ்வு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் நேற்று முன்தினம் யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்.கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையின் உப அதிபர், நடன ஆசிரியர் திருமதி சூரியாளினி வீரசிங்க ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும் யாழ்.வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் உரையாற்றுவதையும் மாணவியின் கலை நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# இவ்வருடத்தில் 580 மலேரியா நோயாளர்கள் பதிவு

இவ் வருடத்தில் நாட்டில் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 25 வீதத்தால் அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வருடத்தில் இதுவரையிலான காலப்பகுதியில் சுமார் 580 மலேரியா நோயாளிகள் பதிவாகியுள்ளதாக சுகாதார அமைச்சின் மலேரியா மற்றும் டெங்கு ஒழிப்புக்குழுவின் பணிப்பாளர் வைத்தியகலாநிதி சரத்தெனியகே தெரிவித்தார்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உள்ளிட்ட பல மாகாணங்களில் மலேரியா நோய் காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

மலேரியா நோய் அதிகரித்து செல்வதன் காரணமாக பெரும்தாக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் இத்தகைய பிரதேசங்களில் அதனைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஶ்ரீ-9)

# வெளிநாட்டில் பணிபுரியும் இலங்கையர்களின் நலன்களை உறுதிப்படுத்த நடவடிக்கை

## அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டில் பணியாற்றி வரும் இலங்கையர்களின் நலன்களை உறுதிப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என வெளி விவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்லும் இலங்கையர்கள் தொடர்பான தகவல்கள் குறித்த நாடுகளினது தூதரகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பாக தொழில் ஒப்பந்தம் உள்ளிட்ட தரவுகள் அனுப்பி வைக்கப்பட உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். கரித்தாஸ் நிறுவனத்தினால் நடத்தப்பட்ட நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.


தொழில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் போது காணப்படும் விடயங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்ட ஓர் நிலைமையினை தொழில் பார்க்கும் போது தொழிலாளர்கள் எதிர் நோக்க நேரிடுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாட்டுக்கு வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்லும் இலங்கையர்கள் தொடர்பில் அனைத்து தரப்பினரும் கவனம் செலுத்த வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வருமானத்தில் வெளிநாட்டு பணியாளர்களின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ஶ்ரீ-2)

# ஆங்கில மொழி மூல ஆசிரியர்கள் 1500 பேருக்கு ஜனவரியில் நியமனம்

## கல்வி அமைச்சர் நடவடிக்கை



(கொழும்பு)

தேசிய பாடசாலைகளில் க.பொ.த. உயர்தர வகுப்புக்களுக்கு ஆங்கில மொழி மூலமாக கற்பிக்கும் ஆசிரியர்களின் பற்றாக் குறையை நீக்கும் முகமாக எதிர்வரும் ஜனவரி மாதத்தில் பயிற்சி பெற்ற ஆயிரத்து 500 ஆசிரி யர்களை நியமிக்க கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன நடவடிக்கை எடுத்துள்ளார். இதன் முதற் கட்ட நடவடிக்கையாக கடந்த வாரம் க.பொ.த. உயர்தர வகுப்புகளில் கல்வி கற்பிப்பதற்காக 500 ஆங்கில மொழி மூல ஆசிரியர்கள் தேசிய பாடசாலைகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஆங்கிலம் மொழி மூலம் கணிதம், வணிகம், கணக்கியல், பௌதீகவியல், இரசாயனவியல் மற்றும் அரசியல் விஞ்ஞானம் ஆகிய பாடங்களை கற்பிப்பதற்கு ஆசிரியர் பற்றாக் குறை இருப்பதாக தமக்கு பாடசாலை நிர்வாகத்தினரும் பெற்றோர்களும் செய்த முறைப்பாட்டை அடுத்தே தாம் இந்த தீர்மானத்தை எடுத்ததாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

ஏனைய தமிழ், சிங்கள மொழி மூல பாடசாலைகளில் ஆங்கில மொழி மூல வகுப்புகளை நடத்துவதற்கு தேவையான ஆசிரியர்கள் தேசிய பாடசாலை உட்பட சகல அரசாங்க பாடசாலைகளிலும் போதியளவு இருக்கின்றார்கள் என்று தெரிவித்த அமைச்சர் ஆங்கிலம் மூலம் சகல பாடங்களையும் கற்பிப்பதற்கான ஆசிரியர்களின் பற்றாக்குறையை தமது அமைச்சு விரைவில் பூர்த்தி செய்யும் என்றும் உறுதியளித்தார்.

நாடெங்கிலும் உள்ள அரசாங்க பாடசாலைகளில் தற்போது 42 இலட்சம் மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள். இவர்களுக்கு கல்வி கற்பிப்பதற்காக 2 இலட்சத்து 25 ஆயிரம் ஆசிரியர்கள் இருக்கின்றார்கள் என அவர் மேலும் தெரிவித்தார். (ஶ்ரீ-4)

# தேசிய பாதுகாப்பு தினம்

(யாழ்ப்பாணம்)

தேசிய பாதுகாப்பு தினத்தை நினைவுகூரும் தேசிய வைபவம் எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணி வரையும் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம மந்திரி தி.மு.ஜயரத்ன பங்களிப்புடன் இடர் முகாமைத்துவ அமைச்சர் மகிந்த அமரவீர, இடர் முகாமைத்துவ பிரதி அமைச்சர் டுலிப் விஜேயசேகர ஆகியோரினது அழைப்பின் பேரில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரதும் பங்கேற்புடன் இடம்பெறவுள்ளது. (ஶ்ரீ-2-9)

# ஜனாதிபதியுடன் கலந்துரையாடி பொன்சேகாவை விடுவிக்க முடியும்

## சஜித் பிரேமதாச எம்.பி. தெரிவிப்பு



(கொழும்பு)

சிறை வைக்கப்பட்டுள்ள சரத் பொன்சேகாவை விடுவிக்கும் விடயத்தில் தன்னால் ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்க முடியும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியுடன் நேருக்குநேர் கலந்துரையாடி சரத் பொன்சேகா வை விடுவிக்குமாறு கோரும் ஆற்றல் தனக்குண்டென அவர் தெரிவித்துள்ளார்.

இராணுவ வெற்றிகளின் கீர்த்தியை அரசாங்கம் தனக்குரியதாக்கிக் கொண்டுள்ள போதிலும் அதனைப் பெற்றுக்கொடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டவர்கள் சரத் பொன்சேகா உள்ளிட்ட இராணுவத்தினரே என்றும் சஜித் பிரேமதாச மேலும் வலியுறுத்துகின்றார். (ஶ்ரீ-4)

# பரந்தன்-முல்லைத்தீவு பிரதான வீதி புனரமைக்கப்படுமா?

(கிளிநொச்சி)

பரந்தன்-முல்லலைத்தீவு பிரதான வீதி புனரமைப்புச் செய்யப்படாதுள்ளதால் பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

பரந்தன்-முல்லைத்தீவு ஏ-தரப் பெருந்தெரு இதுவரை புனரமைப்புச் செய்யப்படாததால் வீதி குன்றும் குழியுமாக நீர் நிறைந்து காணப்படுகின்றது.

பரந்தன்- முல்லை வீதியினை அண்டிய இடங்களில் விசுவமடு தேராவில் வரையிலும் பொதுமக்கள் மீள் குடியேற்றம் செய்யப்பட்டுள்ளதுடன் முல்லைத்தீவு வரையான பேருந்து போக்குவரத்துக்கென தனியார் பேருந்துகளுக்கு இவ் வழித்தடத்தில் பயணிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.


இருந்த போதிலும் இவ்வீதிபுனரமைப்புச் செய்யப்படாத காரணத்தால் இவ்வீதியூடாக பயணிப்பதில் பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர் கொண்டு வருகின்றனர்.

எனவே இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உரிய கவனம் செலுத்துமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஶ்ரீ-3-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளபதியா...கப்டனா...? ஜெயலலிதா தெரிவு எது?

"நான் ஒரு தடவை முடிவு பண்ணிட்டா... அப்புறம், என் பேச்சை நானே கேட்கமாட்டேன்" என்று வசனம் பேசிய விஜய், பல தடவை யோசித்து அ.தி.மு.க. வில் கூட்டணி சேர முடிவு செய்து விட்டார் என்று நாம் சொன்னது பலித்தே விட்டது. இதோ விஜய் யின் அரசியல் கவுண்ட்டவுன் இனிதே ஆரம்பம்!



ஜெயலலிதா - எஸ். ஏ.சந்திர சேகரன் சந்திப்பு சென்ற வார சென்சேஷன். ஏன் இந்த திடீர் சந்திப்பு? விஜய் அரசியலில் இறங் குவது திடீர் முடிவல்ல. கடந்த மூன்று வருடங்களுக்கு முன்பே எடுக்கப்பட்ட முடிவு இது. அதற்கான வேளை இப்போது வந்த விட்டது. கிட்டத்தட்ட விஜய்யை அ.தி.மு.க பக்கம் கொண்டு போய்க் கரை சேர்த்ததே தி.மு.க.தான்.

தமிழகத்தில் இளைஞர்கள் மத்தியில் யாருக்கு செல்வாக்கு அதிகம்? என்று ஆய்வு எடுத்த போது கிடைத்த பதில் விஜய். இந்தத் தகவல் ராகுலுக்குச் செல்ல விஜய்யை விரும்பி டில்லிக்கு அழைத்தார். உண்மையில் விஜய்க்கு காங்கிரஸில் இணைய விருப்பமே இல்லை. இருந்தாலும் ராகுலை விஜய் சந்தித்து ஆளும் கட்சிக்குப் பிடிக்கவில்லை. எனவே விஜய்க்குக் குடைச்சல் கொடுக்க ஆரம்பித்தார்கள்.

ஈரோடு மாவட்ட விஜய் மக்கள் இயக்கத்தின் மாவட்டத் தலைவர் பாலாஜியின் கல்யாணம் கடந்த நவம்பர் மாதம் நடந்தது. அதில் கலந்து கொள்ள விஜய் சென்றார். திருமணத்தை முடித்து விட்டு, மக்களுக்கு நலத் திட்டப் பணிகள், உதவிகள் வழங்கும் விழாவைப் பக்கத்தில் இருக்கும் மைதானத்தில் நடத்த முடிவு செய்திருந்தார்கள் ரசிகர்கள். அலை அலையாகத் திரண்ட ரசிகர்களைக் கண்டு கதிகலங்கிப் போனார்கள் மாவட்ட தி.மு.க.வினர் .

ஏற்கனவே கோவை மாவட்டத்தில் தி.மு.க.வீக் என்று கோபத்தில் கருணாநிதி வேறு பேசியிருந்தார். உடனடியாக பொலிஸ்காரர்கள் மூலமாக நலத்திட்ட விழா நடப்பதையே நிறுத்த முடிவு செய்தார்கள். ஆர்வமாக விழா மேடைக்கு சென்ற விஜய்யைத் தடுத்து நிறுத்திய பொலிஸார் கூட்டம் அதிகமா இருக்கு. நீங்க மேடைக்குப் போக வேண்டாம். மீறிப் போய் ஏதாவது அசம்பாவிதம் நடந்தா நாங்க பொறுப்பு இல்லை என்று கடுகடுத்தார்கள்.

விஜய்க்கு பாதுகாப்பும் தராமல் அவமானப்படுத்தினார்கள். மேடைக்குச் செல்ல முடியாமல் தவித்த விஜய் அப்போதே ஆளுங்கட்சிக்கு எதிராக உள்ளுக்குள் கொந்தளிக்க ஆரம்பித்துவிட்டார். விழாவில் கலந்துகொள்ளாமலேயே கனத்த மனதோடு சென்னையும் திரும்பிவிட்டார்.

இன்னொரு பக்கம் சென்னை அண்ணா நகரில் விஜய்க்குச் சொந்தமான இடத்தில் கட்டட வேலை நடந்து வருகிறது. அங்கே தினசரி வரும் ஒரு தி.மு.க வட்டச் செயலாளர் கட்டட வேலை பார்ப்பவர்களை மிரட்ட ஆரம் பித்து இருக் கிறார். ஷங்கர் இயக்கத்தில் நடிப்பதற்கு விஜய் ஆசை யோடு இருந்த நேரத்தில் அவரைப் படத்தில் இருந்து நீக்கச் சொல்லி பிரஷர். இதற்கு மேலும் பொறுமையாக இருக்க முடியாது என்று முடிவு செய்து விட்டார் விஜய்.

இடையில் அ.தி.மு.கவிடம் இருந்து விஜய்க்குத் தொடர்ந்து ஆதரவான சிக்னல்கள் வந்து கொண்டே இருந்தன. தி.மு.க.வை எதிர்க்க அ.தி.மு.கவோடு கை கோர்ப்பதே சரி என்ற முடிவுக்கு வந்து விட்டார் என்றார் அவர்.



விஜய் என்னதான் நினைக்கிறார்? அவரிடமே பேசினோம். சாதாரண குடும்பத்தில் பிறந்த என்னைத் தமிழக மக்கள்தான் பெரிய நடிக னாக ஆக்கி அழகு பார்த்தாங்க. அவங்களோட ஆசீர்வாதத்தில் தான் என் குடும்பமே வாழ்ந்து கொண்டு இருக்கு. என்னை வாழ வைக்கும் மக்களுக்கு நன்றிக்கடனா ஏதாவது செய்ய வேண்டுமென ஆசைப்படு கிறேன். அதனால் கண்டிப்பா அரசியலுக்கு வருவேன் என்று சுருக்கமாகச் சொல்லி முடித்தார்.

ஜெயலலிதாவைச் சந்தித்து விட்டு வந்த எஸ்.ஏ.சந்திரசேகரன், கடந்த 11 ஆம் திகதி மாலை 4 மணிக்கு மேடத்தைச் சந்தித்தேன். மலர்ந்த முகத்தோடு வரவேற்றாங்க. 40 நிமிடம் பல விடயங்கள் பற்றிப் பேசினோம். ஒரு நல்ல தலை வரைச் சந்தித்த சந்தோஷம் என் மனது பூரா இருக்குது. விஜய்க்கு தனியா அரசியல் கட்சி ஆரம்பிக்கும் எண்ணம் இல்லை. இன்றைய சூழ்நிலையை மனதில் கொண்டு மக்கள் இயக்கத்தின் மாநாட்டை ஜனவரி மாதக் கடைசியில் மதுரை அல்லது திருச்சியில் நடத்த இருக்கிறோம் என்று முடித்துக் கொண்டார்.

அ.தி.மு.க. என்ன நினைக்கிறது? அ.தி.மு.க.வின் மூத்த புள்ளி ஒருவரிடம் பேசி னோம். விஜயகாந்தோடு கூட்டணி வைக்கும் முடிவில்தான் அம்மா இருந்தார். ஆனால் விஜய்யின் வருகை அம்மாவை யோசிக்க வைத்து விட்டது. ஏனென்றால் விஜயகாந்த அ.தி.மு.கவுக்குக் கட்டுப்பட்டு நடப்பாரா என்கிற கவலை அம்மாவுக்கு உண்டு. இது போக அம்மாவிடம் 60 ஸீட்டுகள் கேட்டு விஜயகாந்த் டிமாண்ட் செய்கிறார். தே.மு.தி.க.வுக்கு அவ்வளவு முக்கியத்துவம் தர வேண்டுமா என்று அம்மா யோசி த்துக் கொண்டு இருக்கும் போது தான் இந்த சந்திப்பு நிகழ்ந்திருக் கிறது. அதிரடியாக விஜயகாந்த் ஒரு பக்கம் இருக்க அமைதியான விஜய் வருகையை அம்மா ரொம்பவே ரசிக்கிறார்.

இளைஞர்களை அ.தி.மு.க.பக் கம் இழுப்பதற்கு விஜய் நிச்சயம் பயன்படுவார் என்பது அம்மாவின் எண்ணம். விஜய்யின் வருகையை வைத்து விஜயகாந்தின் அதிகப் படியான ஸீட் டிமாண்டையும் காலி செய்து விடலாம் என்பதும் அம்மாவின் கணக்கு. விஜய்யை வைத்து விஜயகாந்தை வழிக்கு கொண்டு வருவது, சரத்குமாரை உள்ளே இழுப்பது என அடுத்தடு த்த அரசியல் மூவ்களில் ஆர்வமாக இறங்கிவிட்டார் அம்மா. எல்லாம் சரியாக நடந்தால் விஜய் - விஜயகாந்- சரத் என்கிற நட்சத்திர பலத்தைக் கொண்டு தி.மு.க. வை வீழ்த்துவது அம்மாவின் திட்டம்.

இதற்கு விஜயகாந்தின் ரியாக்ஷனைப் பொறுத்து அம்மாவின் திட்டங்கள் மாறும். விஜயகாந்த்துக்கும் தி.மு.க.வுக்கும் செக் வைக்கும் வகையில் விஜய் நடத்தும் மக்கள் இயக்க மாநாட்டில் அம்மா கலந்துகொள்வார் என்று நினைக்கிறேன். அர்த்தபுஷ்டியாகச் சிரிக்கிறார் அந்தப் புள்ளி.

ஆஹா.... அரசியல் சூடு ஆரம்பம்.

# சட்டவிரோத கசிப்பு உற்பத்தி அதிகரிப்பு

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு விசுவமடுப்பகுதியில் சட்ட விரோத கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்துள்ளதாக அறிய முடிகிறது.

விசுவமடுப்பகுதியில் மயில்வாகனபுரம், குமாரசாமிபுரம்,கல்லாறு, ரெட்பாணா போன்ற இடங்களில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தியும் விற்பனையும் அதிகரித்துள்ளதாகவும் இவ ற்றினை கூடுதலாக பெண்களே விற்பனை செய்வதாகவும் அறிய முடிகிறது.

இதேவேளை மதுபான பாவனையாளர்க ளால் குடும்பத்தகராறுகள் அதிகரித்துள்ள துடன் சமூக சீரழிவுகளும் தலையெடுக்கத் தொடங்கியுள்ளதாக சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

எனவே இது விடயத்தில் சம்பந்தப்பட்டவர் கள் உரிய கவனம் செலுத்தி செயற்படுமாறு பொது மக்கள் கோரிக்கை விடுத்துள் ளனர்.(ஸ்ரீ-3-30)

## அடையாள அட்டை கண்டெடுப்பு

அழகொல்னல அளவெட்டி வடக்கு என் னும் முகவரியைச் சேர்ந்த இரத்தினஐயர்-கௌரி என்பவரின் 547792912V எனும் இலக்கத்தையுடைய தேசிய அடையாள அட்டை கண்டெடுக்கப்பட்டு வலம்புரிக் காரி யாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர் அலுவலக நேரத்தில் வருகை தந்து இதனைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்படுகிறது.


(ஸ்ரீ-4)



யாழ். வண்ணை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் தேவஸ் தானத்தில் அண்மையில் நடைபெற்ற சுவர்க்கவாயில் ஏகாதசிப் பெரு விழாவில் யாழ். நாச்சிமார் கோயிலடி ஸ்ரீதர் வில்லிசைக் குழுவினர் நிகழ்த்திய "சூடிக்கொடுத்த சுடர் கொடி" வில்லிசை நிகழ்வைப் படத்தில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைகோ போட்ட வழக்கும் புலிகளால் எழும் பீதியும்



தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் மீதான தடையை நீடித்தது சரிதான்! என நவம்பர் 12ஆம் திகதி டில்லி உயர் நீதிமன்ற நீதிபதி விக்கிரமஜித் சென் தீர்ப்பாயம் உறுதி செய்தது. அதை எதிர்த்து ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ, சென்னை உயர் நீதிமன்றத்தில் ரிட்மனு ஒன்றைத் தாக்கல் செய்தார்.

கடந்த 14 ஆம் திகதி, தலைமை நிதிபதி இக்பால்,நீதிபதி சிவஞானம் அடங்கிய அமர்வு முன்பு இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. தானே வாதிட்ட வைகோ, "சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் 9ஆவது பிரிவின் கீழ் சிவில் நடைமுறை சட்டப்படி என்னையும் விசாரணையில் பங்கேற்க அனுமதிக்க வேண்டும் என மனு தாக்கல் செய்தேன். ஆனால்,சிவில் நடைமுறை சட்டத்தின் படி நான் அனுமதி கேட்டது தவறு என்றும், கிரிமினல் நடைமுறைச் சட்டம் தான் இதில் செல்லுபடியாகும் என்றும் தீர்ப்பாயத்தின் தலைவர் கூறியிருப்பது சட்டத்தின் அடிப்படையில் முற்றிலும் முரணானது. 1967இல் கொண்டுவரப்பட்ட சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டமானது,2004ஆம் ஆண்டு திருத்தப்பட்ட போதும்,சிவில் நடைமுறைச்சட்டம் கையாளப்படுவதை தொடரவே பல பிரிவுகளில் சட்டம் வழி செய்கிறது..." என்று விபரித்தார்.

"நீங்கள் விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்தவரா?' என நீதிபதி இக்பால் கேட்க, 'நான் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் உறுப்பினர் அல்ல. ஆனால், அதன் தீவிரமான ஆதரவாளன்! " என்று அழுத்தமாகச் சொன்னார் வைகோ.

மத்திய அரசின் சார்பில் வாதாடிய கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ரவீந்திரன், "தடையை நீக்குவது பற்றி மத்திய அரசிடம் முறையிட சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் 6 ஆவது பிரிவில் வாய்ப்பு உள்ளது. அதை வாதி பயன்படுத்திக் கொள்ள வேண்டும்..." என்று கூற, வைகோ சூடாகி, " இந்தத் தடையை விதித்த மத்திய அரசாங்கத்திடமே தடையை நீக்க எப்படி கேட்க முடியும்? அநீதி இழைத்தவர்களிடமே நீதியைக் கேட்க முடியாது. தடை விதித்ததன் மூலம் தமிழர்களுக்கு மத்திய அரசு தீங்கு இழைத்து விட்டது!" என்று குமுறலுடன் முழங்கினார்.

"அரசுத் தரப்பில் இருந்து இதற்கு விளக்கம் கொடுக்க வேண்டும். இதில் மத்திய அரசுக்கு முழுப் பொறுப்பு இருக்கிறது.

எனவே, வைகோவின் ரிட் மனு தொடர்பாக மூன்று வாரங்களுக்குள் மத்திய அரசு பதில் அளிக்க வேண்டும்!" என நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இந்த உத்தரவை வெளியிட்டதும், நாட்டின் முக்கிய முடிவுகளை எடுக்கும் டில்லியின் செனத் பிளாக் பகுதியில் ஒரே பரபரப்பு ஏற்பட்டது.

கடந்த 20 ஆண்டுகளில் புலிகள் மீதான தடை இந்த ஆண்டுதான் இவ்வளவு பெரிய விவாதத்தைக் எழுப்பியுள்ளது.

"இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மத்திய அரசு விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்யும் இது தொடர்பான தீர்ப்பாயம் இதை விவாதித்து சரியான நடவடிக்கை தான் என்று சொல்லி அறிவிக்கும். ஆனால்,இந்த முறை தான் வைகோ, டில்லி ஆணையத்தில் ஆஜராகி விவாதப் பொருள் ஆக்கினார். ஆனாலும் தடை நீக்கப்பட்டது. இந்நிலையில் வைகோ சென்னை உயர் நீதிமன்றத் தில் தாக்கல் செய்த மனு, மத்திய அரசுக்கு மீண்டும் சங்கடத்தை ஏற்படுத்தி யுள்ளது.

நீதிபதிகள் தங்களது தீர்ப்பை எப்படி வேண்டு மானாலும் வழங்கலாம் என்ற அச்சம் மத்திய அரசுக்கு ஏற்பட்டுள்ளது! " என்கிறார்கள் பொலிஸ் வட்டாரத்தில்.

இந்நிலையில் தான், 'விடுதலைப்புலிகளால் பிரதமர் மன்மோகன்,முதல்வர் கருணாநிதி, காங்கிரஸ் தலைவர் சோனியா, மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் உட்பட பல பிரமுகர்களுக்கும் ஆபத்து!' என மத்திய உளவுப் பிரிவு எச்சரிக்கை அனுப்பியுள்ளது. திடீரென எழும்பியிருக்கும் இந்த எச்சரிக்கையால்,இனி 'தமிழகம் வரும் பிரதமர் உட்பட்ட தலைவர்களுக்கு இதுவரை இல்லாத

**ஜூனியர் விகடன்**

பாதுகாப்பு செய்யப்படும் என்றும் முதல்வர் கருணாநிதிக்கும் அவர் பங்கேற்கும் நிகழ்ச்சிகளுக்கும் பாதுகாப்பு அவ்வப்போது ஆய்வு செய்யப்பட்டு பலப்படுத்தப்படும்' என்றும் ஜி.ஜி.லத்திகாசரண் கூறியிருக்கிறார்.

வைகோவின் வழக்கையும், இந்த திடீர் எச்சரிக்கையையும் இணைத்துப் பேசும் "புலி" ஆதரவாளர்களோ,"சென்னை உயர் நீதிமன்றத்தில் போடப்பட்டிருக்கும் வழக்குக் காரணமாகத்தான் இந்தப் பீதி கிளப்பப்படுகிறது!" என்கிறார்கள்.

"ஜெயலலிதாவுக்கோ,கருணாநிதிக்கோ பொலிஸ் பாதுகாப்பு அதிகம் வேண்டும் என்கிற போது எல்லாம் ,புலிகளால் ஆபத்து என்கிற 'எச்சரிக்கை' டில்லியில் இருந்து வந்துவிடும். 'அதற்கான முகாந்திரம் இருக்கிறதா... இல்லையா?' என்பதெல்லாம் யாரும் கேட்கக்கூடாதது ஆகிவிடும்.

இதில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலைப்புலிகள் என்பதால் குற்றம் சாட்டுபவர்களுக்கு வசதியாகிப்போய் விடுகிறது. புலிகள் இயக்கம் இராணுவ ரீதியாக அழிக்கப்பட்ட பின்னர் அவர்கள் மீதான தடையை நீக்க தமிழகத்தில் எழுந்துள்ள ஆதரவு தான்,டில்லியின் "புலிபீதி"க்குக் காரணம்!" என்கிறார்கள்.

இரா.தமிழ்க்கனல்

# தேசிய கீதத்தை சிங்களத்தில் இசைக்கச் சொல்வது தமிழ் மக்களை மீண்டும் ஒதுக்கி வைக்கும் செயல்

## உடன் மாற்றப்படவேண்டும் என கொழும்பு பேராயர் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையின் தேசிய கீதத்தை சிங்கள மொழியில் மாத்திரமே பாட வேண்டும் என்ற அமைச்சரவைத் தீர்மானம் உடனடியாக மாற்றப்படவேண்டும் என கொழும்புப் பேராயர் டுலிப் டி சிக்கேரா வலியுறுத்தியுள்ளார்.

இந்தச் செயல் தமிழ் மக்களை மீண்டும் ஒதுக்கி வைக்கும் நடவடிக்கை என அவர் விடுத்துள்ள அறிக்கையில் எச்சரித்துள்ளார்.

தமது தாய் மொழியில் தேசிய கீதத்தை பாடுவதற்குரிய உரிமையை தமிழ் மக்களுக்கு தடை செய்ய அமைச்சரவை எடுத்த தீர்மானம் மிகவும் கவலைக்குரியது. இது என்னை மிகவும் கலவரப்படுத்தியுள்ளது.

அமைச்சரவையின் இந்தத் தீர்மானம் ஏற்படுத்தும் திருப்பம் சிறுபான்மையினரான தமிழ் பேசும் மக்களை தள்ளிவிடும் ஒரு செய்தியாகவே உள்ளது.

தேசிய ஒருமைப் பாட்டிற்கு முன்னுரிமை வழங்கப்பட வேண் டிய இந்த சந்தர்ப்பத்தில் தமிழ் மக்களை மீண்டும் ஒதுக்கி வைக்கும் செயலாகவே இது காணப்படுகிறது.

தேசிய கீதம் இசைப்பது ஒவ்வொரு குடிமகனின் உரிமையும் தனிச் சுதந்திரமும் . அது ஜெபிப்பதற்கு ஈடானது. தமது தாய் மொழியில் அர்த்தத்துடன் இசைப்பது அடுத்த நாடுகள் என்ன செய்கிறது அல்லது எது செய்வது இல்லை என்ற கரிசனையை அகற்ற எமது முன்னேற்றமான இரு மொழி தேசிய கீதம்.

எமது தேசத் திற்கு நாம் வழங்கும் நம்பகத் தன்மையை எப்படி எமது தாய் மொழியில் வெளி யிட்டோம் என் பதே மெய்யி யல்பு. இன்மையுடன் ஒற்றுமைப்படுத்தும் மாதிரிப் படிவம். இது குறித்து இலங்கை பெருமைப்பட வேண்டும். இதற்குள் நாம் வீணாக தலையிட்டிருக்கக்கூடாது.

இந்தக்கவலைக்குரிய முடிவை திருத்தியமைப்பதைவிட வேறு ஒரு விருப்பத்தேர்வு அமைச்சரவைக்கு இல்லை. தமிழ்மொழியின் உபயோகத்தின் பெறுமதியை மதிக்கும் ஜனாதிபதியிடம் காலதாமதமின்றி மேலுமொரு சிறுபான்மையின் மனக்குறை உருவாகமுன் இதை நிறைவேற்றுமாறு கோருகிறேன். இவ்வாறு கொழும்புப் பேராயர் டுலிப் சிக்கேரா தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)



# இரகசிய நிதித் தகவல்களை வெளியிட்ட இலங்கையர் அமெரிக்காவில் கைது

அமெரிக்காவில் இரகசிய நிதித் தகவல்களை வெளியிட்ட குற்றச்சாட்டின் பேரில் இலங்கையர் உள்ளிட்ட நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். எபல் மற்றும் டெல் போன்ற உலகின் முதனிலை தொழில் நுட்ப நிறுவனங்களின் எதிர்கால உற்பத்திகள் தொடர்பான மிக முக்கிய இரகசிய தகவல்கள் இவ்வாறு வெளியிடப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

47 வ்யதான மனோஷ கருணதிலக்க என்ற இலங்கையர் உள்ளிட்ட நான்கு பேரை நியூயோர்க் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

மனோஷ தாய்வான் செமி கண்டக்டர் நிறுவனமொன்றில் கணக்காளராக கடமையாற்றி வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

வோல் ஸ்ட்ரீட் இரகசிய நிதித் தரவுகளை பரிமாறிய குற்றச்சாட்டின் பேரில் ஏற்கனவே இலங்கையரான ராஜ் ராஜரட்னம் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கான கப்பல் சேவைக்கு ஈஸ்ட் வெஸ்ட் லிமிட்டட் அனுமதி கோரல்



ஒரு மாதிரி படகு(ferry)

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்ட உடன்பாட்டுக்கு அமைய ஆரம்பிக்கப்படவுள்ள கப்பல் சேவையின் கீழ் ,தலைமன்னாருக்கும் இந்தியாவின் இராமேஸ்வரத்துக்கும் இடையிலான கப்பல் சேவையில் ஈடுபட ஈஸ்ட் வெஸ்ட் பிரைவட் லிமிட்ட் நிறுவனம், இலங்கை முதலீட்டுச் சபையிடம் அனுமதி கோரி விண்ணப்பித்துள்ளதாக அந் நிறுவனத்தின் தலைவர் நிகால் விஜயசூரிய தெரிவித்துள்ளார்.

400 மில்லியன் ரூபாய் முதலீட்டிலான இத் திட்டம் முதலீட்டுச் சபை அனுமதியளித்ததும் அடுத்த 2 மாதங்களில் இச் சேவையை ஆரம்பிக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் தினமும் பெருமளவு வர்த்தகர்கள் ,சுற்றுலாப் பயணிகள், யாத்திரிகர்கள், மாணவர்கள் பயணம் செய்துவருகின்றனர்.

இவர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு இரு நாடுகளுக்கும் இடையிலான கடற்போக்குவரத்துச் சேவையை ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரத்தை ஜனாதிபதி சமர்ப்பித்திருந்தார்.

இதன் பிரகாரம் முதலில் கொழும்பு -தூத்துக்குடி மற்றும் தலைமன்னார்- இராமேஸ்வரம் இடையிலான கப்பல் சேவைகள் ஆரம்பிக்கப்படும். அதன்பின் ஏனைய துறைமுகங்களுக்கிடையிலான பயணிகள் கப்பல் சேவைகள் ஆரம்பிக்கப்படும். தற்போது இரு நாடுகளுக்கிடையிலும் விமானப் போக்குவரத்து சேவை மாத்திரமே இடம்பெற்றுவருகிறது. கடந்த 30 ஆண்டுகளாக கப்பல் சேவை இடம்பெறவில்லை. விமானத்தில் பயணம் செய்வதை விட குறைந்த செலவில் கப்பலில் பயணம் செய்ய வாய்ப்புக்கிட்டவுள்ளது.

### தல யாத்திரைக்கு இலவச விசா

இதேவேளை, இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு தல யாத்திரை மேற்கொள்கிறவர்களுக்கு இலவச விசா வழங்கும் நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ளது. இம்மாதம் முதலாம் திகதியிலிருந்து உடனடியாக அமுலுக்குவரும் வகையில் இத் திட்டம் நடைமுறைப்படுத் தப்பட்டுள்ளதாக 'கோபியோ' அமைப்புக்கும் இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தவிற்கும் இடையில்நடைபெற்றபேச்சுவார்த்தையை அடுத்து நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி யாத்திரை செல்பவர்கள் மத விவகார அமைச்சில் உறுதிக் கடிதமொன்றைபெற்றுக் கொடுப்பதன் மூலம் இலவச விசாவைப் பெற முடியும். ஆனால் குறைந்தது பத்துப் பேராவது ஒரு தடவையில் யாத்திரை செல்வதாக உறுதிப்படுத்த வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



இந்த ஆண்டில் இலங்கைக்கு 6 இலட்சமாவது சுற்றுலாப் பயணியாக இங்கிலாந்திலிருந்து வருகை தந்துள்ள நிக் டேவிஸ் மற்றும் அவரது மனைவி லேலா டேய்னி ஆகியோரை இலங்கை சுற்றுலாத்துறை தலைவர் டாக்டர் நாலக கொடஹேவா வரவேற்பதைப் படத்தில் காணலாம்.

இதேவேளை, இந்த ஆண்டின் முதல் 11 மாதங்களில் 5 இலட்சத்து 69 ஆயிரத்து 849 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளனர். இது கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் 3 இலட்சத்து 91 ஆயிரத்து 28ஆகக் காணப்பட்டது. இந்நிலையில், இந்த ஆண்டு கடந்த செவ்வாய்க்கிழமை 6 இலட்சமாவது சுற்றுலாப் பயணியின் வருகையுடன் இலங்கை சுற்றுலாத் துறை அது நிர்ணயித்த மைல்கல்லை எட்டியுள்ளது. அத்துடன் அடுத்த ஆண்டு 7 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் வருகை தருவர் என நாலக கொடஹேவா எதிர்பார்ப்பு வெளியிட்டுள்ளார்.




## வர்த்தக செய்தித் துளிகள்

### வர்த்தகம் செய்வதற்கான வழிகாட்டியை இலங்கை வெளியிட்டது

இலங்கையில் வர்த்தகம் செய்வதற்கான வழிகாட்டல்கள் அடங்கிய நூலை இலங்கை அரசாங்கம் வெளியிட்டுள்ளது. இந் நூலில் இலங்கையில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்பதற்கான வழிகாட்டல்கள் விரிவாக உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் முதல்பிரதி அண்மையில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ராலால் வழங்கப்பட்டது. 2011-ன் முதல் காலாண்டில் வெளியிடப்படவுள்ள இவ் வழிகாட்டயை இலங்கை மத்திய வங்கியில் பெற்றுக்கொள்ளலாம்.

### அம்பாந்தோட்டையில் சிறிலங்கா இன்சுரன்ஸின் 5 நட்சத்திர ஹோட்டல்

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அம்பாந்தோட்டையில் 5 நட்சத்திர ஹோட்டல் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. இதற்கு பொருத்தமான கட்டிட நிர்மாணத்துறை சார்ந்த நிறுவனங்களின் சேவையை எதிர்பார்த்து வார இறுதிப் பத்திரிகைகளில் விளம்பரங்களை வெளியிட்டுள்ளது. ஒரு பில்லியன் ரூபாயுக்கு மேற்பட்ட இச் செயற்திட்டம் குறைந்தது 5 வருட காலத்தில் முடிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### எச்.டி.எப்.சி வங்கி ரூ.125 மில். இலாபம்

2010 செப்ரெம்பர் 30-ம் திகதி முடிபடைந்த முதல் 9 மாதங்களுக்கு வரிக்குப் பிந்திய இலாபமாக 125 மில்லியன் ரூபாயை எச்.டி.எப்.சி வங்கி பதிவு செய்துள்ளது. இது 2009 இல் இதேகாலப்பகுதியில் 56 மில்லியனாகக் காணப்பட்டது என HDFC வங்கியின் தலைவர் திருமதி எஸ். விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.



இக்காலப் பகுதியில் வங்கியின் மொத்த வருமானம் 1.8 பில்லியன் ரூபாய் எனவும், இதேவேளை வங்கியில், நிலையான வைப்புகள் 16 வீதமும் சேமிப்பு வைப்புகள் 40 வீதமும் அதிகரித்துள்ளது எனவும் தெரிவித்தார்.

### 50 ஆயிரம் பேரை பணிக்கு அமர்த்துகிறது வொக்ஸ்வாகன்

ஐரோப்பாவின் முன்னணி மற்றும் மிகப்பெரும் கார் தயாரிப்பு நிறுவனமான ஜேர்மனியின் வொக்ஸ்வாகன் (Volkswagen Group) நிறுவனம் ,சர்வதேச ரீதியாக 50 ஆயிரம் பேரை புதிதாக பணியமர்த்தவுள்ளதாக தெரிவித்துள்ளது. ஜேர்மனியில் மட்டும் இது 5ஆயிரம் முதல் 6 ஆயிரம் என்ற எண்ணிக்கையில் இருக்கும்.

வொக்ஸ்வாகன் நிறுவனத்தில் தற்போதைக்கு 4 இலட்சம் பேர் பணிபுரிந்து வருவதாகவும், சர்வதேச அளவில் தங்கள் நிறுவனத் தயாரிப்புகளுக்கு தேவை மற்றும் புகழ் அதிகரித்து வருவதால் ஊழியர்களின் எண்ணக்கையை உயர்த்தத் திட்டமிட்டுள்ளதுடன், இதற்காக புதிதாக 50 பேர் பணிக்கு அமர்த்தப்படவுள்ளதுடன் இந்தியாவிலுள்ள உற்பத்தி மையத்தின் செயற்திறனும் அதிகரிக்கப்படும் என நிறுவனத்தின் உயர் அதிகாரி ஹேர்ஸ்ட் நியூமன் தெரிவித்துள்ளார்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

$ (வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 110:18 | 111.88 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 171.69 | 175.71 |
| யூரோ (ஐரோ. ஒன்றியம்) | 145.29 | 149.54 |
| சுவிஸ் பிராங் | 114.03 | 116.95 |
| கனேடிய டொலர் | 109.09 | 112.01 |
| அவுஸ்திரேலிய டொலர் | 108.44 | 111.63 |
| சிங்கப்பூர் டொலர் | 83.43 | 85.78 |
| ஜப்பான் யென் | 1.30 | 1.34 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.45 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 30.21 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி





மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால், புதிய கிறவுண் அளவிலமைந்த பலவர்ண வெள்ளி ரூ.5000 நாணயக் குத்தியை ஜனாதிபதிக்கு கடந்த புதன்கிழமை அலரி மாளிகையில் வைத்துக் கையளித்ததை படத்தில் காணலாம். இந் நாணயக்குத்தி வட்டவடிவானதாகவும் 38.61 மி.மீற்றர் விட்டமும் 28.28 கிராம் நிறை கொண்டதாகவும் காணப்படுகிறது. ம.வ. தனது 60-வது ஆண்டு நிறைவினைக் குறிக்கும் முகமாக வெளியிட்டுள்ள இந்நாணயக்குத்தி ,ம.வ. வெளியிட்ட நாணயக்குத்திகள் வரிசையில் 50-வது ஆகும்.

## பங்குச் சந்தை விபரம்

CSE COLOMBO STOCK EXCHANGE (வார இறுதியில்)

| துறை | கடந்த வாரம் | இந்த வாரம் |
|---|---|---|
| அனைத்துப் பங்கு விலைச்சுட்டி | 6432.75 | 6360.84 ⇩ |
| மிலங்கா விலைச்சுட்டி | 6885.45 | 6834.07 ⇩ |
| விலை அசைவுகளின் அடிப்படையில் | புரள்வு (ரூபா. மில்.) 11 360.85 | |


**உயர்வடைந்த பங்குகள்(ரூ.):** செலின்ஷிங்(465.00), திறி ஏக்கர் பாம்ஸ் (69.90), சிஜரி(210.80), சிங்கர் விலேஜ்(104.80), டேர்டன்ஸ்(99.60).

**சரிவைக் காட்டிய பங்குகள்(ரூ.):** எம்.ரி.டி. வோல்கர்ஸ்(84.80), சிங்கர் இன்.(115.10), நேஷன் லங்கா (18.30), மேர்ஷண்ட் சிப்பிங்(180.00), புளூ டைமன்ட்ஸ் (X) (1.90).

மேலதிக தகவல்கள்: www.cse.lk

## ரூ.20 ஆயிரம் கோடி மதிப்புள்ள பங்குகளை சமூக சேவைப் பணிக்கு வழங்கினார் பிரேம்ஜி

விப்ரோ நிறுவனத் தலைவர் அஜீம் பிரேம்ஜி தனது 8ஆயிரத்து 846 கோடி இந்திய ரூபாய் மதிப்புள்ள பங்குகளை சமூக சேவைப் பணிகளுக்காக அஜீம் பிரேம்ஜி பவுண்டேஷனுக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார். இதன் மூலம் விப்ரோ நிறுவனத்தில் அவருக்குச் சொந்தமாக இருந்த பங்குகளின் அளவு 79.36 சதவீதத்தில் இருந்து 72 சதவீதமாக குறைந்துள்ளது. அஜீம் பிரேம்ஜி பவுண்டேஷன் என்ற பெயரில் 2001 முதல் இயங்கும் இந்த சமூக சேவை அமைப்பு, இந்தியாவின் அடிப்படைக் கல்வித் தரத்தை மேம்படுத்தும் பணியில் தீவிரமாகவுள்ளது. இந்த அமைப்புக்கு ஏற்கெனவே பல கோடி ரூபாயை அஜீம் பிரேம்ஜி வழங்கியுள்ளார். இப்போது தனக்குச் சொந்தமான விப்ரோ பங்குகளில் 213 மில்லியன்(21.3கோடி) பங்குகளை



இந்த அறக்கட்டளைக்கு வழங்கியுள்ளார். அடுத்த ஆண்டு அஜீம் பிரேம்ஜிபல்கலைக்கழகத்தை இந்த அறக்கட்டளை சார்பில் தொடங்க திட்டமிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. மக்களின் அடிப்படைக் கல்வி மேம்பாட்டுப் பணிகளுக்கு பிரேம்ஜி நன்கொடை வழங்கியிருப்பதை அவரது சேவை மனப்பான்மைக்கு எடுத்துக்காட்டு என சர்வதேச ஊடகங்கள் வர்ணித்துள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடை, அலுவலக ஊழியர் சட்டத்தின் கீழ்

# ஊழியர்களதும் தொழில் வழங்குநர்களதும் உரித்துக்கள், கடப்பாடுகள், பொறுப்புக்கள்

(4)

### தொழில் வழங்குநர்களின் பொறுப்புக்களும் கடமைகளும்

1) ஊழியருக்கு நியமனக் கடிதத்தை வழங்குதல் வேண்டும். (கடை, அலுவலக ஊழியர் சட்டத்திற்கிணங்க)
2) சம்பளப் பதிவேடு, சேவைப் பதிவேடு என்பன பேணுதல் வேண்டும்.
3) வரவுப்பதிவேட்டினை பேணுதல் வேண்டும்.
4) சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு விடுப்புக்கள், வாரவிடுமுறைகள், ஆண்டு விடுமுறைகள், போயா விடுமுறைகள் வழங்கப்படுதல் வேண்டும்.
5) குறித்த சம்பளத்திற்குக் குறையாதளவு சம்பளத்தை வழங்குதல் வேண்டும்.
6) குறிப்பிட்டகாலம் கடப்பதற்கு முன்னர் சம்பளம் வழங்கப்படுதல் வேண்டும்.
7) ஊழியர் சேமலாப, ஊழியர் நம்பிக்கை நிதிக்கான உதவுதொகையினைச் செலுத்துதல் வேண்டும்.
8) சேவை முடிவுறுத்தப்படும் போது பணிக்கொடைகள் கொடுப்பனவுச் சட்டத்திற்கிணங்க வழங்குதல் வேண்டும்.
9) பிரசவ நலன்கள் சட்டத்திற்கமைய சம்பளத்துடனான விடுப்புக்கள் வழங்கி அது சம்பந்தமான "டீ" அறிக்கையினைப் பேணுதல் வேண்டும்.
10) பிரசவ விடுமுறை பெற்றுக்கொண்ட காலத்தின் பொருட்டு விடுமுறையைப் பெற்றுக் கொடுத்தல் வேண்டும்.
11) கர்ப்பமுற்றுள்ள பெண்களின் சுகாதாரத்திற்கும், கருவுக்கும் தீங்கேற்படாதவாறு அவர்களைச் சேவையில் ஈடுபடுத்துதல் வேண்டும்.
12) சட்டத்திற்கிணங்க பிரசவ நலன்களை வழங்குதல் வேண்டும்.
13) பிரசவத்தின் பின்னர் பாலூட்டுவதற்காக நாளொன்றுக்கு இரு தடவைகள் விடுமுறை வழங்குதல் வேண்டும்.
14) பிரசவத்தின் பொருட்டு பெற்றுக்கொள்ளப்படும் விடுமுறையை நீக்கி பெண்தொழிலாளிக்குரிய ஏனைய விடுமுறைகளில் பாதிப்பினை உண்டுபண்ணுதல் கூடாது.
15) 14 வயதுக்குக் குறைந்த எவரையும் சேவைக்கு அமர்த்துதல் கூடாது.
16) தொழில் ஆணையாளர் அல்லது அவருடைய பிரதிநிதி ஸ்தாபனத்தைப் பரீட்சிப்பதற்காக சமுகமளிக்குமிடத்து அவருக்கு இடையூறு செய்யக்கூடாது.
17) தொழில் ஆணையாளர் ஸ்தாபனத்தைப் பரீட்சிப்பதற்காக சமுகமளித்து புத்தகங்களையும் அறிக்கைகளையும் சமர்ப்பிக்குமாறு கேட்குமிடத்து அவற்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
18) ஊழியர் சேமலாபநிதிக்கும், ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு, நிதியத்திற்கும் உதவுதொகை செலுத்தப்படாமை தொடர்பான குறிப்பிட்ட அறிக்கைகளை மாதந்தோறும் குறிப்பிட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.
19) யாதேனும் தொழில் ரீதியான விபத்து ஏற்படுமிடத்து அது பற்றி உடனே தொழில் ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும்.
20) யாரேனும் ஊழியர் ஒருவர் தொழிற்திணைக்கள அதிகாரி ஒருவருக்கு விபரங்களைத் தெரிவித்தார் என்ற காரணத்திற்காக அவருக்கு தண்டனை எதுவும் வழங்கக் கூடாது.
21) ஊழியர்களில் 40% வீதத்துக்கு மேல் அங்கத்துவம் வகிக்கும் தொழில் சங்கம் ஒன்றை ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும். பேரப் பேச்சுவார்த்தையின் போது பங்குபற்ற அனுமதித்தல் வேண்டும்.
22) ஊழியர் ஒருவர் சம்பளச் சபை ஒன்றில் அல்லது தொழிற்சங்கம் ஒன்றில் அங்கத்தவராக இருத்தல் அல்லது அதில் பங்குபற்றுதல் காரணமாக அவருக்கு எதிராக நடவடிக்கை எதுவும் எடுத்தல் கூடாது.
23) ஊழியர் ஒருவருக்கு அல்லது ஊழியர்களுக்கு நன்மை பயக்கும் வண்ணம் தொழில் நியாயசபைகளினால் வழங்கப்படும் தீர்ப்புக்களை கைத்தொழில் நீதிமன்றின் தீர்ப்புக்களை மாற்றுமாறு கோரி அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது.

**க.கனகேஸ்வரன்**
உதவித்தொழில் ஆணையாளர்
மாவட்டத்தொழில் அலுவலகம் - யாழ்ப்பாணம்

24) தொழிற்சட்ட ஏற்பாடுகளைப் பற்றிய பூரண விளக்கங்களை தொழில் திணைக்கள அதிகாரிகளிடம் பெற்றுக் கொள்ளலாம். சட்ட ஏற்பாடுகள் பற்றிய அறிவின்மையை காரணங்காட்டி நிவாரணம் கோர முடியாது. (முற்றும்)

## வீடொன்றிலிருந்து மோட்டார்க்குண்டு மீட்பு

மட்டக்களப்பு தேர்த்தாலை பிரதேச வீடொன் றிலிருந்து நேற்று முன்தினம் மோட்டார் குண்டு மீட்கப்பட்டுள்ளது. குறித்த வீட்டின் உரிமையாளர் மரநடுகைக்காக குழியொன்றை தோண்டிக் கொண்டிருந்த போதே இக்குண்டு மீட்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட குண்டு கல்குடா பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்குடா பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (ஸ்ரீ-2)

# லியாம் பொக்ஸின் விஜயம் இரத்தானமைக்கு பிரிட்டன் வாழ் தமிழர்களே காரணம்

## சிங்கள ஊடகம் தெரிவிப்பு

(கொழும்பு)

பிரிட்டன் வாழ். தமிழர்களின் அழுத்தம் காரணமாக பாதுகாப்புச் செயலாளர் லியாம் பொக்ஸ் இலங்கைக்கான விஜயத்தை இரத்து செய்துள்ளதாக சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பிரிட்டனில் வாழ்ந்து வரும் தமிழர்கள் மற்றும் வெளிவிவகாரச் செயலாளர் வில்லியம் ஹேக் ஆகியோர் இலங்கைக்கு செல்லக் கூடாது என லியாம் பொக்ஸிற்கு அழுத்தங்களை பிரயோகித்துள்ளதாக அவ் ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளது.

நேற்றைய தினம் நடைபெறவிருந்த லக்ஷ்மன் கதிர்காமர் நினைவுச் சொற்பொழிவில் கலந்துகொள்வதற்காக லியாம் பொக்ஸ் இலங்கைக்கு விஜயம் செய்ய திட்டமிருந்தார். கதிர்காமரின் துணைவியார் லியாம் பொக்ஸிற்கு அவ்வழைப்பை விடுத்திருந்ததாகவும் அரசாங்கம் அழைப்புஎதனையும் விடுக்கவில்லை எனவும் குறிப்பிடப்படுகிறது.

லியாம் பொக்ஸ் இலங்கைக்கு விஜயம் செய்தால் கடுமையான எதிர்ப்பை வெளியிடப் போவதாக பிரிட்டன் தமிழர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை லக்ஸ்மன் கதிர்காமர் நினைவுச் சொற்பொழிவு கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-4)

## வருடாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர் வரும் 19.12.2010 ஞாயிற்றுக்கிழமை 9 மணிக்கு சங்கத்தின் தலைவர் திரு.ந.குகானந்தராஜா அவர்கள் தலைமையில் றிம்மர் மண்டபத்தில் (வேம்படி வீதி, யாழ்.பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில்) ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. தயவுசெய்து சங்க உறுப்பினர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**வடபிராந்திய முச்சக்கர மோட்டார் ஊர்தி சேவைச்சங்கம்**
முனீஸ்வரன் வீதி,
யாழ்ப்பாணம். T.p:- 021 320 5722
(3253)


ஈழத்து சிதம்பரத்தான் திருவடிக்கு
இன்று (19.12.2010) 7ஆம் நாள் உற்சவம்
(திருவெம்பாவை)

**இல்லையென்று இரப்போர்க்கு எல்லாம் தருபவனே!**

கங்கைத் தலையானே கருநீலம் உண்ட சிவனே
மங்கையவள் மீனாளின் மனத்தில் நிலைத்தவனே
ஆனைத்தோல் புலித்தோலால் அங்கம் மறைத்தவனே
வானை அளந்தவனே வண்டமிழைக் காப்பவனே
வில்லடியும் கல்லடியும் சொல்லடியும் பெற்றவனே
விருப்போடு அங்கமெலாம் நச்சரவம் பூண்டவனே
இல்லையென்று இரப்போர்க்கு எல்லாம் தருபவனே
ஈழத்து சிதம்பரத்தில் அருள் செய்து ஆள்பவனே!

மதுரகவி.காரை.எம்.பி.அருளானந்தன்.
(J- 1809)





உரும்பிராய் வடக்கு கணேசா சனசமூக நிலைய முன்பள்ளி மாண-வர்களின் கலைவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நிலை யத் தலைவர் ச.ஏகாம்பரநாதன் தலைமையுரை நிகழ்த்துவதையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட உரும்பிராய் இந்துக் கல்லூரி அதிபர் அ.ஈஸ்வரநாதன், சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட வலி.கிழக்கு மத்தியஸ்தர் சபைத் தவிசாளர் இ.மயில்வாகனம் ஆகியோர் அருகில் அமர்ந்திருப்பதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## சங்குநாதம்

### ஞாபகங்கள்

எங்கிருந்தோ வந்து
என்னமோ பண்ணியது...
அந்த சில்லென்ற மழைத்துளி
அதே ரோஜாச் செடியின் - ஓர்
இலை வழியே வழிந்தோடி - என்
இதயத்தில் இறுகிக் கிடந்த
நினைவுகள் ஒவ்வொன்றையும் சிலிர்த்து
நிற்கச் செய்து... வழுக்கிக் கொண்டு
உதட்டில் பட்டு - என்
உணர்வுகளுக்கு சுவையூட்டியது
ஏதோ ஓர் நினைவு என்னுள்
ஏனோ சோம்பல் முறிக்க
அந்த ஈரத்தை துடைக்காமலேயே
எழுந்து செல்கின்றேன்
வெட்கத்துடன்

பொலிகையூர்
ஸ்ரீ.சுனந்தன்

### கவலை வேண்டாம்

அழ வார்த்தைகளிருந்தும்
ஊமையாக அழுகின்றான்
பாசம் வைத்ததால்
புரியவில்லை எனக்கு
அவன் கண்ணீருக்கு
பதில் சொல்ல வைப்பேன்
அவன் வாழ்வுக்கு

இ.நர்மதன்
யா/காரணவாய்
பொன்னம்பல வித்தியாலயம்

### மனிதம்

ரோசங்களின் பயணக்
கைதியாகி
நிற்கும்
பாசங்களின்
வேசங்களை
யார் தான்
விடுவிப்பாரோ?

த.பிபிலிகன்

### கவிதைத் துளிகள்

**முடியாது**
தன்னம்பிக்கை அற்றவனின்
தளர்வடைந்த மனதின்
வார்த்தை....

**மழலை**
விடயம் விளங்காவிட்டாலும்
கேட்பவர் மனதை
மகிழவைக்கும் கானம்

எஸ்.ரிஷிகேஷன்
யாழ்ப்பாணம் இ.க

### ஏழ்மை

கதி கொண்டோடும் ஏழ்மையில்
சதி செய்யும் பணமே...
பதியே ஏனிந்த
படைப்பில் விசித்திரம்
சுதியில்லா ஓடும் - என்
வாழ்வின் விதியே...?

யாழ்.அஞ்சனா
கல்லுவம்

### ரணங்கள்

எப்படி
உன்னை
நான்
நிந்திப்பது...?
என்
கணங்களை
நீ ...
காவு கொண்டதால்
ரணங்கள்
மட்டுமே என்னிடம்
எஞ்சிப்போனது...

க.நாகேஸ்வரா
சண்டிலிப்பாய்

### தாழி...!

என்னவள்!
தீண்டிய இடத்தை
காற்றுக் கூடத் தீண்டக்
கூடாது என்பதற்காய் - நான்
அமைத்து வைத்துள்ள
இயற்கையான வேலி...!

து.திலக்
யாழ்ப்பாணம்

### இமயம் தொட...

தாமரையை நீரிலிருந்து
அறுப்பது போல
ஆசையினை - உன்
கையினாலேயே
அறுப்பாயாக...
என்றான் புத்தன்
சிறிய புதராகிய ஆசை
பின் அடர்ந்த காடாகி விடும்
ஆசை விடு - அதுவே
நல்வாழ்வுக்கான பயணம்

மாவை. நா.கஜேந்திரா

### கனவு

நிஜங்களை விட
கனவுகளையே நான்
அதிகம் விரும்புகிறேன்
ஏன் தெரியுமா?
கனவுலகில் தான் - நீ
நீண்ட நேரம்
அன்பை பரிமாறுகிறாய்
என்பதால்

கதிர்
நெடுந்தீவு



## மௌனத்தின் தேடல் - 49

### சுமைகள் உனக்கு!

என் தாய்க்குலம் பெற்ற
பிஞ்சுப் பிரபஞ்சமே!
சுமைகளை உன்னிடம்
சுமத்திவிட்டா உலகம்
கொண்டாடுகிறது
சிறுவர்தினம்?

பொ.கிருசாந்
சங்கானை

### வயிற்றுப்பசி போக்கிட...

சிறிய வயதானாலும் - தன்
சொந்தக் காலில்
நிற்க வேண்டும் என்று
எண்ணி விட்ட சிறுவனவன்
தள்ளுவண்டி ஓட்டுகின்றான்

கு.விஜிதன்
குமுழமுனை

### தவிப்பு!

தனிச் சக்கரத்தில் ஏறித்
தாவி வருகிறது விலையேற்றம்
தடுக்க வழிதேடி
தவிக்கிறது ஓர் இதயம்

வி.விலிஸ்
சாந்தை

### சுமை

யுத்தத்தின் கொடூரத்தால்
பெற்றோர்களை இழந்தான் -இன்று
பள்ளி செல்லும் வயதினிலே
சுமை வண்டிகளைத் தள்ளுகின்றான்..!

வல்லைச்சுமன்
வல்வெட்டித்துறை

### உறவு எங்கே

சுமையென இறக்கிவிட்டார்
உன்னை சுமந்தவர்கள்
நீயோ சுமைகளைத் தாங்கியபடி
உன் எதிர்காலத்திற்காய்

பா.ராதிகா
விசுவமடு

### வறுமை

பள்ளி செல்லும் பாலகனோ
வண்டி தள்ளிப்போகையிலே
வறுமை எனும் கொடிய பிணி
வழிவிழந்து போய்விடுமோ...?

சி.கௌசிகன்
யா/நெல்லியடி ம.ம.வி

பிஞ்சு வயதிலே
உழைப்பின் உயர்வை
உணர்ந்திட்ட - உந்தன்
எதிர்காலம்
ஒளிமயமாகும்

கி.சரண்யா
தாவடி

*சிதறிப்போன உலகில்*
*பூவின் சரித்திரம்*
*வேர்களிற்கு*
*உரமாகிப் போவதா?*

T.தாரணி
மூளாய்

### வலி

காடையரின் குண்டு வீச்சில்
உறவிழந்த பிஞ்சு ஒன்று
வறுமையின் கொடுமையால்
வலி சுமத்தல் காண்பீரோ?

சு.பிரதீப்
யா/வயாவிளான் ம.ம.வி

பிஞ்சுக் கரங்களால்
கொஞ்சும் வயிற்றுக்காய்
வண்டிதள்ளும் இந்த
குஞ்சு செய்த கொடுமை என்ன?

வி.சிவகௌரி
பருத்தித்துறை

### ஏன்?

எங்கள் உரிமைப் பிரகடனம்
மௌனமாகிப் போனதால்
சிலுவைச் சுமைகளை
யாரோ இவன் மேல்
சுமத்தி விட்டார்களோ?

சி.சிவதர்சினி
தெல்லிப்பளை

### சோதனை

வையகம் எங்கோ
சென்ற போதும்
படிப்படியான சுமைகளும்
சோதனைகளும் தான்
என் வாழ்வின் மிச்சம்...!

ஆரபி
யா/சுண்டுக்குளி மகளிர் கல்லூரி

### நம்பிக்கை

பிஞ்சுவிரல்களின்
வேதனை புரியுது
கலங்காதே தம்பி
பில்கேட்ஸ் கூட
பத்திரிகை விற்றிருக்கிறான்

தி.கோபிநாத்
மட்டுவில்

### விதி

வண்டி தள்ளியாவது
குடும்பத்தின்
வயிற்றை நிரப்ப வேண்டும்
என்ற நிலை
உனக்கும் வந்து விட்டதா?


பொ.ஞானகலை
பருத்தித்துறை

### விதியின் சதி

கரத்தில் பேனா - ஏந்த
வேண்டிய நேரத்தில்
வீதியில் நின்று
வண்டியுடன்
முட்டி மோதுகின்றானே!

வி.ஸிந்துஜா
கோப்பாய் வடக்கு

## சங்குநாதம் மௌனத்தின் தேடல்- 50



*அன்பு வாசகர்களே!*

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகளை

ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 24.12.2010 ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளிற்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழி மாத இராசி பலன்கள்




(சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3ஆம் பாதங்கள் வரை)

*விரயச்சனியால் விழிப்புணர்ச்சி தேவை!*

பணம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயறபடும் துலாம் ராசி நேயர்களே!

நீங்கள் உணர்வுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்களுக்கு மத்தியில் உணவுக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்கள். உல்லாசப் பயணம் என்றால் உங்களுக்கு அதிகம் பிடிக்கும். வீட்டில் விருந்தினர்களை, நண்பர்களை வரவேற்கும் அளவிற்கு உறவினர்களை வரவேற்கமாட்டீர்கள். எதையும் சிபாரிசு மூலம் செய்வீர்களே தவிர தானாக முன்வந்து செய்யத் தயங்குவீர்கள். நன்மை ஏற்படுமாயின் நீங்கள் பொய் சொல்லவும் துணிவீர்கள்.

மார்கழி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் ராசிக்கு ஆறாமிடம் வலுவடைகிறது. எனவே, எதிர்ப்புகள் மேலோங்கலாம். இல்லத்தில் அமைதி குறையாமலிருக்க எல்லோரையும் அனுசரித்துச் செல்வது நல்லது. ஏழரைச் சனியின் ஆதிக்கம் நடப்பதால், வீண் விரயங்கள் அலைமோதும். வீட்டில் உள்ளவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முன்வருவீர்கள்.

சகோதர ஸ்தானத்தில் "சகோதரகாரகன்" செவ்வாய் சஞ்சரித்தாலும், அத்தோடு சூரியன், இராகு இணைந்திருப்பதால் உறவை பகையாக்கும் சூழ்நிலை உண்டு. எனவே, அவர்களை அனுசரித்துச் சென்று உங்கள் ஆதாயத்தை அடைவது புத்திசாலித்தனமாகும். விரயாதிபதி இரண்டில் இருப்பதால் குடும்பச் செலவுகள் கூடும். குழப்பங்கள் அகல குறிப்பிட்ட தெய்வங்களை நீங்கள் தேர்ந்தெடுத்து வணங்குவது நல்லது.

**சுகம் தரும் சுக்ரப் பெயர்ச்சி!**

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி விருச்சிக ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக, புத-சுக்ர யோகம் செயற்படப்போவதால், பொருளாதார நிலையில் தேவைக்கேற்ப வரவு வந்து கொண்டேயிருக்கும். பெற்றோர் வழியில் உடல் ஆரோக்கியத்திற்காக ஒரு தொகையைச் செலவிடும் சூழ்நிலை உருவாகலாம். அது மட்டுமல்ல, வீட்டிற்கு தேவையான விலை உயர்ந்த பொருட்களையும் வாங்கி மகிழ்வீர்கள்.

உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு திடீர் மாற்றங்கள் உருவாகலாம். அதிகாரிகளை அனுசரித்துச் செல்வதன் மூலம் ஆதாயம் கிடைக்கும். மற்றவர்களை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது.

**மகிழ்ச்சியை வரவழைத்துக் கொடுக்கும் மகரச் செவ்வாய்!**

எதிர்வரும் ஜனவரி 6 ஆம் திகதி மகர இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப்போகிறார். நாலாமிடத்தில் செவ்வாய் சஞ்சரிக்கும் பொழுது, சில நல்ல வாய்ப்புகளை வரவழைத்துக் கொடுக்கும் என்றாலும், ஏழரைச்சனியில் ஆதிக்கம் நடப்பதால் எப்படி அதை உபயோகப்படுத்திக் கொள்வதென்று யோசிப்பீர்கள். இடம், பூமி வாங்குவதில் இருந்த தடை அகலும்.

**தனுசு புதனின் சஞ்சாரம்!**

எதிர்வரும் ஜனவரி 7 ஆம் திகதி தனுசு இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக, பெற்றோர்களின் பிரியம் மற்ற உடன் பிறப்புகள் மீதே அதிகமிருக்கும். கூடப் பிறந்தவர்கள் உங்கள் குரலுக்கு செவி சாய்க்க, அவர்களுடன் வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நல்லது. தொழில் வளர்ச்சி சீராக இருக்கும். மாமன், மைத்துனர் வழியில் ஒத்துழைப்போடு, வசதிகளைப் பெருக்கிக்கொள்வீர்கள்.

இம்மாதம் பெண் தெய்வ வழிபாடு உங்களுக்கு பெருமை சேர்க்கும். சனீஸ்வர வழிபாடு சந்தோஷம் வழங்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் ராசிநாதன் சுக்ரனும், அதற்கு பகைவனான வியாழனும் ஒரே நேரத்தில் சொந்த வீடுகளில் சஞ்சரிக்கிறார்கள். எனவே, எதிலும் கவனத்துடன் செயற்படுவது நல்லது. வரவு வந்த மறுநிமிடமே செலவாகலாம். இரண்டாவது சுற்று சனி நடப்பவர்கள் வீடு மாற்றங்களைச் சந்திக்க நேரிடும். உடன் பிறப்புகளை அனுசரித்துச் செல்வது நல்லது. கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடு அகல விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது. பிள்ளைகள் வழியில் ஏற்பட்ட பிரச்சினைகள் அகலும். மாதக்கடைசியில் பயணங்களால் பலன் கிடைக்கும்.




(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை வரை)

*வெற்றிச் செய்திகள் வீடுதேடி வந்து சேரும்!*

**நல்லது நடக்க, நல்லது சொல்வோம் என்று சொல்லும் விருச்சிக ராசி நேயர்களே!**

நீங்கள் புகழ் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படுபவர்கள். தகராறு செய்பவர்கள் கூட உங்கள் பேச்சைக் கேட்டால் தானாக வந்துசரணடைவர். எடுத்த காரியத்தை எப்படி முடிக்கலாம் என்ற எண்ணம் எப்பொழுதும் உங்கள் மனதில் ஓடிக்கொண்டேயிருக்கும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவதில் வல்லவர்களாக விளங்குவீர்கள்.

மார்கழி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, பார்க்கும் குருவின் பலத்தால் பலவித நன்மைகளை நீங்கள் அடையப்போகிறீர்கள். குறிப்பாக, குரு பார்வை இருப்பதால் குழப்பங்கள் தீரும். குதூகலம் அதிகரிக்கும். இழப்புகளை ஈடுசெய்ய எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும், உழைப்புக்கேற்ற பலன் உங்களைத் தேடி வரப்போகிறது.

வசதி, வாய்ப்புகளைப் பெருக்கிக் கொள்ள முன்வருவீர்கள். வரன்களும் வாயில் தேடி வந்து சேரும். கரங்குளிர கொடுக்கும் வள்ளல்களின் துணை உங்களுக்கு இருப்பதால், தொழில் வளர்ச்சி கூடும். தொகை வரவில் ஒரு பகுதி சேமிப்பாகும் . பெற்றோர் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும். பொது வாழ்விலும் உங்களுக்கு புதிய பொறுப்புகளும், பதவிகளும் வந்து சேரலாம்.

**சுகங்களும், சந்தோஷங்களும் வந்து சேரும்!**

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி விருச்சிக ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக வாகன யோகம் அதிகரிக்கும். வங்கிச் சேமிப்பு உயரும். ஆடை, ஆபரணங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளிலும் ஆதாயம் கிடைக்கும்.

மனைவி வழியில் எதிர்பார்த்தபடி நற்பலன் வந்து சேரும். வாழ்க்கைத் துணைக்கு உத்தியோகம் சம்பந்தமாக எடுத்த முயற்சிக்கும், தொழில் தொடங்குவதற்காக எடுத்த முயற்சிக்கும் வி.ஐ.பி.க்கள் ஒத்துழைப்புச் செய்வர். தூரதேசத்தில் இருந்து வரும் தொலைபேசி வழி தகவல் மகிழ்ச்சியை வழங்கும்.

**உச்ச செவ்வாயால் உயர்வு கிடைக்கும் நேரம்!**

எதிர்வரும் ஜனவரி 6ஆம் திகதி சகாய ஸ்தானத்தில் செவ்வாய் உச்சம் பெறுகிறார். இந்த நேரத்தில் வீடு கட்டும் முயற்சி வெற்றி தரும். விரும்பிய காரியத்தை விரும்பியபடியே செய்து முடிப்பீர்கள். சகோதர ஒற்றுமை பலப்படும். புதிய ஒப்பந்தங்கள் வந்து சேரும். குடும்ப உறுப்பினர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து மகிழ்வீர்கள். முருகப் பெருமான் வழிபாடு உங்கள் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக இருக்கும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

எதிர்வரும் ஜனவரி 7ஆம் திகதி தனுசு இராசியில் புதன் சஞ்சரிக்கப்போகிறார். தனஸ்தானத்தில் இலாபாதிபதி புதன் சஞ்சரிக்கும் பொழுது, தன வரவு அதிகரிக்கும். பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும். தொழில் ரீதியாக புதிய பங்குதாரர்களை இணைத்துக் கொண்டு செயற்படுவீர்கள். பொருளாதார நிலை உயரும் இந்த நேரத்தில் உற்றார், உறவினர்கள் உங்கள் முன்னேற்றம் கண்டுவியப்பர்.

**சிவல்புரி சிங்காரம்**

இம்மாதம் விநாயகப்பெருமான் வழிபாடு, உங்கள் விருப்பங்களை நிறைவேற்றும். அத்தோடு, மாருதி வழிபாடு உங்களுக்கு மகிழ்ச்சியை வரவழைத்துக் கொடுக்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் இனிய மாதமாக உங்களுக்கு அமையும். தொட்ட காரியங்களில் உங்களுக்கு வெற்றி கிடைக்கும். வரவு இருமடங்காகும். வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். கனவு பலிதமுண்டு. கல்யாண வாய்ப்புகள் கைகூடி வரும் கணவன் மனைவிக்குள் கனிவு கூடும். உங்கள் பெயரிலேயே இடம் வாங்குவதற்கு ஏற்பாடு செய்வர். பௌர்ணமி கிரிவலம் பலன் தரும். (தொடரும்)

# இலங்கைக்கு அதிகளவு உதவிகள் வழங்கப்படும்

## உலக வங்கி அறிவிப்பு

இலங்கைக்கு அதிகளவு உதவிகள் வழங்கப்படும் என உலக வங்கி அறிவித்துள்ளது. இரண்டு நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள உலக வங்கியின் முகாமைத்துவ பணிப்பாளர் டாக்டர் நகோஸி ஒகான்ஜோ இவெல்லா இதனைத் தெரிவித்துள்ளார். மத்திய வருமானத்தை ஈட்டும் இலங்கைக்கு கூடுதலான நிதி உதவிகள் வழங்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். நிலையான சமாதானத்தை ஏற்படுத்த மேற்கொள்ளப்படும் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார். உலக வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்று முன்தினம் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

உலக நாடுகளுடன் போட்டியிடக் கூடிய வகையில் இலங்கையின் பொருளாதார செயற்பாடுகள் அமைய வேண்டுமென இவெல்லா தெரிவித்துள்ளார். இதேவேளை உலக வங்கியினால் வழங்கப்படும் ஆதரவிற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நன்றி பாராட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# நீதிமன்ற வளாகத்தில் பிறந்தநாள் கொண்டாடிய சரத் பொன்சேகா

(கொழும்பு)

முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா நேற்று முன்தினம் தனது 60 ஆவது பிறந்த தினத்தை புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் தனது அன்புக்குரியவர்கள், ஆதரவாளர்கள், சட்டத்தரணிகளுடன் கொண்டாடினார்.

இரு வருட சிறைத்தண்டனை அனுபவிக்கும் சரத் பொன்சேகா நேற்று முன்தினம் நீதிமன்ற வளாகத்திற்கு வந்தபோது இச் சிறிய கொண்டாட்டம் நடத்தப்பட்டது.

கேக் ஒன்றை வெட்டிய சரத் பொன்சேகா அதை தனது சட்டத்தரணிகளுக்கும் ஆதரவாளர்களுக்கும் பகிர்ந்தளித்தார். (ஸ்ரீ)



வடமராட்சி வலய முன்பள்ளி ஆசிரியர்களுக்கான டிப்ளோமா பயிற்சி வகுப்பை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இதில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா மங்கல விளக்கேற்றுவதையும் வடமாகாண கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் உரையாற்றுவதையும் மேடையில் இடமிருந்து வலமாக வடமாகாண முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் ஜெயா தம்பையா, சித்திரப்பாட வளவாளர் ரி.ஜெயதீபன், குழந்தை உளவியல் விரிவுரையாளர் மு.கனகலிங்கம், ஆறுதல் நிறைவேற்றுப் பணிப்பாளர் சுந்தரம் திவகலாலா, பருத்தித்துறைக் கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதன், வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா ஆகியோர் அமர்ந்திருப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட ஆசிரியர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-அல்வாய் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சினால் சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுக்கும் நோக்குடன் யாழ்.வலயக் கல்வி அலுவலகத்திலிருந்து நடை பவனி ஒன்று நேற்று முன்தினம் நடை பெற்றுள்ளது. இந்நிகழ்வில் பிரதேச செயலக முன்பிள்ளைப் பருவ உத்தியோகத்தர்களுடன் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் நிற்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட முன்பள்ளி ஆசிரியர்களையும் படத்தில் காணலாம்.
(படங்கள்:-என்.குமார்)

# அரசசார்பற்ற அமைப்புக்கள் ஆட்குறைப்பில் தீவிரம்

(கொழும்பு)

அரசசார்பற்ற அமைப்புக்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் குறையத் தொடங்கியுள்ள நிலையில் பெரும்பாலான அலுவலகங்கள் ஆட்குறைப்பினில் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

வன்னியில் இயங்கி வந்த ஐ.நா உதவி அமைப்புக்கள் மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என்பவை ஏற்கனவே அலுவலகங்களை இழுத்து மூடிவிட்டன.

எனினும் அங்கு பணியாற்றிய பணியாளர்களை வவுனியா மற்றும் யாழ்ப்பாணத்தில் இணைத்து வேலைகள் வழங்கப்பட்டுள்ளது.

வன்னி மாவட்டத்தில் மீண்டும் இவ் அமைப்புக்கள் இயங்க பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத்து வருகின்றது.

இதனிடையே ஐ.நா. உதவி அமைப்புக்களிடமிருந்தான நிதியைப் பெற்று செயற்பட்டு வரும் உள்ளூர் அரசசார்பற்ற அமைப்புக்களும் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளன.

இந்நிறுவனங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் கைவிடப்பட்டுள்ளமையாலேயே புதிய திட்டங்களை முன்னெடுக்க முடியாது அவை திண்டாடுகின்றன.

(ஸ்ரீ-2)

# கட்சித் தலைமைப் பதவிக்காக எவரும் இதுவரை விண்ணப்பிக்கவில்லை

## ஐ.தே.க.தெரிவிப்பு

(கொழும்பு)

கட்சித் தலைமைப் பதவிக்காக எவரும் இதுவரையில் விண்ணப்பிக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

கடந்த 12 ஆம் திகதி நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களுக்கு அமைய ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் முக்கிய பதவிகளுக்காக போட்டியிட்டால் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனடிப்படையில் கட்சியின் ஐந்து முக்கிய பதவிகளில் ஏதாவது ஒன்றிற்காக ஒன்றுக்கும் மேற்பட்டவர்கள் போட்டியிட்டால் மட்டும் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படும் என கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

கட்சியின் முக்கிய பதவிகளில் மாற்றத்தை ஏற்படுத்துவதனை மட்டும் இலக்காக வைத்து கட்சியின் பொதுச் சபைக் கூட்டம் நடத்தப்படவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கட்சியை வெற்றிப் பாதைக்கு இட்டுச் செல்லும் மறுசீரமைப்பு திட்டங்கள் அமுல்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)



உரும்பிராய் பிரதேச சபையினரால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மரம் நாட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட சமாதான நீதவான் ச.ஏகாம்பரநாதன் மரக்கன்று ஒன்றை நாட்டுவதையும் பொறுப்பதிகாரி திருமதி ஜெகதீஸ்வரி சிவகுமாரன் மற்றும் பிரதேச ஊழியர்களையும் படத்தில் காணலாம்.

2010.12
19

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 0324 - லிசீனியஸ் உரோமப் பதவியைத் துறந்தான்.
- 1154 - இங்கிலாந்தின் இரண்டாம் ஹென்றி முடிசூடினான்.
- 1606 - ஐக்கிய அமெரிக்காவின் 13 குடியேற்ற நாடுகளில் முதலாவதான வெர்ஜீனியாவின் ஜேம்ஸ்டவுன் நகரில் இங்கிலாந்தில் இருந்து மூன்று கப்பல்களில் ஆங்கிலேயர்கள் வந்திறங்கினர்.
- 1871 - யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக கத்தோலிக்க மதகுருப் பதவிகள் (ordination) வழங்கப்பட்டன.
- 1877 - யாழ்ப்பாணம், நெடுந்தீவில் வாந்திபேதி மற்றும் சின்னம்மை நோய் பரவியதில் பலர் இறந்தனர்.
- 1907 - பென்சில்வேனியாவில் நிலக்கரிச் சுரங்கத்தில் இடம்பெற்ற குண்டு வெடிப்பில் 239 பேர் கொல்லப்பட்டனர்.
- 1916 - முதலாம் உலகப் போர்: பிரான்சில் வேர்டன் என்ற இடத்தில் இடம்பெற்ற சமரில் ஜெர்மனியப் படைகளை பிரெஞ்சுப் படைகள் தோற்கடித்தன.
- 1941 - அடொல்ஃப் ஹிட்லர் ஜெர்மனிய இராணுவத் தலைவர் ஆனார்.
- 1961 - போர்த்துகீச குடியேற்ற நாடான டாமன் டையூ பகுதியை இந்தியா தன்னுடன் இணைத்துக்கொண்டது.
- 1963 - சன்சிபார் ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து விடுதலை பெற்று சுல்தான் ஹமூட் பின் முகமது தலைமையில் முடியாட்சியைப் பெற்றது.
- 1972 - சந்திரனுக்கு கடைசித் தடவையாக மனிதரை ஏற்றிச் சென்ற அப்பல்லோ 17 பாதுகாப்பாக பூமி திரும்பியது.
- 1983 - உலகக்கோப்பை காற்பந்துப் போட்டியில் வழங்கப்படும் பரிசுக் கிண்ணம் பிரேசிலில் அந்நாட்டு காற்பந்தாட்ட அமைப்பின் தலைமையகத்தில் வைத்துத் திருடப்பட்டது.
- 1984 - ஹொங்ஹொங்கின் ஆட்சியை ஜூலை முதலாம் திகதி 1997 இல் மக்கள் சீனக் குடியரசிடம் மீண்டும் ஒப்படைக்கும் ஒப்பந்தம் சீனத் தலைவர் டெங்க்ஸியா வோபிங், பிரித்தானியப் பிரதமர் மார்க்ரெட் தாட்சர் ஆகியோருக்கிடையில் கைச்சாத்திடப்பட்டது.
- 1986 - சோவியத் எதிர்ப்பாளி அந்திரேய் சாகரொவ் வீட்டுக்காவலில் இருந்து விடுவிக்கப்பட்டார்.
- 1997 - இந்தோனேசியாவில் விமானம் ஒன்று வீழ்ந்து நொருங்கியதில் 104 பேர் கொல்லப்பட்டனர்.
- 1997 - டைட்டானிக் திரைப்படம் வெளியானது.
- 2000 - யாழ்ப்பாணம் மிருசுவில் பகுதியில் 3 வயதுக் குழந்தை உட்பட 8 பொது மக்கள் இலங்கை இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

## பிறப்புகள்

- 1901 - ருடால்ப் ஹெல், ஜேர்மனிய கண்டுபிடிப்பாளர் (இ.2002)
- 1906 - லியோனிட் பிரெஷ்னேவ், சோவியத் ஒன்றியத் தலைவர் (இ.1982)
- 1922 - கே.அன்பழகன், தமிழக அரசியல்வாதி
- 1934 - பிரதீபாபாட்டீல், இந்தியாவின் 12ஆவது குடியரசுத் தலைவர்.
- 1974 - ரிக்கி பொண்டிங், அவுஸ்திரேலியத்துடுப்பாட்டக்காரர்

**1967-கடலில் நீந்தும்போது காணாமல் போன அவுஸ்திரேலியப் பிரதமர் ஹரல்ட் ஹோல்ட் இறந்து விட்டதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரை விமர்சனம்

# சனிக்கிழமை சாயங்காலம் 5 மணி

'மதுரை டூ தேனி' என்ற படத்தை கொடுத்த அதே குழு இந்தப் படத்தைக் கொடுத்திருக் கிறது. HDSLR கேமராவில் எடுக்கப்பட்ட முதல் திரைப் படம் என்பதால் இந்த திரைப்படம் லிம்கா உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது. சரி



கதைக்கு வருவோம்...... சக்தியாக சரத், மகாவாக மாலினி.சக்தியும்மகாவும்காதலிக்கிறாள்கள்.எதற் காக? எப்படி? இதெல்லாம் கேட்கக் கூடாது..... காதலிக் கிறார்கள் அவ்வளவுதான்.

மகாவின் வீட்டில் திருமணம் நிச்சயிக்கப்படு கிறது. அதற்குள்ளாக வீட்டைவிட்டு சக்தியுடன் ஓடிப்போக முடிவெடுக்கிறார் மகா. ஆனால் சக் தியோ பயப்படுகிறார். மாலை 5 மணிக்கு வந்து சேர்ந்து விடுவேன் என்று சொல்லி பஸ் ஸில் புறப்பட்ட மகா இன்னும் வந்து சேர வில்லை..... என்ன ஆனது மகாவிற்கு ? விபத்தா? கொலையா? தற்கொலையா? கற் பழிப் பா? இப்படி பல குழப் பங்கள்..... பல கேள் விகள்...... இதற்கெல்லாம் விடை சொல் கிறது படத்தின் இரண்டாம் பாதி.



படத்தின் க்ளைமாக்ஸ் கொலை யுடன் முடிகிறது. சொல்லப்பட்ட விடயம் சீரியசான விடயமாக இருந் தாலும் அதில் அழுத்தம் கொஞ்சம் கம்மி. கிராமத்து திரு விழா வில் பார்த் தவுடன் பத்திக்கிற காதல்.... காதல் வந்ததும் லொகேஷன் மாறி டூயட் பாடு வது என பழைய பஞ்சாங்கத்தை தவிர்த் திருக்கலாம்.

முதல் பாதியில் காதலியை காண வில்லை என்றவுடன் ஹீரோ மைதா மாவு மாதிரி உட்கார்ந்து யோசித்துக் கொண்டிருப்பது எரிச்சல். இரண்டாவது பாதியில் அதே ஹீரோவின் அதிரடித் தேடல் ஆறுதல்.

காமெடிக் காட்சிகளை இன்னும் அதிகப்படுத்தி யிருக்கலாம். கண்ணாடி கோபியாக வரும் ரதிபாலா வின் காமெடிகள் சொல்லும் படி இல்லை, கொஞ்சம் சிரிக்க வைக்கிறார்.

படத்தின் இசை பாராட்டும் படி யாகவே இருந்தது. ஜேவியின் இசை காட்சிக்கு ஏற்ற இசையமைப்பு. பாடல்களிலும் பரவா யில்லை.

கொடைக்கானல் மலையை கதைக்கு ஏற்ப ரொம்பவும் அழகாக பயன்படுத்தி இருக்கிறார் ஒளிப்பதிவாளர் எஸ்.பி.எஸ்.குகன்.

சனிக்கிழமை சாயங்காலம் 5மணி-சுமரான படம்.

# தமிழர்களின் அன்புக்கு நன்றி -ஐஸ்



சென்னையே மவுண்ட் ரோடின் எக்ஸ்பிரஸ் அவென்யூ வில் திரண்டு இருந்தது. லாங்கி நேஸ் வாட்ச் ஷோ ரூமை திறந்து வைக்க சென்னைக்கு வந்திருந்தார் ஐஸ்வர்யா ராய். விழாவுக்கு வரக்கொஞ்சம் தாம தம் ஆனாலும் ஐஸின் ஐஸ்கிரீம் சிரிப்பை பார்த்தவுடன் கரைந்து போனது கூட்டம். கறுப்பு உடை யில்வந்திருந்தார் இந்த வெள்ளை தேவதை. கூட் டத்தைப் பார்த்து கையசைப்பதும் கைகளைத் தட்டுவதும் என ஐஸ் ஒரே உற்சாகம்.

பேசுவதற்காக மைக்கை பிடித்ததும் அழகி வணக்கம் என்று உச்சரித்தார். குட்டீஸ் முதல் பாட்டீஸ் வரை வந்திருந்த மக்கள் குதூ கலமாக குரல் எழுப் பினர். தாமதமாக வந்ததற்காக என்னை மன்னித்து விடுங்கள். என்னை பார்க்க வந்த அனைவருக்கும் நன்றி.

இதேபோல் தொடர்ந்து உங்கள் ஆத ரவு எனக்கு வேண்டும். உங்களை சந்தித்ததில் எனக்கும் ரொம்ப சந்தோஷம்.

சென்னையில் இருப்பது என் வீட்டில் இருப்பதைப் போல் நான் எப் போதுமே உணர்கிறேன். சென்னை ரசிகர்களை நான் எப்போதும் நேசிக்கிறேன். அவர்கள் அன்புக்கு நன்றி. நான் நடித்த படங்களான இராவணன், எந்திரன் படங்களுக்கு நீங்கள் அளித்த ஆதரவுக்கும் நன்றி என்றார்.




# நல்லவங்க நயன்தாரா... அண்ணன் பிரபுதேவா!



ஹன்சிகா மோட்வானி.... அம்மணி நடித்து இன்னும் தமிழில் ஒரு படம் கூட வெளிவரவில்லை. ஆனால அதற் குள் மின்மினு பப்ளிசிட் டி! 'பிரபு தேவாவை நயன்தாராவிடம் இருந்து பிரித்துவிட்டார்', 'ஏகப்பட்ட வெயிட் போட்டு விட்டதால் பிரபுதேவா கடிந்து கொண்டார்' ,விஜய் வேண்டி விரும்பி தனது அடுத்த படத்துக்கு ஹன்சிகாவை தெரிவு செய்தார்' என்று திக்கென்றுக்கு திடுக் தகவல் ஹன்சிகா விடமே விசாரித் தேன்..... 'எக்கச்சக்க வெயிட் போட்டதால் பிரபுதேவா உங்க கிட்ட கோபிச்சுக் கிட்டாராமே!"

'எனக்கு 19 வயதுதான் ஆகுது. எல்லாத்தையும் சாப்பிடும் வயது என்று அம்மா எதையாவது செய்து கொடுத்துட்டே இருப்பாங்க. அதனால் சில நேரம் டயட் மீறி வெயிட் போட்டுடுவேன். சில பேர்சனல் காரணங்களால் *எங்கேயும் காதல்* ஷூட் டிங்குக்கு பிரேக் விட்டிருந்தாங்க. நான் வழக்கம்போல டயட் கொன்ட்ரோல் இல்லாம வெயிட் போட்டுட்டேன். ஷூட்டிங் ஆரம்பிச்சப்போ என்னைப் பார்த்த பிரபு தேவா சார் ஏன் இவ்ளோ வெயிட்? நாலே நாள் டைம்..... வெயிட் குறைஞ்சிருக் கணும்னு திட்டிட்டார். நான் ரொம்ப பயந்துட்டேன். இப்போ நான் டயட்ல ரொம்ப ஸ்ட்ரிக்ட்1

'உங்களுக்கும் பிரபுதேவாவுக் கும் லவ்ஸ்..... கோபத்தில நயன்தாரா உங்களை ஷூட் டிங் ஸ்பொட்டுக்கே வந்து கன்னத்தில் அறைஞ்சாங்களாமே?" அதெல்லாம் அண் ணாவுக்கு இருக்கிற மரியாதையைக் கெடுக்கிறதுக்காக பரப்பப்பட்ட வதந்தி. (அண் ணாவா?!) பிடிச்சவங்க மேல அன்பும் அக்கறையும் காட்டுற அற்புதமான பெண் நயன்தாரா. பிரபுதேவா - நயன்தாராவுக்கு நடுவில் என்னை ஏன் வம்புக்கு இழுத்து வேடிக்கை பார்க்கிறார்கள் என்று தெரியலை. நான் இன்னும் ரொம்ப தூரம் போகணும். எனக்குத் தமிழ் தெரியாது என்பதால் ஒவ்வொரு விடயத்தையும் பொறு மையா சொல்லிக்கொடுத்தார் பிரபு அண்ணா. இப்ப எங்க குடும்பத்தில் இன் னொரு மக னாகவே மாறிட்டார். நான், என் அண்ணா, பிரபு அண்ணா சேர்த்து இப்ப எங்க அம்மாவுக்கு மூணு பிள்ளைங்க. இனிமே இப்படி எல்லாம் தப்பாப் பேசாதீங்க. ப்ளீஸ்.... காட் ப்ளஸ் யூ!"

# வரும்... ஆனா வராது! வெயிட்டிங் லிஸ்டில் விஜய்




*காவலன்* படத்தை எப்படியாவது இந்த மாதம் வெளியிட வேண்டும் என்று எவ்வளவோ பேரா டினார் விஜய். ஆனால் முயற்சிகள் வீண் போனதுதான் மிச்சம். சென்னையில் மட்டும் திரை யரங்குகள் கிடைத்த நிலையில் பரவாயில்லை ரிலீஸ் பண்ணுவோம் என்று சொல்லிவிட்டார்.....

ஆனால் ரசிகர் மன்ற ரசிகர்கள் விடவில்லை. தலைவர் படத்துக்கு இந்த நிலைமையா? படம் லேட்டா வந் தாலும் பரவாயில்லை ஆனால் தமிழகமெங்கும் படத்தை ரிலிஸ் செய்யவேண்டும் என்று தங்களின் குமுறலை தெரிவித்திருக்கிறார்கள். இதை தொடர்ந்து பொங்கலுக்கு படம் வரும் என்று சொல்லி விட்டார் விஜய். ஆனா எந்த பொங்கலுக்கு என்று தான் தெரியவில்லை விஜய் .நிலைமையை பார்த்தால் அடுத்தப் பொங்கலுக்கு தான் படத்தை ரிலீஸ் செய்ய முடியும் போல இருக்கு. இதற்கு அரசியல் ரீதியாக பல காரணங்கள் சொல்லப்பட்டாலும் திரையரங்குகளின் உண்மை நிலைமை என்ன என்று பார்த்தால்.....

கிறிஸ்துமசுக்கு உதயநிதி தயாரிப்பில் கமல், திரிஷா நடிக்கும் மன்மதன் அம்பு வெளியாகிறது. மன்மதன் அம்பு படத் திற்காகத்தான் விஜய்யை ஓரம் கட்டி விட்டன திரையரங்குகள். விஜய்யின் ஐந்து தோல்வி படங்களால் திரையரங்க உரிமையாளர்களுக்கு கோபம் இன்னும் நீடித்த நிலையில் இருக்கிறது என்பது இன் னொரு காரணம். தற்போது சென்சர் முடிந்துள்ள நிலையில் மன்மதன் அம்பு படத்திற்கான ரிலீஸ் வேலைகளில் தீவிரமாக இருந்து வருகிறார் கே.எஸ்.ரவிக்குமார். மன்மதன் அம்புவை இந்த மாதம் எப்படியாவது வெளியிட வேண்டும் என்பது இயக்குநருக்கு உதயநிதி போட்ட கட்டளை.

ஆனால் இவ்வளவு சிக்கல்களுக்கு மத்தியிலும் மன்மதன் அம்புவிற்கு முன்பாகவே இந்த மாதம் 17 ஆம் திகதி தன ஈசன் படத்தை தில்லாக வெளியிடு கிறார் சசிக்குமார்.சசிக்குமாரின் இயக்கத்தில் வெளிவந்து திரையிட்ட அனைத்துத் திரையரங்கிலும் 100 நாட் கள்வெற்றியைக் கண்டது சுப்பிரமணியபுரம். சசிக்குமார் நடித்த நாடோடிகள், தயாரித்த பசங்க என மூன்று படங்களும் திரையரங்க உரிமை யாளர்களுக்கு ஏமாற் றம் இல்லாத படங்களா கவே அமைந்தன. அதனால் தான் இப் பொழுதும் 'ஈசன்' படத்துக்கு கைகொடுத் திருக்கிறது திரையரங் கங்கள்.சரி இது ஒரு புறம் இருக் கட்டும். பொங்கலுக்காவது விஜய்க்கு வழி விடு வார்களா என்று பார்த் தால் இப்போதைக்கு அதுவும் நடக்காது என்றே சொல்ல லாம். ஏனென்றால் சன் பிக்சர்சின் தயா ரிப்பில் தனுஷ் நடிக் கும் ஆடுகளம் படத்திற் காக திரையரங்குகள் ஏற்கனவே முடிவாகி விட் டன. அது மட்டுமில்லாது விரைவில் இசை வெளியீடு நடக்க இருக்கும் சிறுத்தை படம் பொங் கலுக்கு ரிலீசா கிறது. வியாபார விடயத்தில் முதல் படம் தொடங்கி நம் பிக்கை நட்சத்திரமாகவே இருந்து வருகிறார் கார்த்தி .கார்த்தியின் கடந்த இரண்டு படங் களையும் வெளியிட்டது கிளவுட் நைன் தான். அதனால் இந்த படத்தையும் கிளவுட் நைன்வாங்க வாய்ப்பிருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. காவலன் பொறுத்த வரை வரும்.. ஆனா வராது என்ற நிலைதான். ஆக இப்படி பல விடயங்களால் வெயிட்டிங் லிஸ்டுக்கு தள்ளப் பட்டிருக்கிறார் விஜய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காரைநகர் மணிவாசகர் சபையின் 56 ஆவது ஆண்டுவிழா காரைதீவு ஈழத்து சிதம்பரத்தில் நேற்று முன்தினம் பண்டிதர் மு.சு.வேலாயுதம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் ஆரம்ப உரையினை நல்லை திருஞானசம்பந்த ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் நிகழ்த்துவதையும் செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவதையும் பாராளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன், லண்டன் மெய்கண்டார் ஆதீனத்தலைவர் தவத்திரு யோகானந்தடிகள் ஆகியோர் சமய பாடபரீட்சையில் முதலிடம் பெற்றோருக்கு தங்கப் பதக்கம் அணிவித்து கௌரவிப்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- காரைநகர் செய்தியாளர்)

# பொது மக்களுக்கு எடுத்துக்காட்டாக தலைவர்கள் விளங்க வேண்டும்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

தலைவர்கள் பொது மக்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாட்டைக் காட்டிக் கொடுப்பதற்கு யாருக்கும் இடமளிக்க முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாந்தோட்டையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

விவசாயம் தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர், முன்னொரு காலத்தில் இலங்கை மறந்திருந்த ஒரு துறையை மேம்படுத்துவதற்கு தற்போது அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2-9)

## உப்புக்கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு நட்டஈட்டுக் கொடுப்பனவு

வவுனியா மாவட்ட தொழிற்காரியாலயத்தில் நட்டஈடு பெறுவதற்கு பெயர் பதிவு செய்த லங்கா உப்புக் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான காசோலை எதிர்வரும் 22,23 ஆம் திகதிகளில் வழங்கப்படவுள்ளது.

உரியவர்கள் இவ்விரு நாட்களிலும் வவுனியாவில் உள்ள தொழிற்திணைக்கள காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம் என வவுனியா உதவித் தொழில் ஆணையாளர் சோ.நகுலேஸ்வரம்பிள்ளை கேட்டுள்ளார். (ஸ்ரீ-4)

# அமெரிக்காவில் ஏ.ரி.எம்.மூலம் தங்கக் கட்டிகள் விற்பனை

அமெரிக்காவில் ஏ.ரி.எம் மூலம் தங்கக் கட்டிகள் விற்பனை செய்யப்படுகின்றன. தற்போது ஏ.ரி.எம் இயந்திரம் மூலம் நாணயத்தாள்கள் பெறப்பட்டு வருகிறன. அதே முறையில் தங்கக்கட்டிகளும் விற்பனை செய்யும் முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

ஜெர்மனியைச் சேர்ந்த ஒரு தனியார் நிறுவனம் ஐக்கிய அரபு நாடுகளின் ஒன்றான அபுதாபியில் உள்ள எமிரேட் ஹோட்டலில் தங்கம் விற்பனை செய்யும் ஏ.ரி.எம். இயந்திரத்தை நிறுவியது. கடந்த மே மாதம் நிறுவப்பட்ட இந்த இயந்திரம் பொதுமக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

இதைத்தொடர்ந்து ஜெர்மனி, ஸ்பெயின் மற்றும் இத்தாலியிலும் இது தொடங்கப்பட்டது. இந்த நிலையில் தற்போது அமெரிக்காவில் புளோரிடா மாகாணத்தில் உள்ள போகா ராடன் நகரில் அமைக்கப்பட்டுள்ளது.

சென்டர் மால் ஒர்க்ஸ் கட்டிடத்தில் 2 ஏ.ரி.எம் இயந்திரங்கள் உள்ளன. அவற்றில் பணம் அல்லது கிரடிற்காட்டை சொருகினால் போதும் அதற்கு தகுந்த எடையில் இலட்சனை பொறிக்கப்பட்ட தங்க கட்டிகள் மற்றும் தங்க காசுகளை இயந் திரம் வெளியேற்றும்.

இந்த இயந்திரங்கள் ஜெர்மனியில் தயாரிக்கப்பட்டவை. 320 வகையான தங்கக் கட்டிகள் மற்றும் காசுகள் இதில் வைக்கப்பட்டுள்ளன. தங்கத்தின் விலை நிர்ணயம் பத்து நிமிடங்களுக்கு ஒரு முறை வெளியிடப்பட்டு வருகிறது.

இந்த இயந்திரங்களுக்கு பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. அனைத்து நாடுகளிலும் பொதுமக்கள் வரவேற்பை பெற்றுள்ள இந்த ஏ.ரி.எம் இயந்திரத்தை அடுத்து ஆண்டு உலகம் முழுவதும் நூற்றுக்கணக்கில் அமைக்க திட்டமிட்டு உள்ளதாக ஜெர்மனி நிறுவன அதிகாரி தாமஸ் கெய்ஸ்லர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# வடக்கில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள்

## நாளை முதல் விநியோகம்

(கொழும்பு)

மீள்குடியேற்றப்பட்ட நிலையில் வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தலுக்கமைய நிவாரணப் பொருட்கள் வழங்குவதற்கு மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோன் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களில் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் அதிகளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இம் மக்களுக்கான நிவாரணப்பொருட்கள் பகிர்ந்தளிப்பதற்கான நடவடிக்கை நாளை திங்கட்கிழமை தொடக்கம் எதிர்வரும் 24ஆம் திகதி வரை நடைபெறும். இதற்கான சகல நடவடிக்கைகளையும் மீள்குடியேற்ற அமைச்சு மேற்கொண்டுள்ளது.

இந்த நிவாரணப் பொருட்களை பகிர்ந்தளிக்கும் நிகழ்வில் மீள் குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோன், பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் உட்பட அமைச்சு அதிகாரிகள் இப் பிரதேசங்களுக்கு நேரடியாக விஜயம் செய்து அம்மக்களுக்கு இந்த நிவாரணப் பொருட்களை வழங்கவுள்ளனர்.

பாராளுமன்றத்தில் வரவு -செலவுத் திட்ட விவாதத்தின் போது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலைமைகளை எடுத்துக் கூறினர்.

இது குறித்து ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தியதுடன் பாதிக்கப்பட்ட இம் மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்குமாறு மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோனை ஜனாதிபதி கேட்டுக்கொண்டார்.

இதற்கமைய நிவாரணம் வழங்குவதற்கும் அதனை அம்மக்களிடம் நேரடியாக சென்று கையளிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிவாரணம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுவிக்கப்பட்டிருந்தது. இந்த அழைப்பை அவர்கள் ஏற்றுக் கொண்டுள்ளதுடன் நிவாரணம் வழங்கும் நிகழ்வில் நேரடியாக கலந்து கொள்வதாகவும் தெரிவித்துள்ளனர்.

இது சம்பந்தமாக மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்ன வீரக்கோனுடன் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராஜா மற்றும் செல்வம் அடைக்கலநாதன் ஆகியோர் நேற்று முன்தினம் மீள்குடியேற்ற அமைச்சுக்கு சென்று அமைச்சருடன் விரிவாக கலந்துரையாடினர்.

இங்கு பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கருத்துத் தெரிவிக்கையில், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எப்பொழுதும் தயாராக இருக்கின்றது. இது ஒரு மனிதாபிமான நடவடிக்கை.

இதில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பு கலந்து கொள்வதுடன் பூரண ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கும் என்றார்.

மன்னார் மாவட்டத்தில் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டிருகின்றார்கள். அவர்களுக்கும் விரைவாக நிவாரணம் வழங்குமாறு தாம் கேட்டுக் கொண்டதாகவும் அந்த நடவடிக்கை அடுத்த மாதம் ஆரம்பிக்கும் என்று அவர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட மக்கள் விடயத்தில் அரசாங்கம் மேற்கொள்ளும் சகல நடவடிக்கைகளுக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஒத்துழைப்பு கிடைக்குமென்று கூறிய பாராளுமன்ற உறுப்பினர் மீள்குடியேற்றப்பட்ட இடம் பெயர்ந்த மக்கள் எதிர்நோக்கும் ஏனைய பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலக பிரிவிலும் பூநகரி செயலகப் பிரிவிலும் கண்டாவளை பிரதேச செயலக பிரிவிலும் மீள்குடியேற்றப்பட்ட மக்கள் சுமார் ஆயிரத்து 100 குடும்பங்கள் கடந்த கால மழை வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்டன.

இவர்களுக்கான நிவாரணப் பொருட்கள் நேற்று கொழும்பிலிருந்து எடுத்துவரப்பட்டுள்ளது.

அத்துடன் நாளை வீடமைப்பு அதிகார சபையின் அலுவலகமும் கிளிநொச்சியில் திறந்து வைக்கப்படவுள்ளது. வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சர் விமல் வீரவன்ச இந்த அலுவலகத்தை திறந்து வைக்கவுள்ளார் என கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அத்துடன் எதிர்வரும் 24ஆம் திகதி பச்சிளம்பள்ளி கரைச்சி பகுதியில் மீள் குடியேற்றப்பட்ட சுமார் 500 குடும்பங்களுக்கான வீடமைப்புக்கான இரண்டாம் கட்ட உதவித் தொகை வழங்கப்படவுள்ளது.

புனர்வாழ்வு சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர கலந்து கொண்டு உதவித் தொகையை வழங்கவுள்ளார். (ஸ்ரீ-2)

## சந்நிதியான் ஆச்சிரமத்தின் சமூகப் பணிகள்

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தில் கடந்த 10 ஆம் திகதி நடைபெற்ற வாராந்த நிகழ்வின் போது பருத்தித்துறை அத்தியடி சைவமன்ற முன்பள்ளி மாணவர்களுக்கும் பருத்தித்துறை தம்பசிட்டி சர்வோதய முன்பள்ளி மாணவர்களுக்கும் தண்ணீர் கொண்டு செல்வதற்கான 62 போத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அத்தோடு முன்பள்ளி ஆசிரியர்களுக்கான சேலைகள் மூன்றும் வழங்கப்பட்டுள்ளன. செல்வச்சந்நிதி ஆசிரமம் இதுபோன்ற பல சமூகப் பணிகள் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

## சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச எழுத்தாளர் ஒன்றியம் நடத்தும் சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாடு -2011 அடுத்த வருடம் ஜனவரி மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் 9 ஆம் திகதிவரை கொழும்புத் தமிழ்ச்சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

குறித்த திகதிகளில் காலை 8.30 மணி முதல் பிற்பகல் ஒருமணிவரை ஆய்வரங்குகள் நடைபெறவுள்ளன. கலை நிகழ்வுகள் மாலை 5 மணி தொடக்கம் 8 மணிவரையும் நடைபெறும். இம்மாநாட்டின் இறுதிநாள் நிகழ்வுகள் மாலை 4.30 மணி தொடக்கம் 8.00 மணிவரையும் வெள்ளவத்தை இராம கிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறும் என சர்வதேச தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உண்மைகளை வெளிக்கொண்டு வர தொடர்ந்து போராடுவேன்

## விக்கிலீக்ஸ் நிறுவுனர் ஜூலியன் ஆவேசம்



பிரிட்டன் மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் பிணையில் வெளியே வந்துள்ள 'விக்கிலீக்ஸ்' நிறுவுனர் ஜூலியன் அசேஞ்ச், ''உண்மைகளை வெளிக்கொண்டு வர தொடர் ந்து போராடுவேன் சுவீடனுக்கு என்னை கொண்டு போகும் முயற்சி , என் மீதான அவதூறு பிரசாரத்தின் ஒரு பகுதி '' என்று தெரிவித்துள்ளார்.

பாலியல் குற்றச்சாட்டில் கடந்த 7 ஆம் திகதி கைதான அசேஞ்ச் ,பிணைகோரி இரண்டு முறை மனுத்தாக்கல் செய்தார். முதன் முறை அவருக்கு மறுக்கப்பட்ட பிணையை வெஸ்ற் மின்ஸ்டர் நீதிமன்றம் இரண்டாவது முறை சில நிபந்தனைகளுடன் தர முன் வந்தது.

ஆனால் , சுவீடன் தரப்பு சட்டத்தரணிகள் அந்த பிணையை எதிர்த்து வழக்குத் தாக்கல் செய்ததால், அசேஞ்ச் விடுதலை செய்யப்படவில்லை. இந்நிலையில், அசேஞ்சின் பிணையை எதிர்த்து தாங்கள் வழக்கு எதுவும் பதிவு செய்யவில்லை என சுவீடன் சட்டத்தரணிகள் தெரிவித்ததால் மேலும் குழப்பம் நீடித்தது.

பிரிட்டன் அரசு தரப்பு சட்டத்தரணிகள் தான் பிணையை எதிர்த்து மேல் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர் என்பது பின்பு தெரிந்தது. நேற்று முன்தினம் மேல் நீதிமன்றத்தில் அரசு தரப்பு வாதம் நிராகரிக்கப்பட்டு ,வெஸ்ற் மின்ஸ்டர் நீதிமன்றம் விதித்த நிபந்தனைகளுடன், கடந்த 16 ஆம் திகதி அசேஞ்சுக்கு பிணை வழங்கப்பட்டது.

பிணையில் வெளியே வந்த அவர் , செய்தியாளர்களுக்கு வழங்கிய பேட்டியில், என் மீதான குற்றச்சாட்டுகள் அரசியல் உள் நோக்கம் கொண்டவை. அவை போலி என்பதை நிரூபிப்பேன். தொடர்ந்து பல உண்மைகளை வெளிக்கொண்டு வருவேன். என்று தெரிவித்தார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் செய்தி நிறுவனம் ஒன்றுக்கு பேட்டியளித்த அவர், எனக்கு எதிரான இவ்வழக்கில் தனிப்பட்ட, உள்நாடு மற்றும் சர்வதேச உள்நோக்கங்கள் உள்ளன. ஆனால் இதன் மூலம் ஐரோப்பவை சங்கடப்படுத்தும் சில உண்மைகள் வெளிவந்துள்ளன.

உதாரணமாக தனிநபர் ஒருவரை ஐரோப்பிய நாடு ஒன்றில் இருந்து இன்னொரு ஐரோப்பிய நாட்டுக்கு அவர் மீதான குற்றச்சாட்டுக்கு எவ்வித ஆதாரமும் இன்றி நாடு கடத்த முடியும் என்பது இப்போது தெரிந்துள்ளது. இவ்வாறு அசேஞ்ச் தெரிவித்தார்.

இதற்கிடையில் அசேஞ்சை பிணையில் எடுப்பதற்காக நீதிமன்றத்தில் செலுத்த வேண்டிய ஒன்றரை கோடி ரூபாய் டுவிட்டர் இணை




யத்தளம் மூலம் திரட்டப்பட்டு வருகிறது. பிரிட்டன் பத்திரிகையாளர் ஜான் பில்ஜர் , பிரிட்டனில் இயங்கி வரும் புலனாய்வுப் பத்திரிகையியல் மையத்தின் இயக்குநர் காவின் மெக் பேடென் மற்றும் சூசன் பென் ஆகிய மூவரின் தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு குழு இந் நிதி வசூலை கண்காணிக்கும். இதற்கிடையில் விக்கிலீக்ஸ் நிறுவனமும் அசேஞ்சும் அவுஸ்திரேலிய சட்டத்தை மீறவில்லை என அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விக்கிலீக்ஸ் செயல் குறித்து அந்நாட்டுப் பிரதமர் ஜூலியா கில்லார்டு பொறுப்பற்ற செயல் என்று கண்டனம் தெரிவித்திருந்தார். இந்நிலையில் நேற்று முன்தினம செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த ஆஸி.பொலிஸார் விக்கிலீக்ஸ் தொடர்பான அனைத்து ஆதாரங்களையும் பரிசோதித்தோம். ஆஸி. சட்டப்படி அந்நிறுவனம் குற்றம் செய்ததற்கான ஆதாரம் எதுவும் இல்லை என்று தெரிவித்துள்ளனர்.

இது குறித்து விளக்கம் அளித்த பிரதமர் கில்லார்டு என் கண்டனத்தில் மாற்றம் இல்லை. சிலர் அசேஞ்சுக்கும் விசிறியாக இருக்கலாம். ஆனால் நான் அவரது விசிறி இல்லை. அதேநேரம் எதிர்காலத்தில் அவரது வெளியீடுகளைக் கருத்தில் கொண்டு சட்டத்தை மாற்றும் கருத்தும் எங்களுக்கு இல் லை என்று கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# ஐரோப்பிய நாடுகளில் கடும் பனிப்பொழிவு; விமான போக்குவரத்து முற்றாக பாதிப்பு

(பெர்லின்)

ஐரோப்பிய நாடுகளில் கடும் பனிப்பொழிவு ஏற்படுவதால் விமான போக்குவரத்து இரத்து செய்யப்பட்டுள்ளது. ஜேர்மன் சுவிற்சர்லாந்து உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 450 க்கும் மேற்பட்ட விமான சேவைகள் இதன் காரணமாக இரத்து செய்யப்பட்டுள்ளன.

இதனால் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் இவ்வாண்டு கிறிஸ்மஸ் பண்டிகையினை கொண்ட முடியாமல் அவதிக்குள்ளாகியுள்ளனர். ஐரோப்பா நாடுகளில் தற்போது கடும் குளிர் நிலவி வருகிறது. பூச்சியம் டிகிரிக்கு உறை பனி நிலவி வருகிறது.

இதன் காரணமாக ஜேர்மன் , பிரிட்டன் , இத்தாலி , சுவிட்சர்லாந்து , நெதர்லாந்து நாடுகளில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

ஜேர்மனியில் பள்ளி , கல்லூரிகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளது.சாலைகளில் பணி சூழ்ந்துள்ளதால், போக்குவரத்து பாதிக்கப்பட்டு ஆங்காங்கே வாகன விபத்துக்கள் ஏற்பட்டுள்ளன. இதில் பெர்லின் நகரில் விபத்தில் 3 பேர் பலியானார்கள்.

மேலும் ஜேர்மனியில் பிராங்பர்ட் , முனிச், சுனோர்வாங் ஆகிய விமான நிலையங்களில் விமான போக்குவரத்து இரத்து செய்யப்பட்டுள்ளது.

சில நகரங்களில் விமானங்கள் தாமதமாக புறப்பட்டு சென்றன. ஜேர்மனின் வூட்டன்பெர்க் நகரில் ஏற்பட்ட சாலை விபத்தில் விபத்தில் 2 பேர் பலியானார்கள்.

இதேபோன்று ஜெனீவா , ஜூரிச் ஆகிய விமான நிலையங்களில் விமான சேவை இரத்து செய்யப்பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளில் நிலவும் பனிப்பொழிவு ,அடுத்த வாரம் கிறிஸ்துமஸ் பண்டிகை வருவதால் பண்டிகை விடுமுறையை கொண்டாட பிற நாடுகளுக்கு தங்கள் குழந்தை ,குடும்பத்தினருடன் பயணிக்க



முடியாமல் ஐரோப்பியர்களுக்கு பெரும் ஏமாற்றத்தினை ஏற்படுத்தியுள்ளது. (ஸ்ரீ-2)



கொரிய தீபகற்பத்தில் அமைதிப் பேச்சுவார்த்தை குறித்த ஆறு நாடுகள் அமைப்பின் சார்பில் நியமிக்கப்பட்ட அமெரிக்க சிறப்புத்தூதர் சூங்கிம்(இடது) தென்கொரிய வெளியுறவு அமைச்சர் வெங்சாங்ஜக்கை தலைநகர் சியோலில் சந்தித்து உரையாடுவதை படத்தில் காணலாம்.

# அமெரிக்க விமானக் குண்டுவீச்சில் 51 பயங்கரவாதிகள் பலி

(பெஷாவர்)

பாகிஸ்தானின் கைபர் பகுதியில் அமெரிக்க இராணுவ விமானங்கள் நடத்திய குண்டு வீச்சுத் தாக்குதலில் பலியான பயங்கரவாதிகளின் எண்ணிக்கை 51 ஆக அதிகரித்துள்ளது.

பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப் பகுதியான கைபர் – பக்துன்வா பகுதியில் தாரிக் இ தலிபான் பாகிஸ்தான் மற்றும் லஷ்கர் இ இஸ்லாம் போன்ற பயங்கரவாதக் குழுக்கள் செயற்பட்டு வருகின்றன.

கைபர் வழியாக ஆப்கானில் உள்ள நேட்டோ படையினருக்கு பல்வேறு பொருட்களை எடுத்துச் செல்லும் வாகனங்களை பயங்கரவாதிகள் தாக்கி வருகின்றனர்.

அதேநேரம் இப்பகுதியில் அமெரிக்க ஆளில்லா இராணுவ விமானங்கள் எப்போதாவது தான் வான் வழித் தாக்குதல் நடத்தும். நேற்று முன்தினம் அடுத்தடுத்து ஒரு மணி நேரத்துக்குள் லஷ்கர் இ இஸ்லாம் அமைப்பின் மூன்று இடங்களில் அவை குண்டுகளை வீசித் தாக்கின.

இதில் 51 பயங்கரவாதிகள் இறந்தனர். ஏழு பேர் காயம் அடைந்தனர். பாகிஸ்தான் எல்லையில் விமானத் தாக்குதல் நடத்த அந்நாட்டு அரசு எதிர்ப்பு தெரிவித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# சோமாலியக் கடற்கொள்ளையர்களால் தடுக்கப்பட்ட இலங்கையர் விரைவில் விடுதலை

சோமாலிய கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்டிருந்த சவுதி நாட்டின் கொடியைத் தாங்கிய கப்பலும் இலங்கையர்களும் தற்போது ஜித்தாவை வந்தடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட கப்பலுடன் இவர்கள் கடந்த ஏழாம் திகதி சோமாலியக் கடற்கொள்ளையர்களால் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

குறிப்பிட்ட கப்பலில் கப்டனான எஸ். எச். ஆர். குமார் தகவல் தருகையில் , விடுவிக்கப்பட்ட அனைவரும் நத்தார் தினத்துக்கு முன்னர் இலங்கை வந்தடைவர் எனத் தெரிவித்தார்.

ஜப்பானுக்கும் கென்யாவுக்குமிடையே சேவையில் ஈடுபட்டிருந்த இந்தக் சரக்குக் கப்பல் கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி கடத்தப்பட்டிருந்தமை தெரிந்ததே. கப்பலையும் கப்பல் சிப்பந்திகளையும் விடுவிக்கக் குறிப்பிட்ட கப்பல் நிறுவனம் பல கோடி ரூபா கப்பம் செலுத்தியிருந்தது. (ஸ்ரீ-2)



பாலியல் புகாரில் லண்டன் சிறையில் அடைக்கப்பட்டிருந்த விக்கிலீக்ஸ் நிறுவுனர் ஜூலியன் அசேஞ் பிணையில் விடுவிக்கப்பட்டு பத்திரிகைகளுக்கு பேட்டியளித்தார். உடன் அவரது நண்பர் வாகன்ஸ்மித் காணப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்டு தடிகள் கொண்டு வருதல் கண்டால்
பெண்டில் பின்னால் நின்று கொண்டு
சண்டித்தனங்கள் செய்யும் வீராதி வீரர்
சூராதி சூரர் நாங்கள் ஐயா – *நாட்டார் பாடல்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# மூன்றாம் உலகப் போரின் அத்திபாரக்கல்லாக இலங்கை..

யுத்தம் ஒழிந்து சமாதானம் நிலவுகின்றதென இலங்கை பெருமையடைந்து கொண்டாலும் சர்வதேச ரீதியில் அதன் பெயருக்கு ஏற்பட்டுள்ள இழுக்கு சாதாரணமானதன்று.

இலங்கை சிறிய நாடு மட்டுமல்ல,மிக வறுமையான நாடும் கூட.நாங்கள் எத்துணை வீராப்பு – பெருமை பேசிக்கொண்டாலும் இந்த நாட்டின் பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு பணிப் பெண்களாகச் செல்லும் நிலைமை இருக்கும் வரை நாம் வீறாப்புப் பேசுவது வேடிக்கையானதாகவே இருக்கும்.

எனினும் இந்த உண்மையை மறந்து அரசியல்வாதிகள் சிலர் இலங்கையர் என்று மார்தட்டி சண்டித்தனக் கதையும் பேசுகின்றனர்.

தயவுசெய்து இந்தப் பேச்சை எங்கள் நாட்டுக்குள் வைத்துக் கொள்வது நல்லது.இப்படியான கதைகள் மத்திய கிழக்கு நாடுகளின் காதுகளில் கேட்காமல் கதைப்பதும் அவசியம்.

ஏனெனில், இலங்கை அரசியல்வாதிகளின் ஊர்ச்சண்டித்தனக் கதையில் மத்திய கிழக்கு நாட்டார் விசனம் அடைந்தால் மாடியிலிருந்து தங்கள் வீட்டு பணிப் பெண்களை தள்ளி விழுத்தி விடுவர்.

ஆகையால், எங்க்ள் நிலைமைகளை – உலக நாடுகளில் எங்கள் நாட்டிற்கு இருக்கக்கூடிய மதிப்பு மரியாதைகளை அளவிட்டு அறிந்து கொண்டு எதனையும் கதைப்பது நல்லது.

சில நாடுகள் இலங்கை மீது மூன்றாம் உலக யுத்தத்தின் அத்திபாரக் கல்லாக இலங்கையை ஆக்குவதற்கும் முயற்சி செய்கின்றன.

நகைச்சுவை நடிகர் வடிவேலுவின் வசன நடையில் கூறுவதாயின்,இலங்கைக்கு உசுப்பேத்துவதில் சில நாடுகள் கங்கணங்கட்டி உள்ளன.

இந்த உசுப்பேத்தலுக்காக துறைமுகங்களைக் கூட அவர்கள் கட்டித் தரலாம்.ஆனால் அற்ப சலுகைகளுக்கு ஆசைப்பட்டால் கட்டியதை அனுபவிப்பதற்கு முடியாமல் போய்விடும்.

மாறாக மூன்றாம் உலகப் போரில் முதல் அழிவை சந்தித்த ஏழை நாடு இலங்கை என்ற வரலாற்றுக் குறிப்பு மட்டுமே எஞ்சி நிற்கும்.

இலங்கையைப் பொறுத்தவரை அது மிகச் சிறிய – வறிய நாடு.இந்த நாட்டிற்கு இன ஒற்றுமையும் அமைதியும் சமாதானமும் அவசியம்.இதில் கவனம் செலுத்தாவிடில் உலக நாடுகள் தூக்கி எறியும்.

இப்போது பிரிட்டன்,அமெரிக்கா போன்ற நாடுகள் இலங்கையை விமர்சிக்க ஆரம்பித்து விட்டன.இது சாதாரணமான விடயமன்று.

இலங்கையின் எதிர்கால ஆரோக்கியத்துக்கு ஆபத்தான இந்நிலைமையை இல்லாது போக்க இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வை முன் வைத்து,

இப்போது இலங்கை ஒரு சமாதானப் பூங்கா என்ற பெயரை ஏற்படுத்த வேண்டும்.இதை விடுத்து அதைச் செய்ய மாட்டோம்.நாம் வீரர். நாம் தான் ஆதிக்குடிகள் என்றால் எல்லாம் தவறணைக் கதையாய்த்தான் போகும்.

# புலிகளுக்கு ஆயுதம் வழங்க முயற்சித்த பால்ராஜ் நாயுடுவுக்கு சிறைத்தண்டனை!

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஆயுதங்களை வழங்குவதற்கு முயற்சி செய்தார் என்ற குற்றச்சாட்டின்பேரில் கைது செய்யப்பட்ட சிங்கப்பூரைச்சேர்ந்த பால்ராஜ் நாயுடு என்பவருக்கு 5 வருடச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

பால்டிமோரிலுள்ள அமெரிக்க மாவட்ட நீதிமன்றத்திலே கடந்த வியாழக்கிழமை 48 வயதான பால்ராஜ் நாயுடுவுக்கு இத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டு பயங்கரவாத அமைப்புக்கு பொருள் உதவி வழங்குவதற்கு முயற்சித்தார் என்ற குற்றச்சாட்டில் கடந்த ஒக்டோபர் மாதம் அவரைக் குற்றவாளியாகக் கண்டு நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு ஆயுதங்களை கொள்வனவு செய்வதற்கான முயற்சியின் ஒரு அங்கமாக பால்ராஜ் நாயுடு இருந்ததாக சமஷ்டி விசாரணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

1997ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளை பயங்கரவாத அமைப்பாக அமெரிக்க இராஜங்கத் திணைக்களம் அறிவித்திருந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புக்காக பால்ராஜ் நாயுடு ஒன்பது இலட்சம் அமெரிக்க டொலர்களுக்கு ஆயுதங்களை கொள்வனவு செய்ய முயற்சித்ததாக விசாரணையாளர்கள் குறிப்பிடுவதாக ஏ.பி.செய்திச் சேவை தெரிவித்துள்ளது.(ச–5)

# சர்வதேச விசாரணையை நடத்த அமெரிக்க எம்.பிகள் வலியுறுத்தல்

இலங்கையில் யுத்த காலத்தில் இடம் பெற்றதாக கூறப்படும் மீறல் சம்பவங்கள் குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டுமென அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் பலர் வலியுறுத்தியுள்ளனர்.

அமெரிக்க நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபை உறுப்பினர்கள் 30 பேரும் செனட் சபை உறுப்பினர்கள் 17 பேரும் கையெழுத்திட்டு அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்டனுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் ,போரின் கடைசிக் கட்டத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து ஐ.நா.விசாரணை நடத்தப்படவேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு அடையும் முடிவுகளை ஐ.நாவின் ஆதரவுடனான சர்வதேச பொறிமுறையொன்றின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என உறுதியாக நம்புகிறோம் என செனட் சபை உறுப்பினர்கள் மேற்படி கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு பொறுப்புடைமை அவசியம் எனக் கூறியுள்ளதுடன் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான தோல்வியுற்ற பல முயற்சிகள் வரலாற்றில் உள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.இலங்கை அத்தகைய மற்றொரு தோல்வியுற்றபடியாக மாறுவதை நாம் விரும்பவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர்.(ச–5)

# பல்கலைக்கழக அனுமதிக்கான படிவம் இன்று விநியோகம்

பல்கலைக்கழகங்களுக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வதற்கான முதற்படிவம் இன்று முதல் விநியோகிக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ள து.

இப்படிவத்தை யாழ்ப்பாணத்தில் பூபாலசிங்கம் புத்தகசாலை மற்றும் அன்னை புத்தகசாலை ஆகியவற்றில் 300 ரூபாய் செலுத்தி பெற்றுக் கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.(ச)

# திறந்த பல்கலைக்கழக பொதுப் பட்டமளிப்பு விழா

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு விழா எதிர்வரும் 23.12.2010 வியாழக்கிழமை பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் காலை 9.00 மணிக்கும் 2.00 மணிக்கும் இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

இப் பட்டமளிப்பு விழாவில் பட்டம் பெறவுள்ள அனைத்து மாணவர்களும் எதிர்வரும் 22ஆம் திகதி தங்களுக்கான பட்டமளிப்பு அங்கிகளை நாவலவிலுள்ள இலங்கைத் திறந்த பல்கலைக் கழகத்தின் பரீட்சைக் கிளையில் பெற்றுக் கொள்ளலாம் என இணைப்பாளர் தெரிவித்துள்ளார்.இதேவேளை பட்டப்பின் கல்வி டிப்ளோமா ஆசிரிய மாணவர்கள் தங்களது பரீட்சைப் பெறுபேறுகளை யாழ். பிராந்திய நிலையத்தில் பார்வையிடலாம் எனவும் இணைப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ச)

# சூடானிய ஜனாதிபதி பொதுமக்களின் பணத்தைக் களவாடியுள்ளார்

## விக்கிலீக்ஸ் இணையம் குற்றச்சாட்டு

சூடானிய ஜனாதிபதி ஒமர் அல் பஷார் பெருந்தொகையான மக்கள் பணத்தை களவாடியுள்ளதாக விக்கிலீக்ஸ் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஒன்பது பில்லியன் அமெரிக்க டொலர் பொதுமக்கள் பணத்தை ஜனாதிபதி இவ்வாறு மோசடி செய்துள்ளதாகவும் இந்தப் பணம் வெளிநாட்டு வங்கிகளில் இரகசியமாக வைப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

பெருமளவான பணம் லண்டன் வங்கிகளில் இவ்வாறு வைப்புச் செய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. எவ்வாறெனினும் இந்தக் குற்றச்சாட்டுக்களை சூடான் அரசாங்கம் நிராகரித்துள்ளது.


இதேவேளை ஜனாதிபதி பஷாரின் பெயரில் வங்கிக் கணக்குகள் கிடையாதென லண்டனில் பிரபல லொயிட் வங்கி தெரிவித்துள்ளது. (ஸ்ரீ–4)

# க.பொ.த.உயர்தர பரீட்சைப் பெறுபேறுகள்

### புனிதர் சாள்ஸ் மகா வித்தியாலயம்

எல்.றேணுகா சாளினி 2A,B, ஆர். டியூலா 2A,B,ஜி.தனுசியா 2A,C, ஈ.ஏஞ்சலா 2A,C,ஆர்.யூடித் றொம்மியா A,2B,ஏ.மேரி அனுசியா A,2B, எஸ்.மேரிவனிஸ்ரா A,2C, ஏ.நிறோசன் A,2C,ஏ.ஜெனார்த்தன் A,2C,ஏ.சர்மிளா A,B,C, ஈ.லக்ஷிலானி A,B,C எஸ். மேரிசிந்துஜா 2B,C,ஈ.ஏஞ்சலின் நிலோஜினி B,2 C,எம்.கனிந்தினி B,2 C, எஸ். ஜெனாவியல் சர்மிலி B,2C, ஏ.மரினா அனோஜா B,2C,ஏ.ஜி. மரிய சிலோஜினி B,2C, ரி.புஸ்பமாலினி 3C,எஸ்.ஜஸ்மன் 3C,என்.தில்ஷா 3C.(ஸ்ரீ)

# கடவுள் நம்மோடு இருக்கிறார்



"இதோ கன்னி கருவுற்று ஓர் ஆண் மகவைப் பெற்றெடுப்பார்.அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவார். இம்மானுவேல் என்றால் கடவுள் நம்முடன் இருக்கிறார் என்பதுபொருள்"

கடவுள் நம்முடன் என்றென்றைக்கும் இருக்கிறார்.எம்முடைய வாழ்வில் ஏற்படும் கஷ்டங்கள் துன்பங்களின் போது உடனிருந்து பயணிக்கிறார்.

## பரமபிதா காட்டிய பாதை

எம்முடைய வாழ்வின் ஆரம்பம் முதல் இறுதி வரை இறைவனுடைய திட்டம் நிறைவேற்றப்படுகின்றது.

ஒருநாள் இளைஞன் ஒருவன் பாலைவனத்தினூடாக நடந்து சென்று கொண்டிருந்தான்.அப்போது அவனுடைய பாதச்சுவடுகளோடு இன்னுமொருவரின் பாதச்சுவடுகள் பதிந்த வண்ணம் இருந்தது.இதைக் கண்ணுற்ற அவன் ஒன்று தன்னுடைய பாதச்சுவடு, மற்றையது இறைவனுடைய பாதச்சுவடு என்பதைப் புரிந்து கொண்டான்.

இப்படியே நடந்து செல்லும் போது கல்முட்கள் நிறைந்த பாதை வந்ததும் இளைஞனுடன் நடந்து வந்த பாதச்சுவட்டைக் காணவில்லை. இளைஞன் இறைவனிடம் கஷ்ட, துன்ப நேரத்தில் ஏன் என்னைக் கைவிட்டீர் எனக் கேட்டபோது இறைவன் அதற்கு மகனே உன்னை நான் என்கரத்தில் தாங்கி நான் நடந்து வந்தேன். நீ பார் க்கிற பாதச்சுவடு உன்னுடையது அல்ல என்னுடைய பாதச்சுவடு என்றார்.

இக்கதையினூடாக நாம் விளங்குவது கஷ்டத்தின் மத்தியில் இறைவன் எம்முடன் உடனிருப்பார்.

ஆகவே நாம் ஒவ்வொருவரும் இறை அன்பில் நிலைத்திருந்து இறை கட்டளைகளை கடைப்பிடித்து இறையருளைப் பெறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழக அகதி முகாம்களில் தீவிர கண்காணிப்பு நடவடிக்கை

தமிழகத்தில் உள்ள 113 இலங்கைத் தமிழர்கள் வாழும் அகதி முகாம்களுக்கு தீவிர கண்காணிப்புக்கு உள்ளாகியுள்ளன. புதியவர்கள் எவரும் முகாம்களுக்குள் வருகின்றனரா? முகாம் வாசிகளுக்கும் எவருக்கும் தொடர்புகள் உள்ளனவா என்பது குறித்து பாதுகாப்பு தரப்பினர் ஆராய்ந்து வருகின்றனர்.

அண்மையில் இந்திய மத்திய உளவுப் பிரிவு தமிழக பொலிஸாருக்கு எச்சரிக்கை தகவல் ஒன்றை விடுத்தது. அதில் சிதறுண்டு போய் உள்ள விடுதலைப்புலிகள் இயக்கம் மீண்டும் வலுப்பெற்று தமிழகத்தில் களம் அமைக்கலாம் என்றும் விடுதலைப் புலிகளால் பிரதமர் மன்மோகன்சிங், காங்கிரஸ் தலைவி சோனியாகாந்தி, முதலமைச்சர் கருணாநிதி,மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் உட்பட நாட்டின் முக்கிய தலைவர்களுக்கு ஆபத்து ஏற்படலாம் என்றும் எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

எனவே ,தமிழகத்தில் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டும் என்றும் மத்திய உளவுத் துறை அறிவுரை வழங்கியிருந்தது.இந்த எச்சரிக்கை தகவலையொட்டி தமிழக சட்டம் ஒழுங்கு பொலிஸ் டி.ஜி.பி.லத்திகா சரண், உயர் பொலிஸ் அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

அந்த ஆலோசனையின் அடிப்படையில் தமிழகம் முழுவதும் குறிப்பாக கடலோர மாவட்டங்களில் பாதுகாப்பை பலப்படுத்த உத்தரவிடப்பட்டது.

விடுதலைப்புலிகள் இயக்கத்தின் நடவடிக்கைகளைக் கண்காணிக்கும் படி மாநில உளவுப்பிரிவு பொலிஸாருக்கும் கியூ பிரிவு பொலிஸாருக்கும் ஆணையிடப்பட்டுள்ளது. அனைத்து மாவட்ட பொலிஸ் அதிகாரிகளும் உஷார்படுத்தப்பட்டனர்.

தமிழகத்தில் 113 இலங்கை தமிழர்கள் வசிக்கும் முகாம்கள் உள்ளன. அவற்றில் 72 ஆயிரம் இலங்கை தமிழர்கள் வசிக்கிறார்கள். அந்த முகாம்களும் தீவிரமாக கண்காணிக்கப்படுகிறது.

செங்கல்பட்டு , பூந்தமல்லி ஆகிய இடங்களில் உள்ள சிறப்பு முகாம்களில் 44 விடுதலைப்புலிகள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மீது பல்வேறு வழக்குகள் உள்ளன. இந்த விடுதலைப்புலிகள் சிறப்பு முகாம்களையும் பொலிஸார் தீவிரமாக கண்காணித்து வருகிறார்கள். பல்வேறு வழக்குகளில் விடுதலைப்புலிகள் இயக்கத்தை சேர்ந்த முக்கிய தளபதிகளான தம்பியண்ணா, சிரஞ்சீவி, முத்தண்ணா போன்றவர்கள் கைது செய்யப்பட்டு தமிழக சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் நடவடிக்கைகளும் கண்காணிக்கப்பட்டு வருவதாக தெரியவருகின்றது. (ஸ்ரீ-2-4)

## ரஷ்ய ஜனாதிபதி இந்தியா விஜயம்

ரஷ்ய ஜனாதிபதி டிமெட்ரி மெத்வ்தேவ் இரண்டு நாள் விஜயமாக இந்தியாவிற்கு செல்லவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 21, 22 ஆம் திகதிகளில் இந்தியாவில் தங்கியிருக்கும் அவர் 14 ஒப்பந்தங்களில் கையெழுத்திடவுள்ளார். இதில் இந்தியாவுடன் ஐந்தாம் தலைமுறைக்கான போர் விமானம் , அமெரிக்காவுக்கு இணையாக மிக், சுகி, எப் 22 ரகபோர் விமானங்களை கொள்வனவு செய்வது தொடர்பிலான ஒப்பந்தங்களும் உள்ளடங்குகின்றன.

அதேவேளை ஒரு இலட்சத்து 35 ஆயிரம் கோடி இந்திய ரூபாய் பெறுமதியில் வர்த்தகம் மேற்கொள்ளுதல் தொடர்பிலும் ரஷ்ய ஜனாதிபதியின் விஜயத்தின் போது கவனம் செலுத்தப்படவுள்ளது.இதுதவிர அவர் டில்லி மும்பை மற்றும் ஆக்ரா நகரங்களுக்கும் அவர் பயணம் செய்யவுள்ளார். (ஸ்ரீ-4)

## பாரதச் செய்திகள்

## ரஹ்மானுக்கு இவ்வாண்டும் ஒஸ்கார் விருது கிடைக்குமா?



ஸ்லம்டாக் மில்லியனர் படத்துக்காக இரட்டை ஒஸ்கார் வென்ற சாதனை படைத்த இசை மேதை ஏ.ஆர்.ரஹ்மானுக்கு மீண்டும் ஒஸ்கார் கிடைக்கும் வாய்ப்பு உருவாகியுள்ளது.

சென்னையைச் சேர்ந்த பிரபல சினிமா பின்னணி இசை அமைப்பாளர் ஏ.ஆர்.ரஹ்மான் தனது அபார இசைத் திறமையால் தமிழர்களுக்குப் பெருமை சேர்த்தவர். கடந்த 2009 ஆம் ஆண்டு ஸ்லம்டாக் மில்லியனர் என்ற படத்துக்கு இசை அமைத்ததற்காக இரண்டு ஒஸ்கார் விருதுகளை வென்றார்.

இந்த நிலையில் இந்த ஆண்டு அவர் மீண்டும் ஒஸ்கார் பரிசுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.44 வயதான ரஹ்மான் 127 மணி நேரம் என்ற ஆங்கில சினிமாவில் இடம் பெறும் ஒரு பாடலுக்கு சிறப்பான முறையில் ஒரிஜினல் இசையை கம்போஸ் செய்துள்ள மைக்காகப் பரிந்துரைப் பட்டியலில் இடம்பெற்றுள்ளார்.

இந்தப் பாடல் ஏற்கனவே உலகமெங்கும் பரவலான வரவேற்பைப் பெற்றுள்ளது. இசை விற்பன்னர்கள்பலரும்பாராட்டியுள்ளனர். ரஹ்மானுக்கு இந்த ஆண்டும் ஒஸ்கார் பரிசு கிடைக்குமா? மீண்டும் ரஹ்மான் ஒஸ்கார் மேடையில் தமிழை ஒலிக்க வைக்க சந்தர்ப்பம் கிடைக்குமா? என்பது அடுத்த ஆண்டு ஜனவரி 6 ஆம் திகதி தெரியவரும்.அதே வேளை இதே படத்துக்காக ஏ.ஆர்.ரஹ்மான் பெயர் ஏற்கனவே கோல்டன் குளோப் விருதுக்கும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. ஸ்லம்டாக் மில்லியனர் படம் இயக்கிய அதே டேனி பாய்லின் புதிய படம் தான் இந்த 127 ஹவர்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

2009ஆம் ஆண்டிலும் இதேபோல கோல்டன் குளோப் மற்றும் ஒஸ்கார் விருதுக்கு அடுத்தடுத்து பரிந்துரைக்கப்பட்ட ரஹ்மான் அந்த இரண்டு விருது விழாவிலும் கதாநாயகனாக ஜொலித்தார். இந்த ஆண்டும் இந்த வாய்ப்பு கிடைக்க வேண்டும் என்பதே கோடிக்கணக்கான அவரது இசை ரசிகர்கள் மனக் கிடக்கையாக உள்ளனர். (ஸ்ரீ-4)

## பத்தடி ஆழமான ஆற்றில் விழுந்த குழந்தை உயிர் பிழைத்த அதிசயம்



(புனலூர்)

வீட்டின் முன் நிறுத்திய காரில் விளையாடிக் கொண்டிருந்த இரண்டரை வயதுக் குழந்தையுடன் கார் பின்னோக்கி நகர்ந்து பத்தடி ஆழமுள்ள ஆற்றில் விழுந்தது.

இவ்விபத்தில் காரில் இருந்த குழந்தை அதிர்ஷ்டவசமாக சிறு காயங்களுடன் உயிர் பிழைத்தது. கேரள மாநிலம் கொல்லம் மாவட்டம் புனலூர் எம்.எல்.ஏ.சாலையைச் சேர்ந்தவர் மாத்யூ.இவரது மனைவி ஜிஜி. இவர்களது இரண்டரை வயது மகன் அல்பின் கடந்த 16 ஆம் திகதி காலை 11 மணிக்கு அவர்களது வீட்டுக்கு முன் நிறுத்தப்பட்டிருந்த காரில் விளையாடிக் கொண்டிருந்தான்.

கார் திடீரென பின் நோக்கி நகரத் தொடங்கியது. வீட்டுக்குள் இருந்த மாத்யூ இதைப் பார்த்து அலறிக் கொண்டே காரை நிறுத்த ஓடினார்.

அதற்குள் காரின் வேகம் அதிகரித்து வீதியில் நின்றுகொண்டிருந்த பஸ்களின் பக்கவாட்டில் உரசிக்கொண்டே சென்றது.

சிறிது நேரத்தில் வீதியை விட்டு விலகி பக்கவாட்டில் இருந்த கடையின்சுவரை இடித்து பத்தடி ஆழத்தில் இருந்த வெட்டிப்புழா ஆற்றில் விழுந்தது. அலறிக் கொண்டே ஓடி வந்த மாத்யூ ஆற்றில் குதித்தார்.

அவரது அலறல் சத்தம் கேட்டு அக்கம்பக்கத்தினரும் ஓடி வந்தனர். அதற்குள் கார் ஆற்று நீரில் தலைகீழாக கவிழ்ந்தது.காரின் அருகே வேகமாக சென்ற மாத்யூ குழந்தைக்கு என்னவானதோ என்ற பதைபதைப்புடன் கதவை திறந்து உள்ளே பார்த்தார்.

தன் அப்பாவைக் கண்டதும் நடந்த எதையும் அறியாமல் அப்போதும் காரில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தை தன் சிறிய பற்களை காட்டி சிரித்தான்.

குழந்தையின் கை முட்டி, கால் விரலில் சிறிய காயங்கள் இருந்ததை தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு கண்காணிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

## சிங்க முகத்துடன் பிறந்த பெண்குழந்தை



(சென்னை)

குன்றத்தூர் புது வட்டாரம் குழாய் தெருவைச் சேர்ந்தவர் சரவணன் (வயது 26). இவர் லொறிச் சாரதியாக கடமையாற்றுகிறார். அவரது மனைவியின் பெயர் அஞ்சலை (வயது 24). இவர்கள் இருவருக்கும் வினோதினி (வயது 03) என்ற பெண் குழந்தையுள்ளது.

அவ்வேளையில் அஞ்சலை 7 மாத கர்ப்பிணியாக இருந்தார். இந்த நிலையில் சரவணன் கடந்த 15 ஆம் திகதி காலை சபரிமலை ஐயப்பன் கோவிலுக்குச் சென்றார்.

கணவனை வழியனுப்பி விட்டு வீட்டிற்கு வந்த அஞ்சலை கடும் வயிற்றுவலியால் அவதிப்பட்டார். உடனே அரசு மகப்பேறு மருத்துவமனையில் அஞ்சலை அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவருக்கு குறை பிரசவத்தில் பெண் குழந்தை பிறந்தது. அதை பார்த்த டாக்டர்கள் ஆச்சரியப்பட்டனர்.

குழந்தை முகம் சிங்கம் போலவும் பற்கள் பெரியதாகவும் ஆக்ரோஷமாக காணப்பட்டது. பின்னர் அந்த குழந்தை இறந்து விட்டது. (ஸ்ரீ-2)

## அவுஸ்திரேலியாவுக்கு தப்ப முயன்ற இலங்கை அகதிகள் ஐவர் கைது

சென்னையில் இருந்து படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு தப்பிச் செல்ல முயன்ற இலங்கை தமிழ் அகதிகள் 5 பேர் பிடிபட்டுள்ளனர்.

ஈச்சம்பாக்கம் அனுமன் காலனி அருகே இலங்கை தமிழர்கள் 10 பேர் ஒரு வானை நிறுத்திவிட்டு பேசிக்கொண்டிருந்தனர்.

அவர்களுடைய நடவடிக்கைகளில் சந்தேகம் அடைந்த அப்பகுதியினர் பொலிசாருக்கு தகவல் கொடுத்துள்ளனர். பொலிஸார் அங்கு வந்ததும் அவர்களில் 5 பேர் தப்பிவிட்டனர்.

ராஜா , ராஜீவ் காந்தன் , உதயகுமார் , ரோஜ்மாரியா , சுரேஷ்குமார் ஆகிய 5 பேர் பிடிபட்டனர். இவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில் தமிழகத்தின் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ள இலங்கை தமிழ் அகதிகள் முகாம்களை சேர்ந்தவர்கள் இவர்கள் என்பது தெரியவந்தது.

சென்னையைச் சேர்ந்த பிரகாஷ் என்பவர் ஆளுக்கு 80 ஆயிரம் ரூபாய் வாங்கிக் கொண்டு தங்களை ஒரு படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைப்பதாக கூறியதாகவும் அதற்கிணங்க தாங்கள் அங்கு வந்ததாகவும் பொலிசாரிடம் கூறியுள்ளனர்.

பிரகாஷ் இவர்கள் அனைவரையும் கோயம்பேட்டுக்கு வரச்சொல்லி அங்கு அவர்களிடம் இருந்து பணம் பெற்றுக்கொண்டு வான் மூலம் ஈச்சம்பாக்கத்துக்கு அனுப்பி வைத்துள்ளார். இதுபோன்று பலமுறை இலங்கை தமிழ் அகதிகளை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைத்துள்ளேன் என்று பிரகாஷ் தங்களிடம் கூறியுள்ளதாக பிடிபட்ட 5 பேரும் பொலிசாரிடம் தெரிவித்துள்ளனர்.

இவர்களை கைதுசெய்த நீலாங்கரை பொலிசார் கியூ பிரிவு பொலிசாரிடம் ஒப்படைத்தனர். அவர்கள் தொடர்ந்து இலங்கை அதிகளிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

அத்துடன் தப்பியோடிய 5 பேரை பிடிக்கவும் இவர்களை அவுஸ்திரேலியாவுக்கு அனுப்பி வைப்பதாக பணம் பறித்த பிரகாஷையும் கைது செய்ய பொலிசார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹசி அபாரம் ஆஸி. ஆதிக்கம்

ஹரிஸ், ஜோன்சனின் துல்லிய மான பந்து வீச்சில் இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் 81 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட் டுக்களை இழந்தது.

முன்னதாகஇரண்டாவதுஇன்னிங் ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்தி ரேலிய அணி 309 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

அவுஸ்திரேலிய, இங்கிலாந்து அணிகள் மோதும் வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடர் அவுஸ்திரேலியாவில் நடை பெறு கின்றது.

5 போட்டிகள் கொண்ட இத்தொ டரின் முதலாவது போட்டி வெற்றி தோல்வியின்றி முடிபடைந்த நிலை யில் இரண்டாவது போட்டி யில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன் னிலை பெற்றது. இந்நிலையில் மூன்றாவது டெஸ்ட் கடந்த 16ம் திகதி பேர்த்தில் ஆரம்பமானது.

இப்போட்டியில் நாணயச் சுழற் சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணித்தலைவர் ஸ்ரொஸ்முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 268 ஓட்டங்களைஎடுத்தது. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 187 ஓட்டங்களை எடுத்தது.

இதில் இயன்பெல் 53 ஓட்டங்க ளையும் அணித்தலைவர் ஸ்ரொஸ் 52 ஓட்டங்களையும் குக் 32 ஓட்டங் களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் மிச்சல் ஜோன்சன் 6 விக்கெட்டுக்களையும் ஹரிஸ் 3 விக்கெட்டுக்களையும் சிடில் ஒரு விக் கெட்டையும் வீழ்த்தினர். இந்நி லையில் முதலாவது இன்னிங்ஸில் 81 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன் னிலை வகித்த அவுஸ்திரேலிய அணி இரண்டாவது இன்னிங்ஸில் துடுப் பெடுத்தாடி சகல விக்கெட்டுக் களையுமிழந்து 309 ஓட்டங்களை எடுத்தது.

இதில் மைக்கல் ஹசி 172 பந்து களில் (15 பவுண்டரிகள் உட்பட) 116 ஓட்டங்களையும் ஷேன் வோட்ஷன் 174 பந்துகளில் (11 பவுண்டரிகள் உட்பட) 95 ஓட்டங்களையும் சிமித் 36 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்து வீச்சில் திரேம்லெற் 5 விக் கெட்டுக்களையும் பின் 2 விக் கெட் டுக்களையும் அண்டர்ஷன், கொலின் வூட் ஆகியோர் தலா ஒரு விக்கெட் டையும் சாய்த்தனர்.

இதன் மூலம் 391 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக் குடன் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் 81 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்களை இழந் தது.

இதில் ஹரிஸ், ஜோன்ஸன் ஆகி யோர் தலா 2 விக்கெட்டுக்களை யும் ஹில்பென் ஹயூஸ் ஒரு விக்கெட் டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும். இதில் இங்கி லாந்து அணி வெற்றி பெறுவதற்கு 5 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் 310 ஓட்டங்களை எடுக்க வேண்டிய கட்டாயத்திலுள்ளது.

எனவே இன்றைய ஆட்டம் விறு விறுப்பாக அமையும் என்பதில் ஐயமில்லை.



# ஐ.நா. நிபுணர் குழு...

ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழு கற்றுக் கொண்ட பாடங்கள் ஆணைக்குழுவைச் சந்திக்க இலங் கை வருவதற்கான இலங்கையின் விருப்பத்தை ஐக்கிய நாடுகள் சபைக்குத் தெரிவித்திருப்பதாக இலங்கை வெளிவிவகார அமைச் சுத் தெரிவித்துள்ளது.

எனினும் நிபுணர்கள் குழு கற் றுக் கொண்ட பாடங்கள் ஆணைக் குழுவில் தமது கருத்துக்களை முன் வைப்பதற்கு மாத்திரமே இந்த அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி ஐக்கிய நாடுகள் சபை யின் நிபுணர்கள் குழு இலங்கை வந்து கற்றுக் கொண்ட பாடங்கள் ஆணைக்குழுவைச் சந்தித்துத் தமது கருத்துக்களை மாத்திரமே முன் வைக்க முடியும். மாறாக மனித உரி மைகள் தொடர்பில் அல்லது ஆணைக் குழு தொடர்பில் உள் நாட்டில் கருத்துக்கள் வெளியிடவோ, ஆணைக் குழுவிடம் இருந்து மனித உரிமை கள் மற்றும் யுத்தக் குற்றச் சாட்டுக்கள் தொடர்பிலான ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள வோ முடியாது என வெளிவி வகார அமைச்சு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. இதேவேளை கொழும் புக்கு விஜயம்செய்துஉண்மையைக் கண்டறியும் நல்லிணக்க ஆணைக் குழுவினை சந்திக்கக் கூடிய சந்தர்ப் பம் தற்போது ஏற்பட்டுள்ளது என ஐக்கிய நாடுகள் சபையின் செயலா ளர் நாயகம் பான் கீ மூன் தெரிவித் ததை அடுத்தே கொழும்பு அரசியலில் பெரும் சர்ச் சை கிளம்பியுள்ளது.

நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத் தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது இலங்கை ஜனாதிபதியால்நியமிக்கப் பட்ட உண்மைகளைக் கண்டறிவதற் கான நல்லிணக்க ஆணைக்குழு தொடர் பான அறிக்கை பொது மக்களுக்கு வெளியிடப்படுமா? அத்துடன் ஜனாதிபதியால் நியமிக் கப்பட்ட ஆணைக் குழு ஒரு சில தொகை மக்களிடம் மாத்திரமே விசாரணைகளை நடத்தியுள்ளது. அதன்நிலைகுறித்துஉங்கள் கருத்து என்ன? என ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதில ளிக்கும் போதே பான் கீ மூன் இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் அங்கு அவர் பதிலளிக்கையில் தெரி வித்துள்ளதாவது,

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக் கும் எனக்கும் இடையில் நடைபெற்ற நீண்ட கலந்துரையாடலுக்குபின் தற்போது ஐக்கியநாடுகள் சபையின் நிபுணர் குழு இலங்கைக்குச் சென்று உண்மைகளைக் கண்டறிவதற் கான நல்லிணக்க ஆணைக்குழு வினைச் சந்திக்கக்கூடிய சந்தர்ப் பம் தற்போது ஏற்பட்டுள்ளது. இந் நிபுணர் குழுவானது நல்லிணக்க ஆணைக்குழுவின் சகல ஒத்துழைப் புடன் தங்கள் நடவடிக்கையினை வெற்றிகரமாக விரைவில்முன்னெடுக் கும் என நான் நம்புகின்றேன். இதற்கு ஏதுவாக அமைந்த எனக் கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வுக்கும் இடையில் நடைபெற்ற நீண்டநேர கலந்துரையாடலில் ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷவின் பங்கு குறித்து நான் பாராட்டுகிறேன் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை ஐக்கியநாடுகள் சபையின் நிபுணர்குழு இலங்கை வந்து உண்மைகளைக் கண்டறிவ தற்கான நல்லிணக்க ஆணைக் குழுவை சந்திப்பது குறித்து ஐக்கிய நாடுகள் சபை உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுத்தால் அதனை ஆராய்ந்து பார்க்கத் தயாராக இருப்பதாக வெளிவிவகார அமைச் சின் ஊடகப் பேச்சாளர் பந்துல ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் மீறப்பட்டுள்ள தாகக் கூறப்படும் மனித உரிமை கள் குறித்து ஆராய்வதற்கென ஐக் கியநாடுகள் சபையின் நிபுணர்குழு இலங்கைக்கு வரவுள்ளதாக வெளி யாகியுள்ள தகவல் தொடர்பில் ஊட கங்கள் பந்துல ஜயசேகரவிடம் வின வியபோதே அவர் இவ்வாறு தெரி வித்தார். (ச-5,7)

# மக்கள் முன்வைத்த சாட்சி...

கோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது,

ஐக்கிய நாடுகள் சபையால் நிய மிக்கப்பட்ட இக்குழுவானது இலங் கை தொடர்பான விசாரணைகளை மேற்கொள்ளக் கூடிய குழு இல்லை. ஐ.நா.வுக்கான ஆலோசனை வழங் குவதே இக்குழுவின் நோக்கமாகும்.

இவ்வாலோசனைக் குழுவினை ஐக்கிய நாடுகள் சபைநியமித்த போது ஆரம்பத்தில் இலங்கைக்குள் வர அனுமதிக்க மாட்டோம் என்று இலங் கை அரசு அறிவித்திருந்தது. இதே வேளை இக்குழுவொன்று தேவை யில்லை என்று தெரிவித்த அமைச் சர் விமல் வீரவன்ச உண்ணாவிர தம், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் எனப் பல்வேறு வடிவங்களில் நாடக அரங்கேற்றம் செய்துள்ளார்.

ஆனால் ஜனாதிபதி ஐ.நா நிபு ணர் குழுவினரை இலங்கைவர அனுமதித்தமையானது விமல் வீர வன்சவின் செயற்பாடுகளுக்கு சேறு பூசும் நடவடிக்கையாகவே அமைந் துள்ளது.

இதனை விட சர்வதேச ரீதியில் அரசாங்கம் மீது சுமத்தப்படுகின்ற குற்றச்சாட்டுகளை மறுத்துவரும் நிலையில் ஐக்கியநாடுகள் சபை விசாரணைக்குழுவை இலங்கைக் குள் அனுமதிக்க தயக்கம் காட்டுவ தேன்? என்ற கேள்விகள் பலரா லும் முன்வைக்கப்படுகின்ற நிலை யில் இக் கேள்விகளுக்கு மாற்றீடா கவே தற்போது ஐ.நா நிபுணர் குழு நிபந்தனைகளுடன் அனுமதிக்கப் பட்டுள்ளது.

நல்லிணக்க ஆணைக்குழுவி டம் தமிழ் மக்கள் சாட்சிகளாக முன் வைத்த சொல்லணாத் துன்பங்க ளை ஐ.நா விசாரணைக்குழுவிடம் முன்வைத்தால்? என்ற மனப் பூரிப் பும் அதிகளவான மக்களிடம் காணப் படுகின்றது.

இவ்வாறான நிலையில் ஐ.நா நிபுணர் குழுவானது தமது முதற்கட்ட நடவடிக்கைகளையே தமிழ் மக்க ளின் துயர் துடைப்பாக வெளிக் கொ ணர வேண்டும் என்பதே அனைவரி னதும் விருப்பமாகும் என்றார். (ச-7)


## வீடு வாடகைக்கு

யாழ்.நகர மத்தியில் 07 இணைந்த குளியலறை யுடன் கூடிய 12 அறைகள் கொண்ட வாகனத் தரிப் பிட வசதி கொண்ட 05 பரப்புக் காணியில் அமைந் துள்ள மாடிவீடு நீண்டகாலத்திற்கு வாடகைக்கு உண்டு.

அரசசார்பற்ற நிறுவனங்கள்/ தனியார்துறையி னருக்கு ஏற்றது.

தொடர்புகளுக்கு:- 0773101717

(3265)

## STUDY MBBS | STUDY IN INDIA

2011 ஆண்டிற்கான நுழைவுகள் ஆங்கில மொழியில்



RECOGNIZED BY: Sri Lanka Medical Council, Europian Medical Association, Medical Council of India, GMC-UK, ECFMG-USA & WHO

EUROPE - Georgia
Tbilisi State Medical University
கட்டணம் US$2500 ஒரு வருடத்திற்கு

NEPAL
Nepalgunj Medical College
கட்மண்டு பல்கலைகழகத்துடன் இணைப்பெற்றது
கட்டணம் US$10,000 ஒரு வருடத்திற்கு

ACHARYA INSTITUTES
Ranked # 1 in Bangalore
பெங்களூர் பல்கலைக்கழகம், ராஜீவ் காந்தி பல்கலைக்கழகம் மற்றும் VTUயுடன் இணைப்பட்டது

Programs After A/L's
- B.Sc. - Biotechnology/Microbiology/Genetics
- B.B.M. - Bachelor of Business Management
- B.C.A. - Bachelor of Computer Application
- B.Com - Bachelor of Commerce
- Bachelor of Engineering
  - B.E. - Computer Science
  - B.E. - Electronics & Communication
  - B.E. - Information Science
  - B.E. - Electrical & Electronics
  - B.E. - Mechanical Engineering
  - B.E. - Civil Engineering
- B.A. - Journalism/Marketing/Psychology/English
- B.Sc. - Fashion & Apparel Design
- B.Pharma - Bachelor of Pharmacy
- B.Sc. - Nursing
- B.Sc. - Medical Lab Technology
- B.P.T. - Bachelor of Physiotherapy

Programs After O/L's
- Diploma in Engineering
- Pre-University (A/L)

ICAM கல்வி நிறுவனம்

யாழ்ப்பாணம் காரியாலயம்:
திரு. T.பிரதாப், ASTRO EDUCATIONAL CONSULTANTS,
இமயானன் வடக்கு, உடுப்பிட்டி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 0773-535590

கொழும்பு காரியாலயம்: 296/20A, சாந்தி மாவத்தை, ஹைலெவல் வீதி, கொழும்பு 6. 011-2815577 / 0773-022177

25 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள் காத்திருக்கின்றன

(சி-1846)

## வேலை வாய்ப்பு

கனடாவைத் தலைமையகமாகக் கொண்டு 120 நாடுகளில் வலைய மைப்பைக் கொண்ட சர்வதேச நிறு வனத்தில் பல வேலைவாய்ப்புக்கள். 6 மாத கால முகாமைத்துவப் பயிற்சி யின் பின் நிரந்தர வேலைவாய்ப்பு. கிளி., முல்லைத்தீவு மாவட்டத்தின ருக்கு முன்னுரிமை வழங்கப்படும். தங்குமிட வசதியும் உண்டு.
தொடர்பு:- 021 4900001, 021 4900350

(3267)

## பிரத்தியேக வகுப்பு

கடந்த கால பரீட்சை வினாக் களுடனான 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில், தரம் 6 தொட க்கம் 12 வரையான உயர்தர கணக்கீடு வகுப்புக்கள் பிரபல ஆசிரியரால் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.

தொடர்புகளுக்கு:- 0776992709

(சி-1849)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இனவாத கருத்தை வெளியிட்டு....

னர் எல்லாவல மேதானந்த தேரரின் கருத்துகளுக்கு தமிழ் அரசியல் கட்சிகள் கடும்கண்டனம்தெரிவித்துள்ளன.

இலங்கையின் வடமுனை முதல் தென் கரை வரை ஆட்சி புரிந்தவர்கள்சிங்களவர்கள்தான் என கொழும்பு லக்ஸ்மன் கதிர்காமர் சர்வதேச கற்கை நெறிக்கான நிலையத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற உண்மைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் சாட்சியம் அளித்தபோது எல்லாவல மேத்தானந்த தேரர் தெரிவித்திருந்தார்.

வடக்கும், கிழக்கும் தமிழர்களின் தாயகம், தமிழ்த் தேசியம் என்று எவரும் உரிமை கொண்டாட முடியாது. அதற்கான ஆதாரங்களும் இல்லை. எந்தப் பிரதேசத்தையும் ஆளும் ஆட்சி அதிகாரம் தமிழர்களுக்குக் கிடையாது.

முழுநாட்டையும் ஆண்டவர்கள் சிங்களவர்கள்தான்.அதற்கான ஆதாரங்களும்,சரித்திரச் சான்றுகளும் நிறையவே உண்டு. வடமுனை முதல் தென்கரை வரை ஆட்சி புரிந்தவர்கள் சிங்களவர்கள் தான் என்பதை உறுதிப்படுத்தும் கல்வெட்டுக்களும் உண்டு. இவ்வாறு உரிமைகளைக் கண்டறிவதற்கான நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்சாட்சி யம் அளித்த போது அவர் கூறியிருந்தார்.

இந் நிலையில் தமிழ் மக்களுக்கு இந்த நாடு உரிமையானது என்பதை நிரூபிப்பதற்கு தேவையான சான்றாதாரங்கள் உள்ளதால் சிங்கள இனத்தைச் சார்ந்த இனவாத நோக்கம் கொண்ட சிலர் தமிழர் பற்றியோ அல்லது தமிழர் தாயகம் பற்றியோ பேசுவதற்கு அருகதையற்றவர்கள்.


ஜாதிக ஹெல உறுமய ,தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் மற்றும் தேசிய சுதந்திர முன்னணி உள்ளிட்ட இனவாதக் கட்சிகளின் தற்கால நிலைப்பாடுகள் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கானதல்ல. மாறாக தமிழர்களை இல்லாதொழிக்கின்ற தீய எண்ணங்களையே கொண்டிருக்கின்றன என தமிழ்க் கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

அத்துடன் இத்தகைய இனவாதக் கருத்துக்களை வெளியிட்டு தமிழ் மக்களை மீண்டும் ஒரு போராட்டத்திற்குள் தள்ளிவிட வேண்டாம் என்று திடமாகக் கூறிவைக்க விரும்புவதாகவும் அக்கட்சிகள் எச்சரித்துள்ளன.

ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லாவல மேதானந்த தேரரின் சாட்சியம் தொடர்பில் கருத்து வெளியிடும் போதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ,தமிழ்த் தேசிய விடுதலைக் கூட்டமைப்பு, ஜனநாயக மக்கள் முன்னணி மற்றும் புளொட் ஆகிய தமிழ்க் கட்சிகள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளன. (ச-5)

# மரண அறிவித்தல்

## மயில்வாகனம் சுந்தரலிங்கம் [சுந்தா]



(கிராம அலுவலர் J/66, J/67 - யாழ்ப்பாணம், முன்னாள் யாழ். மாநகர சபை உறுப்பினர் மற்றும் தலைவர் - வடக்கு கிழக்கு கிராம உத்தியோகத்தர் சங்கம் யாழ்.மாவட்டம்)

இணுவிலைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் சுந்தரலிங்கம் (கிராம அலுவலர்) அவர்கள் 14.12.2010 செவ்வாய்க் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம் - நாகரத்தினம் தம்பதியினரின் மகனும் காலஞ்சென்ற செல்வரத்தினம் மற்றும் பத்மாதேவி (கனடா) தம்பதியினரின் மருமகனும், லலிதா(செல்வி)வின் பாசமிகு கணவரும், சிந்துஜன் (இணைமருத்துவ விஞ்ஞானம் 2ம் வருடம், யாழ் பல்கலைக்கழகம்), யதுர்சன், நிருஜன் (2ம் வருட வர்த்தக முகாமைத்துவ பீடம் கிழக்கு பல்கலைக்கழகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மகேந்திரராஜா (சுவிஸ்), தனபாலசிங்கம்(அவுஸ்திரேலியா), திலகவதி (கனடா), காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் யோகேஸ்வரன் (அவுஸ்திரேலியா), பத்மாவதி (மணி), காலஞ்சென்ற தவராசா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் இன்று 19.12.2010 ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு தகனக்கிரியைக்காக கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

94, ஈச்சமோட்டை வீதி, யாழ்ப்பாணம்.
(021 222 7075)

தகவல்
குடும்பத்தினர்.

(326)

# ஐ.நாவின் நிபுணர்...

மற்றும் மனித மனித உரிமை மீறல்கள் தொடர்பில் விசாரணை நடத்தும் நோக்கில் நிபுணர்கள் குழு இலங்கைக்குள் விஜயம் செய்தால் அதற்கு சந்தர்ப்பம் அளிக்கக் கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் மூவர் அடங்கிய நிபுணர்கள் குழு எந்த வகையிலும் இலங்கைக்குள் பிரவேசிப்பதனை அனுமதிக்க முடியாது.

குறித்த நிபுணர்கள் குழுவின் வருகைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஒட்டு மொத்த நாட்டு மக்களும் அணிதிரண்டு எதிர்ப்பை வெளிப்படுத்த வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

பான் கீ மூனினால் நியமிக்கப்பட்ட ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழு கலைக்கப்பட வேண்டுமென வலியுறுத்தி அமைச்சர் விமல் வீரவன்ச சாகும் வரையில் உண்ணாவிரதப் போராட்டமொன்றை நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தலையீட்டில் இந்த உண்ணாவிரதப் போராட்டம் கைவிடப்பட்டது.(ச-5,7)


## நியூ சிற்றி றேடேர்ஸ் மலிவு விற்பனை

31.12.2010 வரை

சகல விதமான றேடியோக்களையும் கசற் றெக்கோடர்களையும் கார் றேடியோக்களையும் ,டிஸ் ரிவிகளையும் 14",21 "கலர் ரிவிகளையும் கிரைண்டர்களையும் ரைஸ் குக்கர்களையும் சார்ச் லைற்களையும் அயன் பெட்டிகளையும் கொட் பிளேட்களையும் ,சப்பிளைசர்களையும் அம்பிளி பயர்களையும் வவல்ஸ்களையும்;பூவர்களையும் மலிவு விலையில் பெற்றுக்கொள்ளவும் மேற்குறிப்பிட்ட பொருட்களை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்.

நியூ சிற்றி றேடேர்ஸ்
319 A, K.K.S. றோட் ,யாழ்ப்பாணம்.
T.P.: 0212223226

(1842)



வாருங்கள் ...

இலவசம்!!!

# விடுதலைப் பெருவிழா

கவலை, கண்ணீர், தீராத வியாதி,
பிசாசின்பிடி, பில்லி-சூனியக்கட்டு,
பரம்பரை சாபங்கள் ஆகியவற்றிலிருந்து

## இயேசு விடுதலை கொடுக்கிறார்....

இடம்: நூற்சதுர வளாகம், பருத்தித்துறை வீதி,
முத்திரைச்சந்தி, நல்லூர்

காலம்: மார்கழி 20ம், 21ம், 22ம் திகதிகளில்
நேரம்: தினமும் மாலை 4 மணி

"வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள்: நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" (மத்.11:28)

இலங்கை நூற்சதுர சுவிசேஷ சபை, 673 பருத்தித்துறை வீதி, நல்லூர்.

கடந்த விடுதலைப் பெருவிழா நாட்களில்
அனேக மக்கள் அற்புத விடுதலையைப் பெற்றார்கள்


# நானும்...

முன்தினம் நடைபெற்ற வைபவத்தில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.விமானத்தில் செல்ல முடியாது. விரும்பிய உணவை உண்ண முடியாது.உணவை முதலில் எவரேனும் உண்டுபார்த்த பின்னரே நான் உண்ண வேண்டியுள்ளது.

இங்கிலாந்திற்குச் சென்றால் பிடியாணை பிறப்பிக்க முயற்சிக்கின்றனர்.இவ்வாறான சூழ்நிலையிலேயே தான் வாழ்ந்துவருவதாகவும் பலருக்கு இது குறித்து புரிந்துணர்வு இல்லை எனவும் ஜனாதிபதி கூறியுள்ளார். (ச-5)

# இரவில்...

உங்களுக்கு உள்ளது. வீட்டை பூட்டிவிட்டு செல்லும்போது அயலவர்களை கண் காணிக்குமாறு கூறிச்செல்லுங்கள்.எந்த சந்தர்ப்பத்திலும் வீட்டுத் திறப்பை ஒளித்துவைத்துவிட்டு செல்ல வேண்டாம். உங்களோடு எடுத்து செல்லுங்கள்.பெறுமதி வாய்ந்த நகைகளை வங்கியில் பாதுகாப்பாக வையுங்கள். வெளியே செல்லும்போது கவரிங்நகைகளை அணிந்து செல்லுங்கள்.

உங்களின் இளம் பிள்ளைகளை தனியாக வெளியே செல்ல அனுமதிக்காதீர்கள். குழுவாக செல்லுமாறு ஆலோசனை தெரிவியுங்கள்.பகலிலும் இரவிலும் வீட்டு கதவுகளை எந்த நேரத்திலும் மூடிவையுங்கள். குறிப்பாக இரவில் படுக்கைக்கு செல்லமுன் கதவுகள் யன்னல்கள் நன்றாக மூடப்பட்டுள்ளதா என்பதினை அவதானியுங்கள்.

வீட்டுக்கு வெளியே இரவில் ஒரு மின்குமிழை எரியவிடுங்கள்.உங்களுடைய பாதுகாப்பு நிமித்தம் குறித்த ஆலோசனைகளை பின்பற்றுமாறு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கேட்டுள்ளார்.

குற்றச்செயல்களை கட்டுப்படுத்தி மக்களுக்கு சமாதானமான வாழ்வை ஏற்படுத்தவே பொலிஸாராகிய நாம் கடுமையாக உழைக்கின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org